பெப்ரவரி முதலாம் திகதிவரை

# திட்டமிட்ட மின்வெட்டு இல்லை

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 440 பிலவ வருடம், தை மாதம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (28.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 24, 0115886187 - பக்கங்கள் 16 விலை ரூ.30

# அரச அதிகாரிகளின் வேலைநிறுத்த முன்னெடுப்பை தடை செய்க!



அரசியலமைப்பினூடாக மேற்கொள்ள நீதியமைச்சர் சுட்டிக்காட்டு

02 பக்கம்

## அரசை நெருக்கடியிலிருந்து மீட்க யோசனை சொல்லும் பங்காளிகள்



நாடு எதிர்கொண்டுள்ள பாரிய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு உதவுவதற்காக அரசுக்கு பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க அரசாங்கத்துடன் இணைந்துள்ள பத்து கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்



நாட்டுக்கும் மக்களுக்கும் நலன் வேண்டி, பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜய பிரித் பாராயண நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

## போலி ஆவணங்களை உருவாக்கி புலிகளை உயிர்ப்பிக்க முயற்சி!

### இந்திய தேசிய புலனாய்வு ஏஜென்சி தெரிவிப்பு

போலி இந்திய ஆவணங்களை உருவாக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சிகள் நடைபெறுவதாக இந்திய தேசிய புலனாய்வு ஏஜென்சி (என்.ஐ.ஏ) தெரிவித்துள்ளது.

02 பக்கம்






இந்தியாவின் 73 ஆவது குடியரசு தினத்தையொட்டி கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடையத் தயாராகும் அரசு!

## ஆலோசனை நடப்பதாக நிதியமைச்சர் பெசில் சூசகம்



இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பது குறித்து அரசாங்கம் கலந்துரையாடல்களை நடத்திவரும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) ஒப்பந்தம் செய்வது குறித்து அரசு ஆலோசித்து வருவதாக நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

லண்டன் பைனான்சியல் ரைம்ஸிடம் கருத்துவெளியிட்ட அவர் மேலும் கூறுகையில், இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கும் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கும் இலங்கை அனைத்து வழிகளையும் பார்த்துக்கொண்டிருக்கிறது.

எங்களிடம் நாங்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய சர்வதேச பிணைமுறிப் பத்திரங்கள் உள்ளன. எனவே, நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். எங்களுக்கு கடன் வழங்குபவர்கள் உள்ளனர். முதலில் அவர்களின் கடனை நாங்கள் மீள் செலுத்தவேண்டும். எனவே, நாங்கள் சில வகையான விடயங்களைச் செய்யமுடியுமா என்பது பற்றி ஆராய்ந்து வருகிறோம். சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு திட்டத்தைப் பற்றி பேசுவதற்கும் அரசாங்கம் சிந்திக்கிறது. அதற்கான பேச்சுகள் அனைத்தும் அப்படியே...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



இந்திய நிகழ்ச்சியில சம்பந்தரும் டக்கியரும் பிரிஞ்சு உட்கார்ந்திருந்தாதான் அது செய்தி பாருங்கோ...

## காலியிலும் துறைமுக நகரம் ஒன்றை அமைக்கத் தீர்மானம்



02 பக்கம்



## உஷ்

எரிபொருள் இறக்குமதிக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடனை இன்னும் சில தினங்களில் இலங்கை பெற்றுக்கொள்ளும். மேலும், தற்போது கடும் நெருக்கடியாக மாறிவரும் மின் நெருக்கடிக்கு தீர்வு காண இந்தியாவிடம் இருந்து நேரடியாக மின்சாரத்தை பெறுவது குறித்தும் இலங்கை ஆலோசித்து வருகிறது.

## நாடாளுமன்ற அமர்வுகள் பெப்ரவரி 8 முதல் 11ஆம் திகதிவரையென அறிவிப்பு

- ★ விசேட பண்டங்கள் மற்றும் சேவை வரிகள் சட்டமூல இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் 10ஆம் திகதி
- ★ 11ஆம் திகதி மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மீதான அனுதாபப் பிரேரணை முழுநாளும்



நாடாளுமன்றம் எதிர்வரும் பெப்ரவரி 08ஆம் திகதி முதல் 11ஆம் திகதிவரை கூடவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய பெப்ரவரி 08ஆம் திகதிமுதல் 10ஆம் திகதிவரை தினமும் முற்பகல் 10 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்



## இலங்கை இராணுவத்திற்கு எதிரான தடைகள்; சாத்தியம் குறித்து பிரிட்டன் சுட்டிக்காட்டு

இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான தடைகள் குறித்து ஆலோசிக்கப்படுவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அமைச்சர் அமன்டா மில்லிங் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான விடயங்களில் பிரிட்டன், அமெரிக்கா உட்பட ஏனைய சகாக்களுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# மாகாண சபைத் தேர்தலை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்



### தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சிஹேவா தெரிவிப்பு

•ரவ்பீக் பாயிஸ்

"மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் மாகாண சபைகள் இயங்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. தற்போதுள்ள நிலையில் மாகாண சபைத் தேர்தல் இடம்பெற வேண்டுமாயின் அதற்கான முடிவு நாடாளுமன்றத்திடம் இருக்கிறது. நாடாளுமன்றத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமாக இருந்தால், உடனடியாக தேர்தலை நடத்தத் தயாராகவுள்ளோம்" என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜீ புஞ்சிஹேவா தெரிவித்தார்.

02 பக்கம்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள்; பொறுப்புக்கூறலில் கணிசமான முன்னேற்றம்

### அரசின் செயற்பாடுகள் தொடர்பில் வெளிநாட்டமைச்சர் பீரிஸ் கொழும்பில் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்



இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்பில், புதிய ஆண்டின் முதலாவது இராஜதந்திர மாநாட்டின்போது, வெளிநாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இராஜதந்திரிகளுக்கு வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் விளக்கியதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போதைய முன்னேற்றங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட வழக்கமான விளக்கங்களின் தொடர்ச்சியாக, முழு இராஜதந்திர சமூகத்தையும் சந்திப்பதற்கான வாய்ப்பை வெளிநாட்டு அமைச்சர் பாராட்டினார்.

02 பக்கம்

## அரச அதிகாரிகளின்...

(யோ.தர்மராஜ்)

பொருளாதார மையங்களைச் சேர்ந்த அரச நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகளின் வேலைநிறுத் தத்தை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை அரசியலமைப்பினால் தடைசெய்ய வேண்டும் என நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

வானொலி அலைவரிசை ஒன்றுடனான நேர்காணலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சில தொழிற்சங்கங்கள் சிறு சம்பவத்திற்காக கூட வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதால் மக்களுக்கும் பொருளாதாரத்துக்கும் பாரிய பாதிப்பு ஏற்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இவ்வாறான பணிப்புறக்கணிப்புகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதியும் தலையிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காலியிலும் துறைமுக...

கொழும்புத் துறைமுக நகருக்கு நிகரான சுற்றுலா வலயமொன்றை காலி துறைமுகத்தை அண்மித்த பகுதியில் அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் (26) பிற்பகல் இடம்பெற்ற நிகழ்ச்சியின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காலி துறைமுகத்தின் அபிவிருத்தியுடன், பயணிகள் கப்பல்களுக்கான புதிய பயணிகள் முனையம் மற்றும் 40 ஹெக்டேயர் நிலப்பரப்பு கடல் நீரால் நிரப்பப்பட்டு புதிய நில சுற்றுலா வலயத்தை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது என்றார். இதன்மூலம், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீருக்கடியில் ஓய்வு விடுதிகள், நீர் விளையாட்டு பகுதிகள் மற்றும் ஹோட்டல்களை கட்டுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்று அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

## பெப்ரவரி முதலாம் திகதிவரை...

பெப்ரவரி முதலாம் திகதி வரை திட்டமிடப்பட்ட மின் தடைகள் எதுவும் இருக்காது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவரான ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

பெப்ரவரி 1ஆம் திகதிக்குப் பின்னர் மின் வெட்டு அமுல்படுத்துவது தொடர்பில் பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாளாந்த மின்வெட்டை அமுல்படுத்துமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கையை பரிசீலிப்பதற்காக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று கூடியது.

மூன்று அனுமானங்களின் அடிப்படையில் இரண்டு முதல் ஒன்பது மணித்தியாலங்களுக்கு இடைப்பட்ட நாளாந்த மின்வெட்டுகளை விதிக்க ஆணைக்குழுவிடம் இலங்கை மின்சார சபை அனுமதி கோரியிருந்தது.

தற்போதுள்ள எரிபொருள் இருப்பு மற்றும் அவற்றை மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கக்கூடிய திகதிகள் பற்றிய தகவல்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறப்பட்டதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இலங்கை இராணுவத்திற்கு...

பிரிட்டனின் சர்வதேச மனித உரிமை தடைகளின்கீழ் வரக்கூடிய அனைத்து ஆதாரங்கள் மற்றும் சாத்தியமான தடைகள் குறித்தும் பிரிட்டன் அரசாங்கம் உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றது என தெரிவித்துள்ள அவர், எதிர்கால தடைகள் குறித்து பொதுவாக நாங்கள் ஊகங்களை வெளியிடுவதில்லை அவ்வாறு செய்வது அவற்றின் தாக்கத்தை குறைக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவை பின்பற்றி இலங்கையின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராக யுத்தக்குற்ற தடைகளை விதிப்பதற்கு பிரிட்டனிற்கு மேலும் என்ன ஆதாரங்கள் வேண்டும் என தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மக்டொனாக் கேள்வி எழுப்பியவேளையே அமன்டா மில்லிங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜெனீவாவில் இலங்கை தொடர்பான முதன்மைக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் பிரிட்டன் மனித உரிமை ஆணையகத்தின் அடுத்த அமர்விற்கு முன்னதாக மேலும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு பிரிட்டன் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

## அரசை நெருக்கடியிலிருந்து...

இது தொடர்பான தீர்மானம் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் அதனை பகிரங்கப்படுத்த கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் உண்மை நிலையை மறைக்காமல் மக்களுக்கு உணர்த்த வேண்டும் எனவும் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

இச்சந்திப்பில் அத்துரலிய ரத்தன தேரர், விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, வீரசுமன வீரசிங்க, டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி ஜி.வீரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சர்வதேச நாணய...

நடந்து கொண்டிருக்கின்றன என்றும் குறிப்பிட்டார் பெசில்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் எடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று அரசாங்கம் சமீபத்தில் கூறியிருந்தது. அதேசமயம் அமைச்சரவையின் பெரும்பாலான உறுப்பினர்கள் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவி பெறுவதை ஆதரிக்கவில்லை. நிதியுதவிக்காக சர்வதேச நாணய நிதியம் முன்மொழியும் என எதிர்பார்க்கப்படும் முன்நிபந்தனைகளுக்கு அமைச்சரவையில் பெரும்பான்மையானோர் எதிராக உள்ளனர்.

இந்தப் பின்னணியில், சில முன்நிபந்தனைகள் கொண்ட கடனை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற அரசு ஆலோசித்து வருவதாக தெரிகிறது.

# 13ஆவது திருத்தத்திற்கு எதிராக 30ஆம் திகதி பாரிய பேரணி

## நல்லூரில் நடத்தவுள்ளதாக கஜேந்திரகுமார் எம்.பி. அறிவிப்பு

(யாழ். நிருபர்)

மக்களுக்கு பலரின் போலி முகங்களை காட்டுவதற்காக, மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தம் எவ்வளவு ஆபத்தானது என்பதை மக்களுக்கு காண்பிப்பதற்காக நாளை மறுதினம் 30ஆம் திகதி பாரிய பேரணி ஒன்றை நல்லூரில் நடத்துகின்றோம்.

அதனை தடுத்து நிறுத்துவதற்கு பல சதிகள் நடைபெறுகின்றன. ஆனாலும் திட்டமிட்டபடி பேரணி நடைபெறும்.

மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று, அதனை 13ஆவது திருத்தத்துக்குள் முடக்குவதற்கு எத்தனிக்கும் தரப்புக்கு தான் இப்போது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது எமது பேரணி.

நாங்கள் அதில் வெற்றி பெற்று இந்திய முகவர்கள் தமிழ் மக்களுக்கு செய்யவிருந்த கெடுதலை அம்பலப்படுத்துவோம். அது தான் அவர்களின் பயம்.

அந்த வகையில், நாம் தேர்தலில் போட்டியிடுவோம். ஏனைய தமிழ்த் தரப்புகள் 13 ஆவது திருத்தத்தை ஆதரித்து மக்களை புதைகுழியில் தள்ளுவதற்கு முயற்சிக்கின்றனர்.

ஆனால், நாம் இந்த தேர்தலை எதிர்கொண்டு, 13ஆவது திருத்தத்தின் ஆபத்தையும் பலரின் உண்மை முகத்தையும் மக்களும் அம்பலப்படுத்துவோம்.



தமிழர்களுடைய தீர்வு விடயத்தில் தமிழர்களுக்கு என்ன தேவை என்பதை தமிழர்கள்தான் கூறமுடியும். அதனை வேறு எவரும் கூற முடியாது, திணிக்கவும் முடியாது. 13ஆவது திருத்தத்தை தீர்வாக ஒருபோதும் ஏற்க முடியாது.

நாம் அதில் தெளிவாகவுள்ளோம். 13ஆம் திருத்தத்தை தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ளவைப்பது, தமிழர்களுடைய அபிலாஷைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது, தமிழர் தேசத்தை அழிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகத்தான் நாம் அதனை பார்க்கின்றோம். நாங்கள் இதனை எதிர்ப்பதை இந்தியா தமக்கு எதிராக பார்க்கிறது என்றால் அது இந்தியாவின் முடிவு.

ஆனால், எங்கள் மக்களுடைய நலன்கள் எவருக்கும் நாங்கள் பேரம்பேசி கைவிடத் தயாரில்லை. தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்காக நேர்மையாக செயற்படுகின்ற எந்த நாட்டுடனும் நாங்கள் பயணிக்க மாட்டோம் எனக் கூறவில்லை. மாறாக, அனைவரையும் கேட்டுக்கொள்வது தமிழர்களுடைய அடிப்படை அபிலாஷைகள். குறிப்பாக திம்பு கோட்பாடுகளில் கூறப்பட்ட அடிப்படை அபிலாஷைகள் முழுமையாக பூர்த்தி செய்யக்கூடிய வகையிலே அவர்களுடைய ஆதரவை எமக்கு தரவேண்டும் என்ற அடிப்படையில்தான் நாம் கோரிவருகின்றோம்.

இதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக நாம் அனைவருக்குமே எங்களுடைய தீர்வு யோசனைகளை வழங்கியிருக்கிறோம். மக்கள் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசம், அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசத்தின் இறைமை, அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசம், தன்னுடைய சுயநிர்ணய உரிமையை முழுமையாக அங்கீகரிக்கப்படக்கூடிய சமஷ்டி தீர்வைத் தான் நாங்கள் கோரியிருக்கின்றோம். இதை நோக்கியதாக இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் அதேவேளை, சிங்கள மக்களுக்கு உண்மையை எடுத்து கூறுவதற்கு அவர்கள் தயார் என்றால் அவர்களை அரவணைத்து அவர்களுடன் பயணிப்போம். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இந்தியாவுடன் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்தியா 13ஆவது திருத்தத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக்கூறுவதில் தவறில்லை. ஏனென்றால் அது வல்லரசு. தன்னுடைய தேவைக்காக அதனை கூறுகிறது. இங்கு தமிழ் மக்களுடைய வாக்குகளை பெற்று தமிழ் மக்களுடைய நலன்களுக்காக குரல்கொடுக்காமல் இந்தியாவினுடைய எடுபிடிகளாக இருக்கக்கூடிய துரோகிகள் தான் பிரச்சினை என்றார்.

## போலி ஆவணங்களை...

கடந்த ஆண்டு மார்ச் மாதம் இலட்சத்தீவுகள் அருகே ஒரு படகை இந்திய கடலோரக் காவல் படையினர் சோதனை செய்தனர். அதில் துப்பாக்கிகள், தோட்டாக்கள், 300 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் உள்ளிட்டவைகள் கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்டது.

மேலும், படகில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் 6 பேர் கைது செய்யப்பட்டனர். இலங்கையை சேர்ந்த அவர்கள், பாகிஸ்தானில் இருந்து ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை இலங்கைக்கு கடத்திச் செல்ல முயன்றனர் எனவும் கூறப்பட்டது. இவர்கள் மீது கடந்த ஆண்டு மே மாதம் என்.ஐ.ஏ. அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் சென்னையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உளவுப்பிரிவைச் சேர்ந்த சற்குணம் என்ற சபேசனை என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்தனர். இலட்சத்தீவுகள் ஆயுத கடத்தல் சம்பவத்தில் சபேசனுக்கு மிக முக்கிய தொடர்பிருந்ததாகவும் கூறப்பட்டது. மேலும் லெட்சுமணன் மேரி பிரான்சிஸ் என்ற பெண்ணும் ஒக்டோபர் 1ஆம் திகதி தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர் தொடர்பான வழக்கையும் என்.ஐ.ஏ. விசாரித்து வருகிறது.

லெட்சுமணன் மேரி பிரான்சிஸுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கென்னிஸ்டன் பெர்னாண்டோ, கே.பாஸ்கரன், ஜோன்சன் சாமுவேல், எல்.செல்லமுத்து ஆகியோர் மீது கடந்த 18ஆம் திகதி என்.ஐ.ஏ. அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்குகள் தொடர்பாக கருத்து தெரிவித்த பெயர் வெளியிட விரும்பாத என்.ஐ.ஏ. அதிகாரி ஒருவர், போலி ஆவணங்களைத் தாக்கல் செய்து இந்திய பாஸ்போர்ட் உள்ளிட்டவற்றை இவர்கள் பெற்றுள்ளனர். போலி இந்திய ஆவணங்களை வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்கம் செய்யும் முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்கள் மூலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மும்பை ஃபோர்ட் கிளையில் பெருந்தொகையான பணத்தை பெற்றுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றார்.

## நாடாளுமன்ற...

பெப்ரவரி 08ஆம் திகதி முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை 2015ஆம் ஆண்டு 05ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகளும், மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அன்றையதினம் அரசாங்கத்தின் தினப்பணிகளின் பின்னர் ஸ்ரீசாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது வாசிப்பைத் தொடர்ந்து சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவிருப்பதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

பெப்ரவரி 09ஆம் திகதி முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 04.30 மணி வரை குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம், குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் என்பவற்றை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 10ஆம் திகதி மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) திருத்தச் சட்டமூலம், விசேட பண்டங்கள் மற்றும் சேவை வரிகள், பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம், 1969ஆம் ஆண்டு 01ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

பெப்ரவரி 08ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணிவரையான காலப் பகுதியில் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் இடம்பெறும்.

அதேநேரம், பெப்ரவரி 11ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதற்கமைய அன்றையதினம் வாய்மூல விடைக்கான கேள்வி, ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்வி, சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை என்பவற்றுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை.

## மாகாண சபைத்...

தேர்தலொன்றை முன்னெடுக்கும்போது முன்னேற்பாடாக செயற்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் வகையில், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜீ புஞ்சிஹேவாவின் தலைமையில் நேற்று (27) திருகோணமலை மாவட்ட செயலகத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாண சபைகள் தற்போது இயங்குகின்றன. மாகாண சபைகள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சு இருக்கிறது. அந்த அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. அதேபோன்று, மாகாண சபைகளுக்கென அரசாங்கத்தினால் தனியாக நிதியும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இவ்வாறான கட்டமைப்புகளின் செயற்பாடுகளினூடாகவே மாகாண சபைகளின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு இல்லாமல் அதிகாரிகளினால் இந்த மாகாணசபைகளின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகியுள்ளது. இந்த நிலைமைக்கு தேர்தல் ஆணைக்குழு இணக்கம் வெளியிடப்போவதில்லை. மக்கள் பிரதிநிதிகள் இருக்கவேண்டியதற்கு பதிலாக, அதிகாரிகள் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எங்களின் தொடர்ச்சியான கோரிக்கையாகவுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் 1988, 02 இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்தின் பின்னர் 2017, 17ஆம் இலக்க சட்டமூலமொன்று கொண்டுவரப்பட்டது. அந்த சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ள எல்லை நிர்ணயத்துக்கு இதுவரையில் அனுமதி கிடைக்கவில்லை. இதுவே, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலுள்ள சிக்கலாகும்.

இந்த சட்டம் அனுமதிப் பெற்றிருந்தாலும் அதனை அமுல்படுத்துவதற்கு தேவையான முக்கிய பிரிவுக்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. அதன் காரணமாகவே மாகாண சபைகள் தொடர்பான இந்த புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது. புதிய சட்டமூலம் அனுமதிப் பெற்றிருப்பதால் பழைய சட்டமூலத்தை அமுல்படுத்த முடியாதவொரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதுவே சட்ட ஆலோசகர்களின் நிலைப்பாடாகவும் இருக்கிறது.

இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனில், நாடாளுமன்றத்தினால் சிறிய திருத்தமொன்றை மேற்கொண்டு முடிவொன்றை அறிவிக்க வேண்டும்.

அதாவது, பழைய சட்டமூலம் அமுலாகும் வகையிலோ அல்லது புதிய சட்டம் முழுமையடையும் வரையில் பழைய சட்டமூலத்தை அமுலாக்கவேண்டும் என்ற அடிப்படையிலோ நாடாளுமன்றத்தில் புதிய திருத்தத்தை கொண்டுவர வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் எல்லை நிர்ணயத்துக்கு அனுமதியைப்பெற்று புதிய சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும். எது எவ்வாறாயினும், இதுவே ஆணைக்குழுவின் கோரிக்கை. மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால் புதிய முறையில் நடத்துவதா அல்லது பழைய முறையில் நடத்துவதா என்ற இறுதித் தீர்மானத்தை ஆணைக்குழுவால் எடுக்க முடியாது.

எது எவ்வாறாயினும், இந்த புதிய சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு நாடாளுமன்ற அனுமதியே தற்போதுள்ள கட்டாய கடப்பாடாகும். புதிய முறையோ பழைய முறையோ ஏதாவதொரு முறைக்கு நாடாளுமன்றில் அனுமதி கிடைத்தால் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேரடியாக கிடைக்கும். திருத்தங்கள் மேற்கொண்டு அதற்கு அனுமதி கிடைத்தால் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த ஆணைக்குழு தயாராக இருக்கிறது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான எஸ்.பி. திவரத்ன, கே.பி.பி. பத்திரன, மேலதிக ஆணையர் பி.பி.சி. குலரத்ன, ஆணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி இயக்குனர் சன்ன பி.டி. சில்வா, திருகோணமலை மாவட்டத்தின் உயர் பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## பயங்கரவாதத் தடைச்...

பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடருக்கு முன்னதாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முன்னேற்றம் தொடர்பான தகவல்களைப் பகிர்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் 2021 அமர்வில், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும், மனித உரிமைகள் பேரவை உட்பட ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியதை அமைச்சர் நினைவு கூர்ந்தார். இந்த சூழலில், சர்வதேச சமூகத்துடனான ஒத்துழைப்பு மற்றும் உரையாடல் சார்ந்த உணர்வுடனான ஆக்கபூர்வமான ஈடுபாட்டை அமைச்சர் குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறல், நீதி மறுசீரமைப்பு மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு உள்நாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளினூடாக இலங்கை அரசாங்கம் கணிசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்த வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், தற்போது ஏற்பட்டுள்ள உறுதியான முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளிக்குமாறு இந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதற்கிணங்க, கடந்த வருடத்தில் உள்நாட்டு நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பான விளக்கங்கள் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் தலைவி திருமதி தாரா விஜயதிலக, நிலையான அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் திருமதி சாமிந்திரி சப்பரமாது, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் தீப்தி லமாஹேவா, காணாமல் போனோர் அலுவலகத்தின் சட்டப் பிரிவின் தலைவர் தற்பரன் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆய்வு மற்றும் கண்காணிப்புக்கான பணிப்பாளர் நிஹால் சந்திரசிறி ஆகியோரினால் வழங்கப்பட்டன.

43 வருடங்களின் பின்னர் சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் திருத்தப்பட்டு வருவதாக அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார். உத்தேச திருத்தங்கள் அடங்கிய சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன் பின்னர் இறுதி அங்கீகாரத்திற்காக நாடாளுமன்றத்தில் சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட கலந்துரையாடலின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்பட்டு வருவதாக அமைச்சர் விளக்கமளித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முக்கிய திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவு, கட்டுப்பாட்டு உத்தரவு, நீதித்துறை மீளாய்வு உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல் தொடர்பான பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், நீண்ட கால தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான வழக்குகளை விரைவாகத் தீர்த்தல், சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச் செய்தல், நீதிவான்கள் மற்றும் நீதித்துறை மருத்துவ அதிகாரிகளை அணுகுவதற்கான விதிகளை வெளிப்படுத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல், தடுப்புக் காவலில் உள்ள காலத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளைத் தடுத்தல், குடும்பத்துடன் தொடர்புகொள்வதற்கான உரிமை, நீண்ட கால கைதிகளுக்கு பிணை வழங்குதல் மற்றும் வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்தல் போன்ற பிரிவுகளிலான திருத்தங்கள் உள்ளடங்கும்.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 13ஆவது பிரிவின் கீழ் ஆலோசனை சபையொன்றை ஸ்தாபிப்பதையும் அமைச்சர் குறிப்பிட்டார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவு அல்லது கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட எவருக்கும் அந்த உத்தரவை மறுபரிசீலனை செய்யக் கோருவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை அனுபவித்து வந்த 16 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியினால் மன்னிப்பு வழங்கப்பட்டதுடன், பயங்கரவாதச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டின் கீழ் நீண்டகாலமாக நீதிமன்றக் காவலில் உள்ள கைதிகளை விடுதலை செய்வதற்கான சட்ட மற்றும் நிர்வாக நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, கடந்த 13ஆம் திகதி நிலைவரப்படி மேலும் 13 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்பான வழக்கின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்தும் வெளிநாட்டு அமைச்சர் குறிப்பிட்டார். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிணை வழங்குவதை எதிர்க்கப் போவதில்லை என சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிவித்துள்ளார். தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவம் தொடர்பான ஜனாதிபதி செயலணி தொடர்பில், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களுக்கு தான் மேற்கொண்ட விஜயங்கள் மற்றும் இலங்கையின் வடமாகாணத்திற்கான தனது எதிர்வரும் விஜயம் ஆகியன நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் ஏற்கனவே முன்னெடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் குறித்து கலந்துரையாடி கருத்துகளைப் பெறுவதற்காக, அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், புத்திஜீவிகள் மற்றும் கல்வியியலாளர்கள், அடிமட்டத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்பினருடன் ஆலோசனையில் ஈடுபடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக தூதரகத் தலைவர்களுக்கு வெளிநாட்டு அமைச்சர் அறிவித்தார்.

நிலைமாறுகால நீதி, நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் ஆகிய துறைகளில் சம்பந்தப்பட்ட தேசிய நிறுவனங்கள் ஆற்றிய பணிகளை ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டி பாராட்டினார்.

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் இணைந்து செயற்படும் சர்வதேச சமூகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த எகிப்தின் தூதுவர் மகேத் மொஸ்லே, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதிலும் அதன் பின்விளைவுகளைக் கையாள்வதிலும் இலங்கை அடைந்துள்ள அற்புதமான சாதனைகளை சுட்டிக்காட்டினார்.

# இன்றைய ராசி பலன்

28.01.2022 வெள்ளிக்கிழமை தை 15

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: கேட்டை** காலை 7.10 - 29.01.2022 அதிகாலை 5.08 வரை

**யோகம்: துருவம்** அ.கா 1.05 - இரவு 9.41

**வியாகாதம்** இரவு 9.41 - 29.01.2022 மாலை 6.03 வரை

**திதி: அமர பட்ச ஏகாதசி** அ.கா 2.16 - இரவு 11.35

**அமர பட்ச துவாதசி** இரவு 11.35 - 29.01.2022 இரவு 8.37 வரை

**முற்கரணம்: பவம்** அ.கா.2.16-பி.ப.12.58

**பிற்கரணம்: பாலவம்** பி.ப. 12.58 - இரவு 11.35

**சுப நேரங்கள்**
காலை 6.29 - 7.57
மாலை 5.17 - 6.18

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்** காலை 10.55 - பி.ப. 12.24

**குளிகை காலம்** காலை 7.58 - 9.26

**எமகண்ட காலம்** மாலை 3.21 - 4.49

**துர் முகூர்த்தம்** காலை 8.51 - 9.38
பிற்பகல் 12.47 - 1.34

**லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** பிள்ளைகளின் தொழில் பற்றிய கவலை ஏற்படலாம். வாழ்க்கைத்துணையின் உடல்நலத்திலும் கவனம் தேவைப்படலாம். கோபத்தைக் கட்டுப்படுத்துவது நல்லது. பணியிடங்களில் பிரச்சினைகள் உண்டாகலாம். இறைவணக்கம் தேவை.
சந்திராஷ்டமம்: பரணி நட்சத்திரத்திற்கு அ.கா. 1.38 - இரவு 11.40 கார்த்திகை நட்சத்திரம் பாதம் 1க்கு இரவு 11.40 - 29.01.2022 அதிகாலை 5.08 வரை.

**ரிஷபம்:** பணிகளில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கலாம். உறவுகளிடமிருந்து சுப செய்திகள் கிடைக்கக்கூடும். இலாபகரமான புதிய ஒப்பந்தம் கிடைக்கலாம். ஆன்மீக செயல்களில் ஈடுபாடு உருவாகலாம். பணி முறை மாற்றம் பெறலாம்.
சந்திராஷ்டமம்: கார்த்திகை நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு 29.01.2022 அ.கா. 5.08 - இரவு 9.25 வரை. ரோகிணி நட்சத்திரம் 29.01.2022 இரவு 9.25 - 30.01.2022 இரவு 7.00, மிருகசீரிடம் நட்சத்திரம் பாதம் 1/2க்கு 30.01.2022 இரவு 7.00 - 31.01.2022 அ.கா. 5.46

**மிதுனம்:** சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உண்டாகலாம். காதல் துணையின் உறவில் அனுசரிப்பு தேவைப்படலாம். நிதி பரிவர்த்தனையில் தவறுகள் நிகழலாம். வாழ்க்கை முறையை மேம்படுத்தும் முயற்சி உண்டாகலாம்.

**கடகம்:** வணிக இலாபங்கள் அதிகரிக்கலாம். பிள்ளைகளுடன் மகிழ்வான நாளாக அமையலாம். சமூக மதிப்பு மேம்படும். மாணவர்களுக்கு கல்வியுடன் ஆராய்ச்சி பணி ஆர்வமும் ஏற்படலாம்.

**சிம்மம்:** இன்று கடன் கொடுப்பது அல்லது வாங்குவதை தவிர்ப்பது நன்மை. தொழில் பற்றிய கவலை உண்டாகலாம். செலவுகள் அதிகரிக்கலாம். சளி சம்பந்தப்பட்ட உடல்நல பிரச்சினைகளில் சிறிய கவனம் தேவைப்படலாம். இறைதியானம் நன்மை.

**கன்னி:** பத்திரிகைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு பாராட்டு கிடைக்கப் பெறலாம். தனிப்பட்ட வாழ்க்கையில் அமைதி நிலவும். உங்கள் திறமை மேம்படும். தொழிலில் புதிய முடிவுகள் எடுக்கப்படலாம்.

**துலாம்:** தேவையற்ற பிரச்சினைகளால் அவமரியாதை உண்டாகலாம். நிதி சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு நல்ல நாளாக அமையலாம். பணியிடங்களில் செல்வாக்கு மேம்படலாம். வீட்டின் வளங்களுக்கான செலவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வணிக பயணம் உருவாகலாம். வாழ்க்கைத்துணையுடன் மகிழ்வான நாளாக அமையலாம். உறவுகளிடம் உங்களுக்கு மரியாதை உண்டாகலாம். வேலை தேடுவோருக்கு நல்ல நாளாக அமையலாம். சிலருக்கு உடல்நலம் சீராகும்.

**தனுசு:** வீட்டின் திருத்த வேலைகளுக்கான செலவுகள் உண்டாகலாம். பிறருடன் பேசும் சொற்களின் கட்டுப்பாட்டில் கவனம் தேவைப்படலாம். வேலைத்தளங்களில் பணிகளில் தடை உண்டாகலாம். திறமைகளும் சோதனைக்கு உட்படுத்தப்படலாம்.

**மகரம்:** பங்குச்சந்தை இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். உறவுகளில் இருந்த பிரச்சினைகள் நீங்கலாம். திருமண உறவில் பாசம் அதிகரிக்கலாம். பணியிடங்களில் தடைப்பட்ட செயல்கள் நிறைவேறலாம்.

**கும்பம்:** வேலைத்தளத்தில் உங்கள் ஆதிக்கம் மேம்படும். இன்று உற்சாகம் அதிகரிக்கலாம். வேலைகளும் தாமதமின்றி நிறைவேறுவதால் நன்மை கிடைக்கலாம். பணிகளில் எதிர்கால நலனுக்கான முயற்சி உண்டாகலாம்.

**மீனம்:** வணிகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு உங்களால் நல்ல தீர்வு காணப்படலாம். கூட்டுத்தொழில் சம்பந்தப்பட்ட செயல்களில் இலாபங்கள் மேம்படும். காதலில் நெருக்கம் அதிகரிக்கலாம். கடந்த கால அனுபவங்கள் நல்ல பலன் தரலாம். வாழ்க்கைத்துணையுடன் மகிழ்வான நாளாக அமையலாம்.

# நடமாடும் நீதிச் சேவை முகாமில் கலந்துகொள்வதை தவிருங்கள்!

## காணாமலாக்கப்பட்ட உறவினர்களிடம் யாழ். சங்கம் கோரிக்கை

(யாழ். செய்தியாளர்)

இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் நடமாடும் நீதிச் சேவை முகாமில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கலந்துகொள்ள வேண்டாம் என வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் யாழ்ப்பாண சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று (27) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு சங்க உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாம் எங்கள் உறவுகளை தொலைத்து 12 வருடங்களுக்கு மேலாக போராடி வருகின்றோம். அதற்கான நீதியை பெற்றுத் தருமாறு நாம் சர்வதேசத்திடம் கேட்டுள்ளோம். எங்கள் கைப்பட பல ஆவணங்களை அனுப்பியுள்ளோம்.



ஆகவே, இப்போது நீதி அமைச்சால் முன்னெடுக்கப்படும் நடமாடும் சேவை முகாமில் காணாமலாக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் எந்த விடயங்களையும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டாம்.

வேறு ஏதும் விடயங்கள் இருந்தால் அதற்கு மட்டும் அங்கே செல்லுங்கள். கழுத்தை அறுத்து கொலை செய்தவர்களுக்கு எல்லாம் மன்னிப்பு வழங்கியுள்ளது அரசு. எங்கள் உறவுகளுக்கு என்ன முடிவு?

எமது உறவுகளை இழந்து 13ஆவது வருடமாகிறது. இன்னமும் நாம் கண்ணீருடன் தான் நாட்களை கழிக்கின்றோம்.

மூன்று ஜனாதிபதிகளை நாம் பார்த்து விட்டோம். கொடுத்த அறிக்கைகள் எங்கே என்று தெரியாது. இந்த அரசிடம் நீதி கிடைக்காது.

ஆகவே, சர்வதேசத்தின் அழுத்தத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக இந்த நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

அவர்களின் சேவை முகாமுக்கு போக வேண்டாம். ஒரே நாடு ஒரே சட்டம் என்று சொல்கிறார்கள். ஆனால், தெற்கில் ஒரு சட்டம் வடக்கில் ஒரு சட்டம் இதுதான் உண்மை - என்றனர்.

## பதுளையில் 58 வயது பெண் கொலை:
# சந்தேகநபரான குடும்பஸ்தருக்கு பெப். 09 வரை விளக்கமறியல்

(பதுளை செய்தியாளர்)

பதுளை – வேவஸ்ஸ தோட்டத்தில் 58 வயது பெண்ணொருவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தந்தை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பதுளை பொலிஸ் மோப்பநாயின் உதவியுடன் 30 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவரை பெப்ரவரி மாதம் 09ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் சமிந்த கருணாதாச உத்தரவிட்டுள்ளார்.

இந்த மாதம் 23ஆம் திகதி லெட்சுமணன் சந்திரலேகா என்ற பெண்ணே துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபரின் செருப்பு சம்பவ இடத்திலிருந்து சிறிதுதூரத்தில் காணப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு, பொலிஸ் மோப்பநாயின் துணையுடன் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அவரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரத்தம் படிந்த ஆடைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

# பேராதெனிய பல்கலையில் 64 பேருக்கு கொரோனா

பேராதெனிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 64 மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்கள் பல்கலைக்கழக இடைநிலை சிகிச்சை மத்திய நிலையங்களில் சிகிச்சைபெற்று வருவதாகவும் அந்த பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தை முழுமையாக ஆரம்பித்ததன் பின்னர், சுகாதார வழிமுறைகளுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள முறைகளை பின்பற்றி, வரையறுக்கப்பட்டளவில் மாணவர்களை அழைத்து கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்கள் 03 – 04 மாதங்களாக வழமைபோன்று கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஒருசில மாணவர்கள் ஒன்லைன் முறையினூடாக கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதுபோன்று கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. இதுவரையில், 4 ஆயிரத்து 400 மாணவர்கள் வரையில் தங்கியிருந்து கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். நடைமுறை பயிற்சி மற்றும் பரீட்சை நடவடிக்கைகளுக்கு தேவையான மாணவர்களை வைத்திய பீடம், பல் வைத்திய பீடம் மற்றும் சுகாதார வைத்திய பீட மாணவர்கள் அவர்களுக்குத் தேவையான மருத்துவ பயிற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றனர். எங்கள் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த நுண்ணுயிரியல் வல்லுநர்கள் குழு, மாணவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுக்க ஒரு குழுவை அமைத்துள்ளது. அவை தேவையான வழிகாட்டுதலை பெற்றுக்கொடுக்கின்றது. குழுவின் வழிகாட்டுதலின்படி விளையாட்டு மைதானங்கள் மற்றும் நீச்சல் தடாகங்களும் திறக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மூன்றாவது சர்வதேச சித்த மருத்துவ ஆய்வு மாநாடு யாழ். பல்கலையில்!



(யாழ். செய்தியாளர்)

"புதிய இயல்புநிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல்" என்ற தொனிப்பொருளின்கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாடுகளின் வரிசையில் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகினால் நடத்தப்படும் மூன்றாவது சர்வதேச சித்த மருத்துவ ஆய்வு மாநாடு நேற்று (27) கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலகில் ஆரம்பமாகியது.

மாநாட்டுக்கு முன்னரான பயிற்சிப் பட்டறை சித்த வைத்திய அலகின் தலைவர், சித்த வைத்தியர் திருமதி தயாளினி திலீபன் தலைமையில் இடம்பெற்றது. நேற்றைய நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.ராஜ்குமார், கைதடி சித்த போதனா வைத்தியசாலை பொறுப்பதிகாரி சித்த மருத்துவர் ஐ.ஜெபநாம கணேசன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள், சித்த வைத்திய அலகின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். "சித்த மருத்துவத்தின் ஊடாக ஆரோக்கியமான வாழ்வுக்கான நோயெதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தல்" என்ற தலைப்பிலான சர்வதேச சித்த வைத்திய ஆய்வு மாநாடு எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

# வவுனியா மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர் ஒருவருக்கு தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கும் பகுதியில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு உடல்நிலை பாதிப்படைந்த நிலையில் அவருக்கு துரித அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பரிசோதனையில் அரச உத்தியோகத்தருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரை சிகிச்சைக்காக தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

# பொதுஜன பெரமுன வசமானது பலாங்கொடை நகர சபை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டமைப்பில் இயங்கிவந்த பலாங்கொடை நகர சபையின் நிர்வாகம் பொதுஜன பெரமுன வசமானது.

2022 வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப் பட்டதையடுத்து சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ இந்நகர சபையின் அதிகாரத்தை கலைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதன்பின் புதிய நிர்வாக அதிகாரத்தை தெரிவுசெய்யும் கூட்டம் நடைபெற்றபோது எதிர்க்கட்சித் தலைவராக கடமையாற்றிய வசந்த குணரத்ன சபையின் தலைவராக அதிகப்படியான வாக்குகளால் தெரிவானார்.

வாக்களிப்பின் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட சபைத் தலைவருக்கு 9 வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 6 வாக்குகளும் கிடைத்தன. இத்தெரிவின்போது மக்கள் விடுதலை முன்னணியின் ஓர் உறுப்பினரும் வாக்களிக்காது நடுநிலை வகுத்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரைகாலமும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கி அதிகாரத்தில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இம்முறை பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளித்தமை குறிப்பிடத்து.

இதேவேளை, நகர சபையின் கடந்த அதிகாரத்தில் சபையின் உபதலைவராக விளங்கிய எம்.டி.எம்.ரூமி தொடர்ந்தும் சபையின் உப தலைவராக கடமையாற்றுகிறார்.





இலங்கை விமானப்படையால் அனைத்து வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாரஹேன்பிட்டி, கிரிமண்டல மாவத்தையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவின் தலைமையில் நேற்று இடம்பெற்றது. (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

# அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் அசாத் சாலி விசேட கலந்துரையாடல்

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி அமெரிக்க தூதரக உயர் அதிகாரிகளை சந்தித்துப் பேசியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, தான் சட்டவிரோதமாக கைதுசெய்யப்பட்டமை சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மற்றும் பல புத்திஜீவிகள் கைதுசெய்யப்பட்டு இன்னும் சிறையில் உள்ளமை குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன் 800 வருடங்களாக முஸ்லிம்களால் பாதுகாக்கப்பட்டுவந்த கூரஹல ஜெய்லானி கட்டடங்கள் தகர்க்கப்பட்டமை மற்றும் பல விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டது.



இந்தச் சந்திப்பில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளான மாட்டின் கெலி, ரூபி வூட்சேட், அரசியல் பொறுப்பாளர் நஸ்ரின் மரைக்கார் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 28ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# பயம் காட்டுகிறதோ ரஷ்யா?

கொரோனா பெருந்தொற்றையே உலகம் மறந்துவிடக்கூடிய அளவுக்கு ஐரோப்பிய கண்டத்தின் கிழக்கில் மிகப்பெரிய இராணுவ மோதல் ஏற்பட்டுவிடுமோ என்ற புதிய பதற்றம் அதிகரித்து வருகிறது. உக்ரைன் நாட்டை அதற்குப் பக்கத்தில் உள்ள ரஷ்யா எந்த நேரமும் ஆக்கிரமிக்க முற்படலாம் என்று அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும், அவை இடம்பெற்றுள்ள வட அட்லான்டிக் (இராணுவ) ஒப்பந்த நாடுகள் அமைப்பும் கூறி வருகின்றன.

உக்ரைன் எல்லைப்பகுதியில் கவச வாகனங்கள், தாங்கிகள், பீரங்கிகள், ஏவுகணைகள், போர்விமானங்கள் ஆகியவற்றுடன் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புகளையும் ரஷ்யா தயார்நிலையில் வைத்திருக்கிறது. ரஷ்யப் படைகள் உள்ளே நுழைந்தால் தடுப்பதற்கு உக்ரைன் இராணுவமும் தயாராக இருக்கிறது.

உக்ரைனுக்கு உதவ நேட்டோ நாடுகளின் படைகளும் தயாராக இருக்கின்றன. அமெரிக்கா தன்னுடைய இராணுவத்தின் 8,500 துருப்புகளை தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தியிருக்கிறது. ரஷ்யா, இப்போது உக்ரைன் எல்லைக்கு அருகிலும், தான் ஆக்கிரமித்துள்ள கிரிமியாவிலும் போர்ப்பயிற்சிகளை மேற்கொண்டுள்ளது. நேட்டோ நாடுகளும் தங்களுடைய போர்விமானங்களையும் போர்க்கப்பல்களையும் கிழக்கு ஐரோப்பாவுக்கு விரையுமாறு உத்தரவிட்டுள்ளன.

இதற்கிடையே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளின்கன், உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியை கிவிவ் நகரில் சந்தித்து நிலைமை குறித்து கேட்டறிந்தார். நிதானமாக நடந்துகொள்ளுமாறும் சமரசப் பேச்சுகளுக்கு இடம் தருமாறும் ரஷ்ய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். உக்ரைனின் முன்னாள் ஜனாதிபதி பெட்ரோ பொரொஷென்கோ நாடு திரும்பிவிட்டார். தனக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள தேசத்துரோக வழக்கைச் சந்திக்கத் தயார் என்றும் நெருக்கடியான நேரத்தில் நாட்டு மக்களுடன் இருப்பதற்காக தாய்நாட்டுக்குத் திரும்பிவிட்டதாகவும் அறிவித்துள்ளார்.

உக்ரைனுக்குள் நுழைய ரஷ்யா தயாராகி வருகிறது. அப்படி ரஷ்ய இராணுவம் நுழைந்தால் பதிலுக்கு நாங்களும் விரைவாகவும் பெரியளவிலும் பதிலடி தருவோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் எச்சரித்திருக்கிறார். ரஷ்யாவுக்கு எதிராகப் போர் தொடுக்கமாட்டோம், நேட்டோ அமைப்பின் செல்வாக்கை ஐரோப்பாவில் விரிவுபடுத்த மாட்டோம் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எழுத்துபூர்வமாக உறுதிமொழி அளிக்கவேண்டும், நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேரவும் கூடாது என்று ரஷ்யா மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது. கிரீமியாவை ரஷ்யா தன்னுடன் சேர்த்துக்கொண்டதால் உக்ரைனையும் அது ஆக்கிரமித்துவிடும் என்று நேட்டோ நாடுகளும் மக்களில் பெரும்பான்மையினரும் அஞ்சுகின்றனர்.

சோவியத் யூனியன் என்ற அமைப்பில் இருந்த பெரிய நாடுகளில் ஒன்று உக்ரைன். மொழி, கலாசார அடையாளத்தில் ரஷ்யாவுடன் சில பிரதேசங்கள் ஒத்துப்போவதால் உக்ரைனை ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகிறது. ஆனால், அந்த நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்த விரும்புகின்றனர். தடையற்ற வர்த்தகம், முதலாளித்துவப் பொருளாதாரம், அதிக ஜனநாயக உரிமைகள், மேற்கத்திய நாடுகளின் நுகர்வுக் கலாசாரம், பொழுதுபோக்குகள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட அவர்கள், பழைய சோவியத் ஒன்றியத்தின் இறுக்கமான வாழ்க்கை முறையிலிருந்து சுதந்திரமான வாழ்க்கைக்கு ஆசைப்படுகின்றனர். ஒன்றியம் என்ற வார்த்தையே அர்த்தமற்றுப் போன பிறகு மீண்டும் ரஷ்யாவின் பிடிக்குள் வாழ அவர்கள் அஞ்சுகின்றனர்.

பொருளாதாரத்தில் வளரும் நாடு உக்ரைன். மனித ஆற்றல் வளர்ச்சியில் உலகத்தில் 74ஆவது இடத்தில் இருக்கிறது. அங்கு வறுமையும் ஊழலும் அதிகம். வளமான விவசாய நிலம் இருப்பதால் விவசாய ஏற்றுமதியில் முக்கியமான நாடாகத் திகழ்கிறது. இராணுவப் பலத்தில் ரஷ்யா, பிரான்ஸுக்கு அடுத்து வருகிறது.

ரஷ்யாவில் ஜனாதிபதி, பிரதமர், மீண்டும் ஜனாதிபதி என்று கடந்த 22 ஆண்டுகளாக ஆட்சிசெய்து வருகிறார் விளாடிமிர் புட்டின். மக்களுக்கு புட்டினின் ஐக்கிய ரஷ்யா கட்சியின் ஆட்சி அலுத்துவிட்டது. ஆரம்ப காலத்தில் இருந்த பொருளாதார வளர்ச்சி இப்போது இல்லை. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து வருகிறது. ரஷ்ய அரசில் ஊழலும், வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டும் போக்கும், சலுகைசார் முதலாளித்துவ ஆதிக்கமும் வளர்ந்து வருகின்றன. ஆட்சியில் தானே தொடர வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சிகளையும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் வெவ்வேறு காரணங்களைக் கூறி ஒடுக்கி வருகிறார் புட்டின்

மக்களுடைய ஜனநாயக விருப்பங்களுக்கு மேற்கத்திய நாடுகள் தூபம் போடுவதால், நாட்டை பழைய கம்யூனிஸ்ட் ஆட்சிக்காலத்தைபோல் கட்டுக்குள் வைத்திருக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறார். ரஷ்யாவிலேயே இயற்கை எரிவாயு, மசகு பெற்றோலிய எண்ணெய் கிடைப்பது அரசுக்குப் பொருளாதார வளத்தைத் தந்திருக்கிறது. சோவியத்கால இராணுவ பலம் அப்படியே குறையாமல் இருக்கிறது. எனவே, இவற்றைக்கொண்டு தானும் ஒரு வல்லரசுதான் என்று நிரூபிக்க புட்டின் முயல்கிறார். புதிய வல்லரசாகவும் பொருளாதார வலிமைமிக்க நாடாகவும் வளரும் சீனா, ரஷ்யாவை நெருக்கமான நண்பனாகப் பெற்றிருக்கிறது.

ஐரோப்பாவிலிருந்தும் மத்திய ஆசியாவிலிருந்தும் அமெரிக்காவை வெளியேற்றத் துடிக்கும் ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் பொதுவான எண்ணமாக அமெரிக்க எதிர்ப்புணர்வு இருப்பதால் இரண்டும் இணைந்து செயல்படுகின்றன.

நெருக்கடி என்றால் சீனா நமக்குத் துணை நிற்கும் என்ற நம்பிக்கையில் அமெரிக்காவைச் சீண்டிப்பார்க்க விரும்புகிறார் புட்டின். ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய அமெரிக்கா இப்போது தன்னுடைய நாட்டு தொழில், வர்த்தகத்துறை மீட்சியில் மட்டுமே அக்கறையாக இருக்கிறது. எனவே, இந்த பலவீனமான நேரத்தில் ஐரோப்பிய நாடுகளை அச்சுறுத்திவைக்க உக்ரைன் விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுகிறது ரஷ்யா.

இது இராணுவ பலக் கூட்டை அடிப்படையாகக்கொண்ட போட்டியாகவும் ஐரோப்பிய சந்தையை யார் பிடிப்பது என்ற வர்த்தகப் போராகவும் கூட இருக்கிறது. அதைவிட முக்கியம், இருபெரும் நாடுகளின் தலைவர்கள், தங்களுடைய அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடாமலிருக்க, தங்களை செல்வாக்குள்ள தலைவர்களாக காட்டிக்கொள்ளவும் இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கி வருகின்றனர்.

முதல் இரண்டு உலகப் போர்களைவிட மிகப் பெரிய போருக்கு உக்ரைன் விவகாரம் இட்டுச்செல்லும் என்று ஊடகங்கள் அஞ்சும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. இதற்கு ஒரே காரணம் உக்ரைன், ரஷ்யா இரண்டுமே அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துள்ளன. மோதல் முற்றி போர் மூண்டால் அணு ஆயுதங்களை இரண்டும் பயன்படுத்தும் என்ற அச்சமும் ஏற்பட்டிருக்கிறது. இதனாலேயே உலக நாடுகள் உக்ரைன் விவகாரத்தை கவனமாகப் பின்பற்றுகின்றன.

கொரோனா பெருந்தொற்று ஓயவில்லை. நோய்க் கிருமிகள் தொடர்ந்து உருமாற்றம் அடைகின்றன. ஊரடங்கு உத்தரவுகள் மக்களுடைய அன்றாட வாழ்க்கையை மட்டுமல்லாமல், பொருளாதாரத்தையும் மிக மோசமாகப் பாதித்து வருகின்றன. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி இராணுவ ரீதியாகவும் எதையாவது சாதித்துவிட வேண்டும் என்று சில நாடுகள் தீவிரம் காட்டுகின்றன.

2014 மார்ச்சில் கிரீமியாவை ரஷ்யா தன்னுடைய நாட்டுடன் சேர்த்துக்கொண்டது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஆழமான – அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விரிவான வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புவதாக உக்ரைன் அறிவித்தது. அதை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றது. இவ்வாறு உக்ரைன், ஐரோப்பிய நாடுகள் பக்கம் சாய்வது பின்னாளில் தனக்கு ஆபத்தாகிவிடும் என்று அஞ்சுவதால் ரஷ்யா இப்போது தீவிரமாகத் தலையிடுகிறது.

கிரீமியாவை ஆக்கிரமித்து தனது நாட்டுடன் சேர்த்துக்கொண்டதைபோல் உக்ரைனையும் சேர்த்துக்கொள்ளப் பார்க்கிறது. இதனாலேயே ரஷ்யாவுக்கு அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. பக்கத்து நாடுகளுடன் தேவையில்லாமல் எல்லைப் பிரச்சினை செய்யும் சீனாவும், ரஷ்யாவும் இப்போது தங்களுடைய வல்லாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே தேவையின்றி சண்டித்தனம்காட்டி வருகின்றன. இப்போதைக்கு இதுதான் உக்ரைன் நெருக்கடிக்கு ஒரே காரணம்.

ரஷ்யா சும்மா பயம் காட்டுமே தவிர, உண்மையாகப் போர் செய்யாது என்றே பல நாடுகள் கருதுகின்றன. எது எப்படியானாலும் ரஷ்யா விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று, அது விரும்பியபடி போர் செய்யமாட்டோம், நேட்டோ அமைப்பை விரிவுபடுத்த மாட்டோம், உக்ரைனை ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டோம் என்றெல்லாம் எழுத்துபூர்வமாக உத்தரவாதம் அளிக்க அமெரிக்காவும் தயாரில்லை. இதுதான் நெருக்கடி முற்றுவதற்கு காரணம். சிலசமயம் அங்கு சண்டை நடக்குமாயின், அது இலங்கையின் பொருளாதாரத்திற்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏற்கனவே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரம் ஏற்றுமதி வருமானத்தால் ஓரளவு சமாளித்துவருகிறது. அந்த ஏற்றுமதிக்கு தாக்கங்கள் வருமாயின் நிலைமை மேலும் மோசமாகலாம்.

# வரலாற்றில் மறக்க முடியாத கொக்கட்டிச்சோலைப் படுகொலை!

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் மறக்க முடியாத படுகொலை நிகழ்வுகளில் கொக்கட்டிச்சோலைப் படுகொலையும் ஒன்று. கிழக்கு ஈழத்தை மாத்திரமன்றி,ஒட்டுமொத்த ஈழத்தையும் உலுக்கிய அப்படுகொலை குறித்து உலகமே அதிர்ந்தது. ஈழத் தமிழ் இனத்தை இன அழிப்புச் செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட அந்தப் படுகொலை நிகழ்ந்து பல வருடங்களாகிவிட்டன.

கொக்கட்டி மரங்கள் நிறைந்த கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பிரதேசம். ஈழத்தில் சுயம்புலிங்கம் கோயிலாக அமைந்துள்ள தான்தோன்றீச்சரத்தைக்கொண்ட இந்தப் பிரதேசம் அழகிய விவசாய கிராமமாகும்.

கொக்கட்டிப் பிரதேசமே குருதியில் நனைந்த கொக்கட்டிச்சோலைப் படுகொலையை மட்டக்களப்பு இறால்பண்ணை படுகொலை என்றும் நினைவுகூரப்படுகிறது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைளில் கொக்கட்டிச்சோலைப் படுகொலையும் ஒரு குரூரமாகும்.

1987ஆம் ஆண்டில் தை 28, 29 மற்றும் 30 ஆகிய நாட்களில் இலங்கை அரசின் விசேட அதிரடிப்படைகள் நடத்திய கோர இனப்படுகொலையாகும்.

கொக்கட்டிச்சோலை பிரதேசத்திலுள்ள கிராமங்களிலேயே இரத்தத்தினால் உறைந்த அந்தப் படுகொலையில் 150இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 12 பேருக்கு என்ன நடந்தது என்று தெரியாமலே காணாமல்போயினர். கொக்கட்டிச்சோலைக் கிராமங்களை இலங்கை அரசின் விசேட படைகள் சுற்றிவளைக்க வான் வழியாகவும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மண்முனைத்துறைக்கும் மகிழடித் தீவுக்கும் இடையிலுள்ள இறால் பண்ணையில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களைதான் முதலில் படுகொலை செய்தனர் அதிரடிப்படையினர். அன்று இறால் பண்ணையே இரத்தப் பண்ணையாக மாறியது என்று எழுதுகிறார் மணலாறு விஜயன். அந்த மக்களை கைதுசெய்து தமது துப்பாக்கியால் சுட்டு வெறிதீர்த்த பின் ரயரிட்டு எரித்து தமது இனவெறியை தீர்த்துக்கொண்டனர் அதிரடிப்படையினர்.




இறால் பண்ணையில் தொடங்கிய இரத்தவேட்டை தலைக்குடா, மகிழடித்தீவு, முனைக்காடு, தாண்டியடி, கொக்கட்டிச்சோலை, அம்பிளாந்துறை என்று தொடர்ந்தது. பிரதேசத்தின் கிராமங்களை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர், எதிரில் வந்தவர்கள் எல்லோரையும் வெட்டி வீசினர். கிராமம் அல்லோலகல்லோலமானது. படகுகளில் தப்பிச்சென்ற அப்பாவி மக்களை வான் வழியாக துரத்தித் துரத்தி சுட்டுக்கொன்றழித்தனர்.

வீட்டுக்கு வீடு மரணம். கொன்றழிக்கப்பட்டவர்கள் எல்லாம் உறவினர். ஒரு வீட்டில் பலர் கொலை. குடும்பம் குடும்பமாக கொன்றொழிக்கப்பட்ட கொக்கட்டிச்சோலைப் படுகொலை எளிதில் மறக்கவோ எளிதில் ஆறவோ முடியாத பெரும் காயமாக நிகழ்ந்தது. ஒருசிலரைத் தவிர, அத்தனை பேரையும் அழித்தனர் இலங்கை அதிரடிப்படையினர்.

பலரை சிறைப்பிடித்த அதிரடிப்படையினர் அவர்களை மிகவும் மோசமாக சித்திரவதை செய்து துடிதுடிக்கக் கொன்றுபோட்ட கொடூரச் செயல்கள் உயிர் தப்பிய சிலரது வாக்குமூலங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அத்துடன், படுகொலைசெய்யப்பட்டவர்களது சடலங்கள் அனைத்தையும் தடயம் தெரியாமல் அதிரடிப்படையினர் அழித்தனர்.

ஈழத்தில் தமிழ் இனத்திற்கு எதிராக நடந்த இன அழிப்புப் படுகொலைகள் பலவற்றுக்கும் விசாரணை நடக்கிறது என்றும் விசாரணை இல்லை என்றும் இழுத்தடிப்பதைபோல் இலங்கை அரசுகள் கொக்கட்டிச்சோலைப் படுகொலையையும் கடந்து பல வருடங்கள்.

கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் சர்வதேச அளவில் இலங்கை அரசின் இன அழிப்பு முகத்தை அம்பலம் செய்தது. யோசப் பரராசசிங்கம் இந்தப் படுகொலைக்கு உதிராக சர்வதேச அளவில் குரல் எழுப்பி கவனப்படுத்தினார். அவரது கடுமையான முயற்சியினால் இப்படுகொலை குறித்து சர்வதேச அரங்கில் அதிகம் பேசப்பட்டது. அதனாலேயே ஜே.ஆர். அரசு ஒரு கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றியது.

படையினர் பொறுப்பின்றி நடந்து அப்பாவிகள் பலியாகக் காரணமாக இருந்துள்ளனர் என்றும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னபோதும் அந்த அறிக்கையுடன் கொக்கட்டிச்சோலைப் படுகொலை விவகாரத்தை அன்றைய இலங்கை அரசு மறைக்க முனைந்தது. படைகளுக்கு தண்டனையை ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைசெய்ய ஜே.ஆர். அரசு அவர்களுக்கு பதவி உயர்வை வழங்கி வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்து இன அழிப்பு படுகொலைகளை ஊக்குவித்தது.

கொக்கட்டிச்சோலைப் படுகொலையை மட்டக்களப்பில் மாத்திரமன்றி, ஒட்டுமொத்த ஈழத்திலும் சர்வதேச அளவிலும் நினைவுகூரல் நிகழ்வுகள் ஆண்டுதோறும் இடம்பெற்று வருகின்றன.

மட்டக்களப்பு மண்ணிலிருந்து ஈழத் தமிழ் மக்களை துடைத்தெறிந்து அந்த மண்ணை அபகரிப்பதற்காகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஓர் அரசியல் நோக்கம் கருதிய இராணுவ நடவடிக்கையே கொக்கட்டிச்சோலைப் படுகொலை. மிகவும் நன்கு திட்டமிட்ட இன அழிப்பாக அன்றைய அரசால் தனது படை எந்திரத்தின் மூலம் நடத்தப்பட்ட கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் ஈழத் தமிழ் மக்களின் நெஞ்சில் ஆறாத காயமாக நிலைத்துவிட்டன.

# இலங்கை இலக்கிய வரலாற்றில் அழியா நாமம் டொமினிக் ஜீவா



**அன்னாரது முதலாவது நினைவுதினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

**வி.ரி.இளங்கோவன் - பிரான்ஸ்**

இன்றைய யாழ். நவீன சந்தைக் கட்டடம் அப்போது கட்டப்படவில்லை. அவ்விடத்தில்தான் பஸ் நிலையம் இருந்தது. பஸ் நிலையத்திற்கு மேற்குப்புறமாக கஸ்தூரியார் வீதியின் தொடக்கத்தில் அமைந்திருந்த தகரக்கூரைக் கடைகளின் நடுவில் பூபாலசிங்கம் புத்தகசாலை இருந்தது.

அங்குதான் முதன்முதலில் டொமினிக் ஜீவாவைக் கண்டேன். அப்போதுதான் அவர் 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதிக்கான சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றிருந்தார்.

இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற ஜீவா இவர்தான் என அண்ணர் எனக்கு அறிமுகப்படுத்தினார். பூபாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர். நாவேந்தன் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர்.

சுதந்திரன் பத்திரிகையில் ஜீவா உட்பட முற்போக்கு எழுத்தாளர் பலரையும் காரசாரமாகத் தாக்கி நாவேந்தன் எழுதுவதுண்டு. ஆனாலும் நேரில் சந்திக்கும்போது அவர்கள் நண்பர்களாகப் பேசிக்கொள்வதைப் பார்த்திருக்கிறேன்.

பின்வந்த நாட்களில் யாழ் நகரில் ஜீவாவைக் காணும்போதெல்லாம் ஒருசில வார்த்தைகள் பேசிக்கொள்வேன். அவரும் தம்பி என்று சொல்லி அன்பாகக் கதைப்பார்.

அவர் சைக்கிளில் வரும்போது என்னை எங்கு கண்டாலும் இறங்கி இரண்டொரு வார்த்தைகள் பேசுவார். சைக்கிளில் கொழுவியிருக்கும் பிளாஸ்ரிக் பையிலிருந்து மல்லிகையை எடுத்துத் தருவார். பணம் கொடுத்து வாங்குவேன். மல்லிகைக்கு ஏதும் எழுதும் எனச் சொல்வார்.

கோப்பாய்க் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலிருந்தே அண்ணரிடம் இருந்த முற்போக்கு எழுத்தாளர்களின் நூல்கள் - பத்திரிகைகளில் வெளிவந்த படைப்புகள் பலவும் தொடர்ந்து படித்துவந்தேன்.


(15ஆம் பக்கம் பார்க்க)

# இன்றைய நாளில்...

- 1679 – சென்னை கோட்டைப் பகுதியில் சிறு நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1724 – ரஷ்ய அறிவியல் கழகம் சென் பீட்டர்ஸ்பேர்க் நகரில் முதலாம் பேதுரு மன்னரால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1882 – சென்னையில் முதன்முதலாக தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1933 – பாகிஸ்தான் என்ற பெயரை சௌதுரி ரகுமாத் அலி கான் பரிந்துரைத்தார். இந்திய முஸ்லிம்கள் இதனை ஏற்றுக்கொண்டு பாகிஸ்தான் இயக்கத்தை ஆரம்பித்து விடுதலைக்கான கோரிக்கையை முன்னெடுத்தனர்.
- 1935 – ஐஸ்லாந்து கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கிய முதல் மேற்கத்திய நாடானது.
- 1958 – லெகோ நிறுவனம் தமது லெகோ கட்டைகளுக்கு காப்புரிமை பெற்றது.
- 1986 – சலஞ்சர் மீள்விண்கலம் புறப்பட்ட 73ஆவது விநாடியில் வானில் வெடித்துச் சிதறியதில் ஏழு விண்வெளிவீரர்கள் கொல்லப்பட்டனர்.
- 1987 – மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கிராமத்தில் இலங்கை இராணுவத்தினரால் 86 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2016 – ஜிகா வைரஸ் பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.

## நக்கல் நமசிவாயம்

இப்போவெல்லாம் அத்தியாவசிய பொருட்களை வாங்குறது, முன்னம் நகைக்கடைகளில நகைகள் வாங்குற மாதிரி இருக்குதுங்கோ...



# நாடு செழிப்பான நிலையை அடைய பிரார்த்தித்து பாதுகாப்புப் படைகளின் வருடாந்த பிரித் பாராயணம்






பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்பில் இலங்கைஇராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடுசெய்யப்பட்ட வருடாந்த பிரித் பாராயண நிகழ்வு நேற்று முன்தினம் (26) தொடக்கம் நேற்று (27) காலைவேளை வரையில் நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிக்குகளினதும் மகாநாயக்க மற்றும் அனுநாயக்க தேரர்களினதும் பங்கேற்புடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

2008 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கைகளின் போது இலங்கையின் தற்போதைய பிரதமரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் கீழ் பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய தற்போதைய ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய 2008ஆம் ஆண்டில் மேற்கண்டவாறான ஆசீர்வாத பூஜைகள் முதல் தடவையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல வருடங்களாக தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவந்த மேற்படி பிரித் பாராயண நிகழ்வுகள் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை கருத்திற்கொண்டு கடந்த சில வருடங்கள் நடத்தப்படாமல் இருந்ததோடு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தற்போதைய ஆட்சிக்காலத்தில் மீண்டும் பிரித் பாராயண நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

உரிய சுகாதார பாதுகாப்பு முறைகளை பின்பற்றி போரில் உயிர்நீத்த மற்றும் அங்கவீனமுற்ற வீரர்களின் குடும்பத்தினருடன் இந்நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன மற்றும் பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா ஆகியோருடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது முப்படையினர், பொலிஸார், நாடு மற்றும் நாட்டின் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் நீங்கி தேசத்திற்கு ஏற்பட்டுள்ள அனைத்து பின்னடைவுகளும் மறைந்து நாடு செழிப்பான நிலைமையை அடைய வேண்டுமென ஆசி வேண்டும் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 27.01.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 028 173 | 033 8666 |
| கனேடியன் டொலர் | 044 0867 | 050 6 5 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 0 0 | 21 1617 |
| யூரோ | 111 3748 | 120 3 1 |
| ஜப்பான் யென் | 0 6121 | 0 6771 |
| சிங்கப்பூர் டொலர் | 035 5351 | 040 2500 |
| ஸ்ரேலிங் பவுன் | 154 5366 | 163 303 |
| சுவிஸ் பிரான்ங் | 102 4122 | 110 05 3 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 6482 |
| குவைட் | குவைட் தினார் | 556 768 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 5574 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 3682 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 737 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8841 |

# நாளாந்தம் இரண்டாயிரம் கொரோனா நோயாளர்கள் பதிவாகுவதாக தகவல்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

நாளாந்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதையடுத்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் நாளாந்தம் இரண்டாயிரம் வரையில் கொரோனா நோயாளர்கள் அடையாளங் காணப்படுவதாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அநேகமான வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த பிரிவுகள், தற்போது வேறு நோயாளர்களுக்காக வழங்கப்பட்டுள்ளமையினால் வைத்தியசாலைகளின் பயன்பாட்டு கொள்ளளவு அதிகரித்துள்ளதாகவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்,



நாட்டில் தற்போது இனங்காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளது. சரியான தரவுகள் ஊடகங்களில் வெளியாகாவிட்டாலும் நாளாந்தம் 2000 பேர் வரையில் கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்படுகின்றனர். தற்போது பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இதுவரையில் வைத்தியசாலைகள் நிரம்பியுள்ளன.

அதேபோன்று அநேகமான சிகிச்சை மத்திய நிலையங்களிலுள்ள இடவசதிகளும் நிறைவடைந்துள்ளன. கடந்த காலங்களில் செயற்பட்டுவந்த அநேகமான சிகிச்சை மத்திய நிலையங்கள் மீண்டும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையால் எதிர்காலத்தில் சுகாதாரத்துறையினரால் சமாளிக்க முடியாத அளவுக்கு இக்கட்டான சூழ்நிலை உருவாகலாம். தற்போதுள்ள நிலைமை எதிர்காலத்தில் தீவிரமடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அம்பியூலன்ஸ் வாகன சாரதி மீது பாணந்துறையில் துப்பாக்கிச்சூடு

பாணந்துறை வைத்தியசாலையொன்றுக்கு முன்னால் நேற்று (27) காலை இனந்தெரியாத குழுவினர் அம்பியூலன்ஸ் வாகன சாரதி மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பியூலன்ஸ் வாகனம் மீது தொடர் துப்பாக்கிப் பிரயோகம் முன்னெடுக்கப் பட்டுள்ளதுடன், அம்பியூலன்ஸ் சாரதிக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இரு மோட்டார்சைக்கிள்களில் வந்த நால்வர் இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.







வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தின் 50ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு அங்கத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பில் கார்டன் ஆர்க் விடுதியில் நடத்தப்பட்டது. கொழும்பு லயன்ஸ் கழக 306 ஏ1 மாவட்ட ஆளுநர் உமா சங்கர் மற்றும் வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தின் தலைவர் ஈஸ்வரன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் படங்களை காணலாம். (படங்கள்: ஆர். சுரேஷ்குமார்)





தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13ஆம் திருத்தத்துக்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிக்க அணிதிரளுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் யாழ். திருநெல்வேலி பொதுச் சந்தைப் பகுதியில் நேற்று (27) துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (யாழ். செய்தியாளர்)

# துருக்கி - இலங்கை உறவுகளில் ஒரு புதிய உத்வேகத்திற்காக உழைக்க வேண்டிய நேரம்

துருக்கியும் இலங்கையும் பூகோள ரீதியாக தூரத்தில் இருந்தபோதிலும், பல அம்சங்களில் ஒத்த இயல்பைக்கொண்டு காணப்படுகின்றன. எமது வளமான வரலாற்றுப் பாரம்பரியத்தின் அடிப்படையில் எங்களுக்குச் சொந்தமான தனித்துவமான கலாசாரம் மற்றும் மரபுகள் காணப்படுகின்றன.

ஓட்டோமன் பேரரசு காலி நகருக்கு ஒரு கௌரவ தூதரகத்தை நியமித்த 1864ஆம் ஆண்டுவரை எமது இராஜதந்திரத் தொடர்புகள் பின்னோக்கிச் செல்கின்றன. இன்று, மன்னர் அப்துல்ஹமீதின் பெயரை இரண்டாவது நகரான கொழும்பு நகரத்திற்குச் சூட்டியது எமது பகிரப்பட்ட வரலாற்றின் நினைவாகப் போற்றப்படுகிறது.

இன்று, துருக்கியும் இலங்கையும் அந்தந்த பிராந்தியங்களில் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றன.

துருக்கி, ஐரோப்பா, ஆசியா, மத்திய கிழக்கு அத்தோடு ஆபிரிக்க நாடுகளுக்கான வர்த்தகப் போக்குவரத்துப் பாதைக்கு அருகில் அமைந்துள்ள ஒரு வளர்ந்துவரும் பொருளாதார கேந்திரமாகும், அதேவேளை, இலங்கை, இந்தியப் பெருங்கடலின் முத்து, தெற்காசியாவில் வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்திற்கான கேந்திரத் தளமாக அமையும் என்று கணிக்கப் பட்டுள்ளது.

1948 இல் இலங்கையின் சுதந்திரத்தை முதலில் அங்கீகரித்த நாடுகளில் துருக்கியும் ஒன்றாகும்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் துருக்கிய ஜனாதிபதி ரிசெப் தயிப் எர்தோகான் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயமும், தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தவேளை 2008ஆம் துருக்கிக்கு மேற்கொண்ட விஜயமும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் முக்கிய மைல்கற்களாக காணப்படுகின்றன.

பின்னர், 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக தமது தூதரகங்களை இரு நாடுகளிலும் அமைத்துக்கொண்டன, இது பல துறைகளிலும் இரு நாடுகளுக்கும் பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்க வழிவகுத்தது. பரஸ்பர உயர்மட்ட வருகைகள் எமது உறவுகளை வலுப்படுத்த பங்களிப்பு நல்கின.

துருக்கிய வெளிவிவகார அமைச்சர் முதல் முறையாக 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தார் என்பதனைக் கூறிக்கொள்வதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

துருக்கிய பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கை தரப்பில் வெளிவிவகார செயலாளர் மட்டத்தில் 2019ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற முதலாவது அரசியல் ஆலோசனைக் கூட்டம் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தியுள்ளது. உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர் இடம்பெற்றதனால் எமது அரசியல் ரீதியான கலந்துரையாடல்களில் நேரப்படுத்தல் மிகவும் அர்த்தமுள்ளதாக காணப்படுகின்றது. அத்தோடு, அது இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்தது. எங்களுக்கு இடையிலான நட்புறவுக் கூட்டுப் பங்காண்மையின் அடையாளமாக, நாடாளுமன்றங்களுக்கு இடையேயான நட்புக் குழுக்களை உருவாக்க முடிவு செய்தோம்.

எதிர்வரும் காலங்களில் எமது நாடாளுமன்ற உறவுகளை மேலும் வளர்ச்சியடையச் செய்ய உத்தேசித்துள்ளோம். பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்பது நமது ஒத்துழைப்பை வளர்க்கும் ஒரு முக்கியமான பகுதியாகும். பயங்கரவாதத்தின் கோரத்தாண்டவத்தால் இரு நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பை அதன் அனைத்து வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் ஊக்குவிப்பதில் துருக்கியும் இலங்கையும் முன்னணியில் உள்ளன.



ஒருநாள் விஜயம் மேற்கொண்டு நாட்டுக்கு வருகைதரும் துருக்கி குடியரசின் வெளியுறவு அமைச்சர் மெவ்லிட் கோவ்சொக்லு இலங்கை குறித்து தெரிவித்துள்ள கருத்துகள்

இலங்கையுடன் வெற்றி - வெற்றி எனப்படும கூட்டுப் பங்காண்மையை இலங்கையுடன் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். எங்கள் வர்த்தக அளவு 2021இல் 175 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியிருந்தது.

முடியுமான வரையில் எமது பொருளாதார உறவுகளின் உண்மையான திறனை நாம் கூடிய விரைவில் பயன்படுத்த வேண்டும். எமது வர்த்தகப் பொருட்களை பல்வகைப்படுத்துவதற்கும் இடமிருக்கிறது என்றும் நான் நம்புகிறேன்.

கடைசியாக, 2021 ஜூன் மாதம் நடைபெற்ற கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் இரண்டாவது கூட்டத்தின்போது, இரு நாடுகளும் இருதரப்பு வர்த்தக அளவை 500 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்த உறுதியளிக்கப்பட்டது.

இந்த முக்கியமான இலக்கை அடைவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

மக்களுக்கும் மக்களுக்குமிடையிலான உறவுகளைப் பொறுத்தவரையில், துருக்கிய தேசியக் கொடி பொறிக்கப்பட்ட துருக்கிய விமான சேவை இஸ்தான்புலிற்கும் கொழும்பிற்கும் இடையில் இயங்கும் வாராந்த விமான சேவையை 11 ஆக உயர்த்தியுள்ளது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

தொற்று நோயின்போது துருக்கிய விமான சேவை இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. பல விமான நிறுவனங்கள் இலங்கைக்கான நடவடிக்கைகளை நிறுத்திய அதேவேளையில், துருக்கிய விமான சேவை தனது சரக்கு விமானங்களைத் தொடர்ந்தது, இலங்கை ஏற்றுமதி உற்பத்திகளை உலக சந்தைகளுக்கு சென்றடைய சேவையில் ஈடுபடுத்தியது.

1992ஆம் ஆண்டு தெடக்கம் இலங்கை மாணவர்கள் துருக்கிய பல்கலைக்கழகங்களில் துருக்கிய புலமைப்பரிசில்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

துருக்கியில் உயர் கல்வி கற்கும் இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு பங்களிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இறுதியாக, துருக்கி இலங்கையிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளில் 20 உதவித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

சுனாமி மற்றும் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 2006ஆம் ஆண்டு மிதிகமவிலும் 2015ஆம் ஆண்டு மன்னாரிலும் நிர்மாணிக்கப்பட்ட கிராமங்கள் எமது முதன்மையான திட்டங்களாகும்.

உலகெங்கிலுமுள்ள அதன் கொவிட்-19 உதவித் திட்டங்களின் ஒரு பகுதியாக துருக்கி, இலங்கை சுகாதார அதிகாரிகளுக்கு மருத்துவ உபகரணங்களையும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

2016இல் என்னை மிகவும் கவர்ந்த நாடு இலங்கைக்கு மீண்டும் விஜயம் செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எங்களுடைய தற்போதைய உறவுகளை வலுப்படுத்துவதையும் ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இன்று, எமது கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு, எமது பொதுவான எதிர்காலத்தை பிரகாசமாக்க முடியும். கொழும்பிலுள்ள எனது தொடர்புகள் இந்த இலக்கை அடைய எங்களுக்கு உதவும் என்று நான் நம்புகிறேன்.

# நுவரெலியா மாவட்டத்தில் மேலதிகமாக 5 பிரதேச செயலகங்களை நிறுவ வேண்டும்

## இலக்கை அடையும்வரை நாம் ஓயமாட்டோம் என முன்னாள் எம்.பி. திலகராஜ் சூளுரை

(க.கிஷாந்தன்)

“நுவரெலியா மாவட்டத்தில் மேலதிகமாக ஐந்து பிரதேச செயலகங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற அமைச்சரவைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தாமல், நிறுத்தப்பட்டுள்ளமையானது உச்சபட்ச பாரபட்சமாகும்.

எனவே, புதிதாக ஐந்து பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும். அந்த இலக்கை அடையும் வரை நாம் ஓயமாட்டோம்.” - என்று மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் சூளுரைத்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக ஐந்து பிரதேச செயலகங்களை அமைக்குமாறு, சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், நுவரெலியா மாவட்டம் முழுவதும் கையொப்பம் திரட்டும் பணி கடந்த 25ஆம் திகதி முதல்



முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு நுவரெலியா மாவட்டத்துக்கு வெளியில் இருந்தும் பல தரப்பினரும் ஆதரவையும், தமது ஒருமைப்பாட்டையும் தெரிவித்துவருகின்றனர்.

இந்நிலையில், ஹட்டன் நகரிலும் நேற்று (27) கையொப்பம் திரட்டப்பட்டது. இதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கமைப்பாளரான எம். திலகராஜ் கூறியவை வருமாறு,

“ சனத்தொகைக்கு ஏற்ப அல்லாது, அநீதியான முறையிலேயே நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் சுமார் 3 தசாப்தங்களாக சமூகத்தில் கருத்தாடல்கள் இடம்பெற்று வந்தன. எனினும், இது தொடர்பில் 2016 ஒக்டோபரில் என்னால் நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது. அந்த பிரேரணைமீதான விவாதத்தின்போது பதிலளித்து உரையாற்றிய அப்போதைய துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்தன, நுவரெலியா மாவட்டத்தில் 5ஆக உள்ள பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையை 10ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை 2018ஆம் ஆண்டு அவர் முன்வைத்தார். அமைச்சரவை அனுமதியின் பின்னர் புதிய பிரதேச செயலகங்கள் தொடர்பில் 2019இல் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தலில் நுவரெலியாவில் புதிதாக ஐந்து பிரதேச செயலகங்களும், காலியில் 3 பிரதேச செயலகங்களும் நிறுவப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

இதன்படி காலி மாவட்டத்தில் மூன்று பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், நுவரெலியா மாவட்டத்துக்கான பிரதேச செயலகங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதற்கு பதிலாக இரண்டு உப செயலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது நுவரெலியா மாவட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும். எனவேதான் எமக்கு பிரதேச செயலகங்களே வேண்டும் என வலியுறுத்தும் கையெழுத்து இயக்கத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். மூன்று நாட்கள் கையொப்பங்கள் திரட்டப்பட்டன. மாவட்டம் கடந்த ஆதரவும் எமக்கு கிட்டியது. அந்தவகையில் நாளை தினம் (28) நுவரெலியா மாவட்ட செயலாளரிடம், கையெழுத்து திரட்டப்பட்ட ஆவணம் கையளிக்கப்படும். ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசின் கவனம் அதன்மூலம் ஈர்க்கப்படும். புதிதாக ஐந்து பிரதேச செயலகங்களை உருவாக்கிக்கொள்ளும்வரை நாம் ஓயப்போவதில்லை - என்றார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பன்விலவில் 19 பொலிஸாருக்கு கொரோனா

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்திலுள்ள பன்வில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 19 பொலிஸாருக்கு கொவிட் தொற்றியுள்ளது.

இது தொர்பாக மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவிக்கையில், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட 19 பேரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

கண்டிப் பிரதேசத்தில் கொவிட் தொற்று வேகமாகப் பரவி வர ஆரம்பித்துள்ளதாகவும் பொதுமக்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 15 அடி பள்ளத்தில் பாய்ந்து முச்சக்கரவண்டி விபத்து



(எம்.கிருஸ்ணா)

ஹட்டன் - போடைஸ் பிரதான வீதியில் முச்சக்கரவண்டியொன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.


ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா பட்டல்கல பகுதியிலே நேற்று (27) காலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

அக்கரப்பத்தனை பகுதியிலிருந்து ஹட்டன் நோக்கி அதிவேகமாக வந்த முச்சக்கரவண்டியே சாரதியின் கட்டுப்பாட்டை மீறி 15 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டியில் இருவர் பயணித்ததாகவும் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளதாகவும் மேலும், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# “கல்வியால் உயர்வோம்” தொனிப்பொருளில் நிகழ்ச்சித் திட்டம்





(செ.திவாகரன்)

நுவரெலியா டெஸ்போட் த.ம.வித்தியாலய உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஒன்றுகூடல் நடைபெற்றது.

இதில் பாடசாலையின் அதிபர் சிவபாத சுந்தர் தலைமை தாங்கியதுடன் உயர்தர மாணவர்களின் அறிவுசார் கலை நிகழ்வுகளும் பாடசாலை அதிபரின் 30 வருட சேவையை பாராட்டியும் பாடசாலையின் உப அதிபர் சேவி தேவகுரு கலைதுறை முதுமானி பட்டம் பெற்றதை பாராட்டியும் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.

இதேவேளை, பாடசாலையின் ஆசிரியரான வீரையா திருச்செல்வம், தேசபந்து, சிந்தனைச் செம்மல், மகாகவி, வித்தக கவிஞர் போன்ற சமூக வலைதளபட்டங்களை பெற்றமையை பாராட்டியும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# நுவரெலியாவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

(செ.திவாகரன்)

நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜின் வேண்டுகோளுக்கிணங்க, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட கந்தப்பளை, எஸ்கடேல், பிலக்பூல், ருவன் எலிய, மீபிலிமான ஆகிய பிரதேசங்களில் நுவரெலியா பிரதேச சபையின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் இவ்வேலைத்திட்டமானது தொடர்ச்சியாக



நுவரெலியா பிரதேச சபையின் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், நேற்று (27) குறித்த இடங்களின் பாதையோரங்களில் உள்ள குப்பைகளை அகற்றி ஒரு சுத்தமான சூழலை உருவாக்குவோம் என்ற எண்ணக்கருவுக்கு அமைவாக, நுவரெலியா பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

# 8 வருடங்கள் 142 முறை மூடிய மண்ணறையில் பயிற்சி

**சோழன் சாதனை புத்தகத்தில் பெயர் பதித்த முசாதிக் விசேட செவ்வி**

மண்ணறை என்பது ஒரு மனிதனின் மரணத்திற்கு பின்னால் பூமிக்குள் உருவாக்கப்படும் நிரந்தர இல்லம். இதை உயிருடன் எவரும் தெரிவுசெய்து கொள்வதில்லை. சிறு வயது முதலே ஏதாவது ஓர் வித்தியாசமான செயலில் ஈடுபட வேண்டும் என்ற என்னுடைய ஆசை மற்றும் 08 வருடங்கள் 142 தடவைகள் மண்ணறையில் மூடிக்கொண்டு எடுத்த பயிற்சியால் சோழன் உலக சாதனை புத்தகத்தில் என்னுடைய பெயரை பதித்துள்ளேன் என மாத்தளை முஹமட் மசூன் முஹமட் முசாதிக் தெரிவித்துள்ளார்.

அவருடனான முழுமையான செவ்வி வருமாறு,

**கேள்வி : ஆறடி மண்ணறையை மூடி அதற்கு மேல் தீ கொளுத்தி சோழன் உலக சாதனை புத்தகத்தில் பெயர் பதித்த உங்களைப்பற்றி?**

**பதில் :** நான் முஹமட் மசூன் முஹமட் முசாதிக். மத்திய மலைநாட்டின் எழில் கொஞ்சும் மாத்தளை நகரின் கொங்காவலை வீதியில் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் திகதி பிறந்தேன். மாத்தளை தேசிய கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்விகற்ற நான் சொந்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளேன். திருமணமான எனக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர்.

**கேள்வி : இந்த சாதனையை புரிய உங்களுக்கு எப்படி துணிச்சல் வந்தது?**

**பதில் :** சிறு வயது முதலே எனக்கு ஏதாவது வித்தியாசமான செயலில் ஈடுபட வேண்டுமென்ற ஆசை இருந்தது. நான் பாடசாலையில் கல்வி கற்கும் போதே பாடசாலையில் ஏதாவது சாதனை ஒன்றை நிலைநாட்ட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. நான் படைக்கும் அந்த சாதனையை உலகில் எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு மூலைமுடுக்கிலும் உலகில் எந்தவொரு சாதனை புத்தகத்திலும் எவரும் இந்த சாதனையை சாதித்திருக்கக் கூடாது. அந்த இலட்சியத்தில் நான் துணிச்சலுடன் செயல்பட்டு சாதித்த சாதனை தான் இது.

இதற்கு எனது மனோவலிமையை உருவாக்க என்னால் மாத்திரம் முடியாது. அதற்கு எனக்கொரு நல்ல ஆசான் தேவைப்பட்டது. ஆனால், அப்படிபட்ட ஒரு ஆசான் இந்த நாட்டில் கிடைக்கவில்லை.

இந்த நாட்டிலிருந்து சாதிக்க முடியாது என்பதால், இந்தியாவுக்கு சென்றேன். அங்கு பல நாட்கள் இது தொடர்பாக ஆராய்ந்தபோது, உஸ்தாத் சாகுல் ஹமீட் ஷாகிப் என்பவரை சந்தித்தேன்.

அவரிடம் பத்து நாட்களாக இந்த கலை பற்றியும் மனோவலிமை பற்றியும் நன்றாக கற்றுக் கொண்டேன். எனினும், தொடர்ந்து இந்தியாவிலிருந்து இதை கற்க பொருளாதார நிலைமை எனக்கு தடையாக இருந்தது. பின்னர் நாடு திரும்பி சில காலம் இங்கிருந்து மீண்டும், இந்தியாவுக்கு சென்ற அவரிடமிருந்து பல அனுபவங்களைக் கற்றுக்கொண்டேன்.

இந்தியாவிலிருந்து செயல்பட முடியாத எனக்கு உஸ்தாத் சாகுல் ஹமீட் ஷாகிப் அவருடைய அனுமதியுடன் அவரின் வழிகாட்டலின் பேரில் இலங்கையில், அவருடைய சீடர்களில் ஒருவரிடம் இந்த மனோவலிமையைப் பற்றி கற்றுக்கொள்ளும்படி பணித்தார். இலங்கைக்கு வந்த நான் குறித்த சீடரிடம் எனது பயிற்சிகளை ஆரம்பித்தேன்.

இப்படியாக சுமார் எட்டு வருடங்கள் எனது மனோவலிமையை அதிகரித்துக் கொள்வதற்காக பல இன்னல்கள், கஷ்டங்களை சகித்துக்கொண்டு நான் பயிற்சியில் ஈடுபட்டேன்.

**கேள்வி : தாங்கள் கூறிய ஆசான்கள் மண்ணறைக்குள் சாதனை புரிவதற்கு அனுமதி வழங்கினரா?**

**பதில் :** இல்லை, மண்ணறை என்பது ஒரு மனிதனின் மரணத்திற்கு பின்னால் பூமிக்குள் உருவாக்கப்படும் நிரந்தர இல்லறம். இந்த இல்லறத்தை உயிருடன் எவரும் தெரிவுசெய்வதில்லை. ஆனால், மண்ணறைக்குள் இருந்து ஒரு சாதனையை படைக்க வேண்டும் என்ற ஆசையை எனது ஆசான்களிடம் கூறியபோது ஆரம்பத்தில் அனுமதிக்க மறுத்தனர். எனினும், எனது மனோவலிமையை பார்த்து உன்னால் இதை சாதிக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி எனக்கு அனுமதி கொடுத்தனர்.

அனுமதி கிடைத்துவிட்டது என்பதற்காக உடனடியாக நான் மண்ணறையில் இறங்கி சாதனை படைக்கவில்லை. 8 வருடங்களாக 142 தடவைகள் மண்ணறையில் இதற்கான பயிற்சியில் ஈடுபட்டேன்.

அதன் பின்னரே ஒரு சாதனைக்கான அனுமதியை உலகரீதியில் மற்றும் இந்த நாட்டிலும் அதற்கான வழிகளை தேடினேன். அதற்கமைய, சோழன் உலக சாதனை புத்தக ஸ்தாபனத்தோடு பேசி அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொண்டேன்.

**கேள்வி : மண்ணறை தயாரிக்கப்பட்டதும் சாதனை படைத்தது பற்றியும் நீங்கள் கண்ட அனுபவங்கள் பற்றியும் கூறுங்கள்?**

**பதில் :** கடந்த 9ஆம் திகதி மாத்தளை மண்ணில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதகுருமார்களுக்கு முன்னிலையில் மாத்தளை நகர ஏ 9 வீதியில் ஒரு மண்ணறை தயார் செய்யப்பட்டது.

இதற்கு மாத்தளை நகர விளையாட்டு துறை அதிகாரி பீ. கே. அலுவிஹார, மாத்தளை பொலிஸார், அரசியல்வாதிகள் என பல அரச அதிகாரிகள் முன்னிலையில் இந்த மண்ணறை தோண்டப்பட்டது. சோழன் புக் உலக சாதனையாளர் நிறுவனத்தின் மூலமாக இது பரிசீலிக்கப்பட்டது. பின்னர், நான் மண்ணறைக்குள் புகுந்தேன். ஒரு சாதாரண பிரேதத்தை மண்ணுக்குள் அடக்கம் செய்வது போன்று பலகையால் மூடப்பட்டது. அதற்கு மேலால் மண்கொண்டு மூடப்பட்டது. பின்னர் அந்த மண்ணறைக்கு மேல் கொளுந்துவிட்டு எரியக்கூடிய நிலையில் தீ மூட்டப்பட்டது. மாலை 6.15 முதல் 7.30 வரை நான் மண்ணறைக்குள் இருந்தேன்.

மண்ணறைக்குள் இருந்த நான் முழுமையாக இறை பிரார்த்தனையுடனே இருந்தேன். அதற்குள் எனக்கு எதுவும் தெரியவில்லை. எனது இந்த சாதனையை முடித்து குறித்த நேரத்தின் பின்னர் என்னை வெளியே எடுத்தார்கள். ஆனால், நான் மண்ணறைக்குள் உட்புகும் போது இருந்த மக்களை விட பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளம் கூடியிருந்ததை அவதானித்தேன். இறைவனின் ஆசிர்வாதம் எனது சாதனைக்கு உந்துசக்தியாக அமைந்தது.



‘‘மாத்தளையில் ஆறடி குழிக்குள் ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள் இருந்தேன். அதற்கு மேல் தீயிட்டு கொளுத்தினர்,,





**நேர்காணல்:
எம். எஸ்.எம். மஸாஹிம்**

www.thamilan.lk
வணிக உலகம்
Business world

# மூன்று CNCI விருதுகளை வென்று பார்ம்கெமி மற்றும் பீட்கெமி நிறுவனங்கள் சாதனை




இலங்கையில் கால்நடை சுகாதார உற்பத்தித் துறையின் முன்னோடியான வரையறுக்கப்பட்ட பார்ம்கெமி (தனியார்) நிறுவனம், இலங்கை தேசிய கைத்தொழில் சபை ஏற்பாடுசெய்த சிறந்த கைத்தொழிலாளர்களுக்கான விருது வழங்கும் விழாவில் இலங்கையின் சிறந்த 10 கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் விருதையும் தேசிய மட்ட, உற்பத்திப் பிரிவில், பாரியளவிலான பிரிவின் சிறந்த தொழில்முயற்சியாளருக்கான விருதையும் வென்று சாதனை படைத்துள்ள நிலையில், அதன் இணை நிறுவனமான பீட்கெமி நிறுவனமும் தேசிய மட்ட, உற்பத்திப் பிரிவில் பாரியளவிவான பிரிவின் சிறந்த தொழில்முயற்சியாளருக்கான விருதை வென்றுள்ளது. விருது விழா கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்சவின் தலைமையில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் அண்மையில் கோலாகலமாக நடைபெற்றது. 20 ஆண்டுகளுக்கு மேல் பார்ம்கெமி நிறுவனம் தமது ஜனரஞ்சக வர்த்தக நாமமான பார்ம்ஸ்டார் உற்பத்திகள், கால்நடை மருந்துகள் மற்றும் கால்நடை உணவு உற்பத்திகளுடன் உள்நாட்டுச் சந்தையோடு சர்வதேச சந்தையினையும் வென்று வெற்றிநடை போடுகிறது.. இந்தியா, உகண்டா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் 2018ஆம் ஆண்டு தொடக்கம் பார்ம்கெமி உற்பத்திகள் விற்கப்பட்டு வருகின்றன.

"மூன்று ஊழியர்களுடன் தொடங்கப்பட்ட இத்தொழில் மிக சீக்கிரமாகவே கால்நடைச் சுகாதார உற்பத்தித் துறைச் சந்தையின் முன்னோடியாக விளங்குவதற்கு பண்ணைச் சார்ந்த பிரச்சினைகளையும் தேவைகளையும் முன்கூட்டியே இனங்காண்பதற்கும் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கும் கொண்டிருந்த ஆர்வமும் அர்ப்பணிப்புமே காரணமாகும்" - என பார்ம்கெமி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உதித்த வனிகசிங்க தெரிவித்தார்.

ISO 9001:2015 மற்றும் WHO GMP போன்ற தரச் சான்றிதழ்களை வென்ற இலங்கையின் ஒரே கால்நடைச் சுகாதார மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனமான பார்ம்கெமி நிறுவனத்தில் முழுமையான கைத்தொழிற்சாலைத் தொகுதிக்கு மேலதிகமாக ஏற்றுமதி உற்பத்திகளுக்கான முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற ISO 9001:2015> GMP மற்றும் FAMI QS தரச்சான்றிதழ்களை வென்ற கைத்தொழிற்சாலையொன்றும் உள்ளது. சிறந்த தேசிய தொழில் முயற்சியாளர் விருதினை 2013ஆம் ஆண்டு வென்றுள்ள இந்நிறுவனம், 2014ஆம் ஆண்டு நடைபெற்ற கமத்தொழில் திணைக்களத்தின் சிறந்த தொழில்முயற்சியாளர் விருது விழாவில் தங்கப்பதக்க விருது, APEA 2014 விருது விழாவில் சிறந்த வளர்ந்துவரும் தொழில்முயற்சியாளர் விருது மற்றும் கடந்த 2019 மற்றும் 2020ஆம் ஆண்டு CNCI விருது விழாவில் ஆண்டுகளாக CNCI விருதினையும் பார்ம்கெமி நிறுவனம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# TVS - BMW Motorrad இணைந்து எதிர்கால தொழில்நுட்பங்கள் மற்றும் மின்சார வாகனங்களுக்கான ஒத்துழைப்புக்கு ஒப்பந்தம்

TVS Motor Company மற்றும் BMW Motorrad ஆகிய இரு நிறுவனங்களும் மின்சார வாகனங்கள் உள்ளிட்ட எதிர்கால இலத்திரனியல் தொழில்நுட்பங்களின் கூட்டு அபிவிருத்தியுடன் தங்கள் நீண்டகால கூட்டாண்மையை விரிவுபடுத்துவதாக அறிவித்துள்ளன. இந்த முடிவின் அடிப்படையில், எதிர்கால BMW Motorrad தயாரிப்புகளின் வடிவமைப்பு, மேம்பாடு, உலகளாவிய தரம், விநியோகச் சங்கிலி முகாமைத்துவம், கைத்தொழில்மயமாக்கல் ஆகியவற்றில் TVS மோட்டார் நிறுவனத்தின் நோக்கு அமைந்திருக்கும். இந்த மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பின் கீழ், இரு நிறுவனங்களும் குறிப்பிடத்தக்க வர்த்தக ரீதியான பலன்களை வழங்குவதற்காக பல்வேறு தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை அடையாளம் கண்டுள்ளன.

BMW Motorrad மற்றும் TVS மோட்டார் நிறுவனம் பல்வேறு சந்தைகளிலுள்ள வாடிக்கையாளர் பிரிவுகளின் உலகளாவிய தேவைகளை மனதிற்கொண்டு, எதிர்கால போக்குவரத்திற்கான தேவையை வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பூர்த்திசெய்வதற்காக இரு தரப்பும் கவனம் செலுத்துவதன் மூலம் பொதுவான தளங்களை உருவாக்கவுள்ளன. இந்த இரண்டு நிறுவனங்களினதும் பிரத்தியேக உற்பத்திகள் இந்த பொதுவான தளங்களில் உருவாக்கப்படவுள்ளதுடன், நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை உலகளாவிய ரீதியில் சில்லறை ரீதியாக விற்பனையை மேற்கொள்ளும். TVS மோட்டார் நிறுவனமானது, வடிவமைப்பு, உற்பத்தி, விநியோகச் சங்கிலித் திறன்களில் பொறியியல் வல்லமையைத் தொடர்ந்து கொண்டுவருவதோடு, சிறந்த தரம் மற்றும் பொருளாதார நன்மைகளையும் வழங்கும். இந்த ஒத்துழைப்பின் மூலமான, முதலாவது தயாரிப்பு எதிர்வரும் 24 மாதங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

TVS மோட்டார் நிறுவனமானது, ஒரு புகழ்பெற்ற இரு மற்றும் மூன்று சக்கர வாகன உற்பத்தியாளர் என்பதுடன், 8.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதிகொண்ட TVS குழுமத்தின் முதன்மையான நிறுவனமுமாகும். TVS உலகளாவிய ரீதியில் 70 நாடுகளில் முன்னிலையில் உள்ளது. அத்துடன், BMW குழுமமானது, அதன் நான்கு தரக்குறியீடுகளான BMW, MINI, Rolls-Royce, BMW Motorrad ஆகியவற்றின் மூலம் மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார்சைக்கிள்கள் துறையில் உலகின் முன்னணி ப்ரீமியம் உற்பத்தியாளராகத் திகழ்கின்றது. குழுமத்தின் உற்பத்தி வலையமைப்பானது 15 நாடுகளில் 31 உற்பத்தி மற்றும் பாகங்களை பொருத்தும் வசதிகளைக் கொண்டுள்ளது. இக்கூட்டாண்மையானது, இரு தரப்பிற்கும் வெற்றிமிக்க ஒன்றாகும்.

TVS மோட்டார் நிறுவனத்தின் இணை முகாமைத்துவப் பணிப்பாளர் சுதர்ஷன் வேணு இது தொடர்பில் தெரிவிக்கையில், "இந்த 9 ஆண்டுகள் எனும் எமது நீண்டகால மூலோபாய கூட்டாண்மையின் மூலம், BMW Motorrad உடன் நாம் பகிர்ந்துகொள்ளும் பொதுவான முக்கியமான மதிப்புமிக்க விடயங்களான தரம், பொறியியல் திறன், புத்தாக்கம், வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றில் கவனம் செலுத்துவதை நாம் எப்போதும் போற்றுகிறோம். இந்தக் காரணிகளுடன் உறுதிமிக்க முன்மொழிவுடன் உயர் தரமான தயாரிப்புகளை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பானது, எமது தளத்திலிருந்து வெளியிடப்பட்ட மூன்று தயாரிப்புகளின் வெற்றிக்கு முக்கியமான காரணியாகும். எதிர்கால போக்குவரத்தின் புதிய உலகமானது, மின்சாரம் மூலமான போக்குவரத்து உள்ளிட்ட மாற்றுத் தீர்வுகள் மூலம் வலுவான செயற்பாடுகளை மேற்கொள்வதை உள்ளடக்கியதாகும். இந்த வெற்றிகரமான கூட்டாண்மையை இலத்திரனியல் வாகனங்கள் உள்ளிட்ட ஏனைய புதிய தளங்களுக்கு விரிவுபடுத்துவதன் மூலம், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் ஆர்வமுள்ள தயாரிப்புகளை உலகளாவிய சந்தைகளுக்கு வழங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்கலாம் என்பதுடன், இரு நிறுவனங்களிடையேயும் ஒப்பிட முடியாத ஒருங்கிணைவையும் ஏற்படுத்தும்" என்றார்.

BMW Motorrad இன் தலைவரான Dr. Markus Schramm கருத்து வெளியிடுகையில், "TVS மோட்டார் நிறுவனத்துடன் பேணிவந்த பெறுமதியான தொடர்பின் அடிப்படையில், நீண்டகால கூட்டாண்மை மற்றும் புதிய தளங்கள், தொழில்நுட்பங்கள் மின்சார வாகனங்கள் உள்ளிட்ட விடயங்களில் கூட்டு அபிவிருத்தியை உள்ளடக்கியதாக எமது ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தை மேலும் விரிவுபடுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். எம் இருவரிடையும் காணப்படும் வலுவான ஒருங்கிசைவானது, sub-500cc பிரிவில் ஈர்க்கக்கூடிய உற்பத்திகளை உருவாக்க வழிவகுத்தது. BMW G 310 R மற்றும் BMW G 310 GS single-cylinder models ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை 1,00,000இற்கும் மேற்பட்ட உலகளாவிய வாடிக்கையாளர்களுடன் நிகரற்ற புகழைப் பெற்றுள்ளன. அந்தவகையில் தற்போதைய ஒத்துழைப்பின் மூலமான எதிர்காலத்தை காண நாம் ஆவலுடன் இருக்கிறோம்" - என்றார்.



சுதர்சன் வேணு - இணை முகாமைத்துவப் பணிப்பாளர், TVS Motor Company, இந்தியா.

கடந்த ஏப்ரல் 2013இல், TVS மோட்டார் நிறுவனம் மற்றும் BMW Motorrad ஆகியன இணைந்து உலகிற்கு sub-500cc மோட்டார்சைக்கிள்களை தயாரிப்பதற்கான நீண்டகால மூலோபாய கூட்டாண்மையில் கையெழுத்திட்டன. இந்த ஒத்துழைப்பு 310cc தளத்தில் மூன்று தயாரிப்புகளை உருவாக்கியுள்ளது. அவையாவன: BMW G 310 R, BMW 310 GS மற்றும் TVS மோட்டார் நிறுவனத்தின் TVS Apache RR 310 ஆகும். 1,00,000இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன், இத்தயாரிப்புகள் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான், சீனா, இந்தியா போன்ற அனைத்து முன்னணி சந்தைகளிலும் சிறப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒத்துழைப்பின் வெற்றியானது, இக்கூட்டாண்மையை விரிவுபடுத்துவதற்கும் விசாலமாக்குவதற்குமான ஒரு படிக்கல்லாக அமைந்துள்ளது.

TVS ஒரு புகழ்பெற்ற வாகனத் தரக்குறியீடாகும். இது புத்தாக்கமான, நம்பகமான, ஆற்றல்மிக்க மோட்டார்சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களை விநியோகிக்கிறது. இந்நிறுவனம் பல்வேறு வகையான புத்தாக்கமானதும் நம்பகமானதுமான மோட்டார் வாகன மாதிரிகளை வழங்குவதுடன், பல்வேறு வண்ணங்கள், செயற்றிறன், ஒப்பிடமுடியாத மைலேஜ் உள்ளிட்ட நுகர்வோரின் விருப்பத்தின் அடிப்படையிலான பரந்த வரிசையை உள்ளடக்கியது. TVS Lanka (Pvt) Limited ஆனது, TVS இரு சக்கர வாகனங்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களுக்கான இலங்கையிலுள்ள ஒரே விநியோகத்தராகும். TVS Lankaஆனது பரந்தளவிலான சேவை வலையமைப்பு மற்றும் பரந்துபட்டதாக கிடைக்கும் உதிரிப்பாகங்களின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குகிறது.

# ஏழாவது தடவையாகவும் இரத்த தான நிகழ்வை நடத்திய வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி





தங்க நகை விற்பனையில் முன்னோடி நிறுவனமாகத் திகழும் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி ஏழாவது தடவையாகவும் ஏற்பாடுசெய்த இரத்த தான நிகழ்வு அண்மையில் நிறுவன வளாகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி நிர்வாகத்தினரும் அதன் பணியாளர்களும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த இரத்த தான நிகழ்வில் சுமார் 210 பேர் கலந்துகொண்டனர். நித்தியகல்யாணி பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வருகை தந்த பொதுமக்களுடன் பனாகொடை இராணுவ முகாமின் பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய்களும் இந்த உயரிய பணியில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். தேசிய இரத்த வங்கியின் பணியாளர்கள், கொழும்பு கிழக்கு ரோட்டரி கழகம் ஆகிய தரப்புகள் இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தார்கள். "வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி சமூகப் பணியாக ஏற்பாடுசெய்த இந்த இரத்த தான நிகழ்வு தொடர்ச்சியாக ஏழாவது தடவையாகவும் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. அடுத்த ஆண்டும் இந்த நிகழ்வை நடத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்" என வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் கொழும்பு கிழக்கு ரோட்டரி கழகத்தின் தலைவருமான ஏ.பீ.ஜெயராஜா தெரிவித்தார்.

நித்தியகல்யாணி ஜுவலரி சமூகப் பணிகளுக்கு தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கி தமது சமூகக் கடமையை நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஒரு நிறுவனமாகும். வெள்ளவத்தை கடற்கரை பகுதிகளை சுத்தப்படுத்தல், சர்வ மத நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பு வழங்குதல், பாடசாலைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவி அளித்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கு இந்நிறுவனம் முன்னுரிமை அளித்து ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறது. கடந்த தீபாவளி திருநாளன்று சுகாதாரப் பணியாளர்களுக்கும் நகரத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவும் சுத்திகரிப்பு பணியாளர்களுக்கும் பாராட்டு விழாவை நடத்தி பரிசுகளையும் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

திகதி 2022.01.26
புதன்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4659
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 11,113,650.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 7 5 9 7 3 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 33,452,454.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2954
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,091,180.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 07 11 70 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,443,163.20

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1007
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,009,400.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ 188,769,942.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 19
வெற்றி இலக்கங்கள் 17 27 63 75
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 04345

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 689
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,027,220.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 07 14 33 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,280,163.20

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1203
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,183,880.00
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 1 8 9 7 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,865,392.80

வாசனா சம்பத Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் 1689
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,273,920.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 65 66 69 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,389,537.10

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்ற முல்லைத்தீவு வீரமங்கைக்கு 'அடங்காமை' திரைப்படக்குழு நிதியுதவி



பாகிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் இலங்கை சார்பில் பங்குகொண்ட முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவி தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

பின்தங்கி வரும் நிலை என்பதை முறியடித்த பெண்கள் வரிசையில் இன்று இந்துகாதேவியின் சாதனை மிகப்பெரியது.

இன்று 28ஆம் திகதி இலங்கைதிரையரங்குகளில் வெளியாகும் தென்னிந்திய முழுநீளத் திரைப்படம் 'அடங்காமை'. இத்திரைப்படத்தின் (வோர்ஸ் பிக்சர்ஸ்) தயாரிப்பாளர்கள் பொன்புலேந்திரன், மைக்கேல் ஜோன்சன், கதாநாயகன் சரோன் ஆகியோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இன்று திரைப்படம் வெளியாகும் நிலையில், இந்த சாதனைப் பெண்ணுக்கு திரைக்குழுமம் சார்பாக (வோர்ஸ் பிக்சர்ஸ் தயாரிப்பாளர்கள்) ரூபா ஒரு இலட்சம் கொடுத்து கௌரவப்படுத்தியிருக்கின்றனர். அதுமட்டுமன்றி, அவரது உயர்கல்வி நடவடிக்கைகளுக்கான தொடர் முயற்சிகளுக்கும் தங்கள் உதவிகளை தொடர்வோம் என கூறியிருக்கின்றனர்.

தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்துவரும் இவர், தனது திறமைமீது கொண்ட நம்பிக்கையை உரமாக்கி இன்று இச்சாதனையை படைத்து நாட்டுக்கும் முல்லைத்தீவு மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பாகிஸ்தான் லாகூரில் இடம்பெற்ற சர்வதேச குத்துச்சண்டை போட்டியில், 25 வயதுக்குட்பட்ட 50 - 55 கிலோகிராம் எடைப்பிரிவுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ள எங்கள் வீரமங்கை கணேஷ் இந்துகாதேவிக்கு 'அடங்காமை' திரைப்படக்குழு சார்பாக எமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என திரைக்குழு உறுப்பினர்களும் கதாநாயகன் சரோனும் இந்துகாதேவியின் இல்லத்திற்கு சென்று வாழ்த்தியுள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னார் செயலகத்தில் இடம்பெற்ற நீதி அமைச்சின் நடமாடும் சேவை



(மன்னார் நகர் நிருபர்)

நீதி அமைச்சின் ஏற்பாட்டில் நீதிக்கான அணுகல் நடமாடும் சேவை நேற்று வியாழக்கிழமை (27) காலை 9.30 மணிமுதல் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நடமாடும் சேவையானது, காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

குறித்த நடமாடும் சேவையில் பல்வேறு திணைக்களங்கள் கலந்துகொள்ளுமென அறிவிக்கப்பட்டபோதும் காணாமல்போனவர் பற்றிய அலுவலகம், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, நீதி அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கு ஆகியவை மாத்திரமே இடம்பெற்றன.

இதன்போது வருகைதந்த மக்கள் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவிடம் சட்ட உதவி ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டதுடன், காணாமல்போனவர் பற்றிய அலுவலகப் பிரதிநிதிகளிடம் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சென்று காணாமலாக்கப்பட்ட உறவுகளின் விபரங்களை பதிவுசெய்துள்ளனர்.

இந்நடமாடும் சேவையில் நீதி அமைச்சின் பிரதிநிதிகள், நீதி அமைச்சின் கீழ் உள்ள திணைக்கள



அதிகாரிகள், மாவட்ட செயலகப் பணியாளர்கள், கிராம அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான ஊர்தி வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு நோக்கி புறப்பட்டது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் பங்கேற்பு





(வவுனியா நிருபர்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் 13ஆவது திருத்தச் சட்டத்தினை நிராகரித்து நாளைமறுதினம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள போராட்டத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வாகன ஊர்தி நேற்று வவுனியாவிலிருந்து முல்லைத்தீவை நோக்கிப் புறப்பட்டது.

காலை 10 மணிக்கு வவுனியா நகரசபையின் முன்பாகவுள்ள பொங்குதமிழ் தூபியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் கற்பூரம் ஏற்றப்பட்டு ஊர்தி பவனி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த ஊர்தி சென்றபோது விழிப்புணர்வு





துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன், வவுனியா நகர் வழியாக ஊர்தி முல்லைத்தீவை நோக்கிச் சென்றது.

இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.



# யாழ். வைத்தியசாலையில் கொரோனா விடுதிகளை ஆரம்பிப்பது குறித்து ஆராய்வு

(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மீளவும் அதிகரித்துச் செல்லும் நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கிவந்த கொரோனா சிகிச்சை விடுதிகளை மீளவும் இயக்குவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் தொற்று அபாயம் அதிகரிக்கும் நிலையில், எடுக்கப்படவேண்டிய முன் ஆயத்த நிலைகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதன்போதே குறித்த விடயம் ஆராயப்பட்டதாக கூறப்படுகின்றது.

போதனா வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை விடுதிகள் இரண்டு ஏற்கனவே இயங்கிவந்த நிலையில் தொற்றாளர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்த நிலையில் அவை பயன்பாடற்று காணப்பட்டிருந்தன.





தற்போது தினசரி நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் குறித்த விடுதிகளை மீளத் திறப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன. கடந்த 4 மாதகாலமாக 10க்கும் குறைவானோரே யாழ்.போதனா வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், அந்த எண்ணிக்கை தற்போது 24ஆக உயர்ந்துள்ளது. எனினும் ஒட்சிசன் தேவைப்பாடான நோயாளிகள் இதுவரை வரவில்லை என கூறப்படுகின்றது.

# பெரியதம்பனை வீதிக்கு தற்காலிகமாக பூட்டு

## மாற்று வழியை பயன்படுத்த கோரிக்கை

(வவுனியா நிருபர்)

வவுனியா பிரமனாளங்குளம் மற்றும் பெரியதம்பனை ஊடான பரப்புக்கடந்தான் வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமையினால் மக்கள் மாற்று வீதியினை பயன்படுத்துமாறு ஒப்பந்தக்காரர்கள் அறிவித்தல் வழங்கியுள்ளனர்.

பெரியதம்பனை மற்றும் மருதங்குழி பகுதியில் வீதிக்கு தார் இடும் பணி நடைபெறவிருப்பதால் நேற்று முன்தினம் (26) பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மறு அறிவித்தல் வரை குறித்த வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

எனவே, இவ்வீதியூடான போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் மடு பிரதான வீதியினை பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா பல்கலைக்கழகம் - கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 36 பேருக்கு கொவிட் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 36 பேருக்கு நேற்று முன்தினம் (26) கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் இருவருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில், 1990 அம்பியூலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்ரிஜன் பரிசோதனையில் அவர்கள் இருவருக்கும் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 50 பேருக்கு எழுமாறாக துரித அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில், மேலும் 18 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அத்துடன், வவுனியா பல்கலைக்கழகத்தில் காய்ச்சல் உள்ளிட்ட கொவிட் அறிகுறிகள் தென்பட்ட மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்ரிஜன் பரிசோதனையில் 16 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 20 பேருக்கும், வவுனியா பல்கலைக்கழகத்தில் 16 பேருக்குமாக 36 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும், தொற்றாளர்களை தனிமைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அத்துடன், மீண்டும் வவுனியாவில் கொவிட் தொற்று அதிகரித்துவரும் நிலையில் மக்கள் பொறுப்புடனும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் செயற்படுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# பிரதேசத்திற்கு ஒரு மின் மயானம் காலத்தின் தேவையாக உள்ளது

## வர்த்தக சங்கத் தலைவர் சிவபாலன்

(சாவகச்சேரி நிருபர்)

பிரதேசத்திற்கு ஒரு மின் மயானம் என்பது காலத்தின் தேவையாக காணப்படுவதாக சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவரும், சாவகச்சேரி மின் மயான அபிவிருத்திக் குழுத் தலைவருமான ந.சிவபாலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற மின் மயான அபிவிருத்திக் குழுத் தெரிவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கொவிட்-19 தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் மின் மயானத்தின் தேவை உணரப்பட்டது. கொவிட் தொற்றுக்குள்ளாகி இறந்தவர்களின் சடலங்களை 15 நாட்களுக்கு மேலாக தகனம் செய்ய முடியாமல் வைத்திருக்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டிருந்தது. இன்றும் அந்த நிலைமை முழுமையாக மாறவில்லை. மாறும் என்பதற்கான உத்தரவாதமும் இல்லை. உலகில் கொவிட் மரணம் நிகழாத நாட்களும் இல்லை.

இந்நிலையில், கட்டாயம் மின் மயானம்



தேவை என்ற நிலை காணப்படுகிறது. ஆரம்பத்தில் வடமாகாணத்தில் ஒரு மின் மயானமே காணப்பட்டது. தற்போது பிரதேசத்திற்கு ஒரு மின் மயானம் தேவை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தவகையில், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் அமையப்பெறவுள்ள மின் மயானத்தால் தென்மராட்சி மக்கள் அனைவரும் பயனடைய முடியும்.

எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். 2000ஆம் ஆண்டு சாவகச்சேரி யுத்த பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்து மீண்டும் வந்தபோது வர்த்தக சங்கம் பிரதேசத்தைக் கட்டியெழுப்ப முன்நின்று செயற்பட்டது. பாடசாலை, வைத்தியசாலை என அனைத்தையும் மீள இயக்க சாவகச்சேரி வர்த்தக சங்கம் முன்நின்று உழைத்தது – என்றார்.

# தனங்கிளப்பு வீடொன்றிலிருந்து சடலம் மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு-மறவன்புலோ பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று முன்தினம் (26) புதன்கிழமை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

தனிமையில் வசித்துவந்த நபரே இவ்வாறு புதன்கிழமை பிற்பகல் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த 61 வயதான சுப்பிரமணியம் தவராசா என்பவரே இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார். மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

## 1987 உயர்தர மாணவர்களால் 1.68 மில்லியன் ரூபா நிதி பங்களிப்பு











(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் கல்வி கற்று இறுதியாக நடைபெற்ற பரீட்சையில் அதிதிறமைச் சித்திகளை பெற்ற மாணவர்களின் உயர்தரக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், கல்லூரியின் 1987ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களது நிதிப்பங்களிப்புடன் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. நேற்று முன்தினம் பாடசாலையின் முதல்வர் எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மங்களேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

குறித்த நிகழ்வில் மத்திய கல்லூரியில் உயர்தரக் கல்வியை தொடரவுள்ள மாணவர்களுக்காக தலா ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில் 12 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதற்காக சுமார் 1.68 மில்லியன் நிதி குறித்த 1987ஆம் ஆண்டின் உயர்தரப் பிரிவு மாணவர்களால் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டதாக இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்குரிய இணைப்பாளரும் கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிபரவியலாளருமான வித்தியானந்தநேசன் தெரிவித்தார்.

இந்நிலையில், குறித்த மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும் என்ற எண்ணத்துடன் மத்திய கல்லூரியின் 1987ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவில் கல்விகற்ற மாணவர்கள் நிதி ஏற்பாடு செய்திருந்தமைக்கமைய இந்தப் புலமைப்பரிசில் திட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் விஜயமோகன் மற்றும் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் சொலமன் ஆகியோர் கலந்து சிறப்பித்து உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனை பிரதேச சபை பிரிவில் ஒன்பது நாட்களாக அகற்றப்படாத கழிவுகள்

## விரைவில் அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை





(பாலமுனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பாலமுனை உதுமா வீதி, பாலமுனை அல் - ஹிதாயா மகளிர் கல்லூரி முன்வீதி, அல் - ஹிதாயா பள்ளி குறுக்கு வீதி, உதுமா குறுக்கு வீதி போன்ற இன்னும் பல வீதிகளில் குவிந்து காணப்படும் குப்பை மூடைகள் நேற்று வரை (27) ஒன்பது நாட்கள் கடந்தும் இன்னும் அகற்றப்படாமல் இருப்பதையிட்டு பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் திண்மக்கழிவு சேகரிக்கும் பிரிவினரால் அகற்றப்படும் குப்பை மூடைகள் அகற்றப்படாமல் வீதிகளில் காணப்படுவதால் அதிலிருந்து வரும் துர்வாடையினால் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், சிறுவர்கள், பொது மக்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

தைப்பொங்கல் மற்றும் பொது விடுமுறைகள் காரணமாக கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 17ஆம் திகதி திங்கட்கிழமை வரையான காலப்பகுதிகளில் அட்டாளைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் வீடுகளில் சேகரித்து வைக்கப்படும் கழிவுகள் பிரதேச சபையினால் அகற்றும் பணிகள் இடம்பெறமாட்டாது என்றும் அதனை அடுத்துவரும் செவ்வாய்க்கிழமை அதாவது 18ஆம் திகதி வழமை போன்று மீண்டும் கழிவுகள் சேகரிக்கும் பணிகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் என்றும் பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கிகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. எனினும், கடந்த ஒன்பது நாட்கள் கடந்தும் வீடுகளில் சேகரித்து வீதியோரங்களில் வைக்கப்பட்டுள்ள கழிவுகள் அடங்கிய மூடைகள் நேற்று வியாழக்கிழமை (27) வரை அகற்றப்படாமல் வீதியோரங்களில் காணப்படுவதால் அதிலிருந்து வரும் துர்நாற்றம் காரணமாக சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது. இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கழிவுகளை அகற்றும் பணியினை துரிதமாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையில் பாலமுனை பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் இருக்கத்தக்க நிலையில், குறித்த விடயம் தொடர்பாக அவர்களது கவனத்துக்கு தெரியப்படுத்தியும் கழிவுகள் நேற்றுவரை அகற்றப்படாமல் இருப்பதையிட்டு பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பாதசாரிகள் கடவை அழிந்துள்ளதால் ஆபத்தை எதிர்நோக்கும் பாடசாலை மாணவர்கள்

## உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள்




(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி பிரதான கடற்கரை வீதியில் மட்/மம/பாத்திமா பாலிக்கா வித்தியாலயத்தை அண்மித்த பகுதியிலுள்ள வீதியில் அடையாளமிடப்பட்டிருந்த பாதசாரிகள் கடவை நீண்ட காலமாக அழிந்த நிலையில் காணப்படுவதால் வீதிகளை கடந்துசெல்லும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் பாரிய ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

வீதியின் இரு பக்கங்களிலும் பாடசாலை காணப்படுவதால் மாணவர் கடந்துசெல்லும் பிரதான பாதையாக இது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதிக போக்குவரத்துகள் இடம்பெறும் பிரதான வீதிகளில் ஒன்றாக இவ் வீதி காணப்படுவதால் பாதசாரிகள் கடவை இல்லாதிருப்பதால் மாணவர்கள் வீதியை கடக்க முற்படும்போது விபத்துகள் ஏற்பட்ட வாய்ப்புகள் இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் விரைவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதசாரிகள் கடவையை சீர்செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



இந்த அரசவிரட்டி அடிச்சாத்தானாம் நாட்டுக்கும் மக்களுக்கும் நிம்மதியாம் எண்டு எதிர்க்கட்சி தலைவர் சஜீத் சொல்லிறத பாத்தா பொல்லு தடிகளோட நாடாளுமன்றத்துக்குளயும், அலரிமாளிகைக்குளயும் உளுபடப் போறாரோ... வாயால விரட்டுற ஆக்களுக்கு பிரதமரப்போல வாயில சத்திர சிகிச்சை செய்யவேண்டி வரும் கவனம் சஜீத் தம்பி..!

# கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தலை அனுஷ்டிக்க அரியநேத்திரன் உட்பட ஐவருக்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவு!

இராணுவத்தால் கடந்த 1987 ஜனவரி 28ஆம் திகதி கொலைசெய்யப்பட்ட கொக்கட்டிச்சோலை இறால் பண்ணை மற்றும் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த 197அப்பாவி மக்களின் 30ஆம் ஆண்டு படுகொலை நினைவு தினம் இன்று 28ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனுக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடையுத்தரவை அவரின் இல்லத்திற்குச் சென்று பொலிஸார் நேற்று முன்தினம் (26) வழங்கியுள்ளனர். தடையுத்தரவில் அரசாங்கத்திற்கு எதிரான தூண்டுதல் செயல் எனவும், தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவும் சூழல் உள்ளதாகவும், தடைசெய்யப்பட்ட இயக்கங்களை மீளுருவாக்கும் செயலாக காணப்படுவதால் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் சட்டக்கோவையின் பிரிவு 106(1)கீழ் தடையுத்தரவு வழங்க கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நளீன் அசோக குணவர்தன மன்றுக்கு அறிக்கை செய்தமையால் இந்த கட்டளை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கட்டளையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சாணக்கியன், கோ.கருணாகரம், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் சி.புஷ்பலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப்பாளர் த.சுரேஷ் ஆகிய ஐவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதான குடும்பஸ்தர் சரீரப் பிணையில் விடுதலை

(வாழைச்சேனை நிருபர்)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புளியங்கண்டலடி வாகரையைச் சேர்ந்த கு.விஜயதாஸ வயது (30) என்ற குடும்பஸ்தர் நேற்று (27) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் எச்.எம்.எம்.பசில் முன்னிலையில் இவ்வழக்கு நேற்று (27) காலை எடுத்துக் கொள்ளப்பட்டபோது நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

அவர் முகப்புத்தகத்தில் அரசினால் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் உருவம் அடங்கிய புகைப்படத்தினை பதிவிட்டதன் பிரகாரம், இவர் 27.11.2020 ஆம் திகதி வாகரை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.




ஒரு பிள்ளையின் தந்தையான இவர் கடந்த ஒரு வருடமும் 2 மாதங்களாகவும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இவர் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் வாகரை பொலிஸ் நிலையத்திற்கு சென்று காலை 9 மணிமுதல் 12 மணிக்குள் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் சட்டத்தரணிகளான எம்.எச்.எம்.றம்சீன், ஹாலிப் றிபான் ஆகியோர் தொடர்ந்து இவ் வழக்கினை முன்னெடுத்து வந்தநிலையில் சட்டத்தரணி ரி.ஜெயசிங்கம் இவர்களுடன் இணைந்து கொண்டு வழக்கினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளியூர் வர்த்தகர்களின் ஆக்கிரமிப்பால் ஏறாவூர் வியாபாரிகளுக்கு பெரும் பாதிப்பு

## தடுத்து நிறுத்துமாறு நகர சபை நிர்வாகத்திடம் தெரிவிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

ஏறாவூர் நகர பிரதேசத்திற்குள் ஊடுருவி வர்த்தகத்தை மேற்கொள்ளும் வெளியூர் வர்த்தகர்களால் உள்ளூர் வர்த்தக சமூகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் ஏறாவூர் நகர வர்த்தகர்கள் சங்கத்தினால் ஏறாவூர் நகர சபை நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நகர சபைத் தலைவர் எம்.எஸ்.நழிம் தலைமையில் நேற்று (27) இடம்பெற்ற ஏறாவூர் நகர சபை மாதாந்த அமர்வின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டது.

ஏறாவூர் வர்த்தகர்களால் ஏறாவூர் நகர சபைத் தலைவருக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் கடந்த சில வருடங்களாக ஏறாவூர் பிரதேச வர்த்தகர்களது பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் வெளிப்பிரதேசங்களில் உள்ளவர்கள் ஏறாவூர் நகர, பிரதேச கடைத்தெருக்களில் உள்ள வர்த்தக நிலையங்களை மிகக் கூடிய விலை கொடுத்து கொள்வனவு செய்வதுடன், வாடகைக்குப் பெற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே பொருளாதார வளம் கொண்ட அந்த வெளியூர் வர்த்தகர்களின் நடவடிக்கைகளால் பொருளாதார நிலையில் மிகவும் நலிவடைந்த உள்ளூர் வர்த்தகர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். சமீப சில நாட்களில் ஏறாவூர் நகர சபைக்கு முன்பாக உள்ள கடைத்தொகுதியொன்றில் வெளியூர் வர்த்தகர் ஒருவரினால் மோட்டார் வாகன வர்த்தக நிலையம் திறக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக ஏறாவூர் நகர பிரதேசத்தைச் சேர்ந்த 25 இற்கு மேற்பட்ட உள்ளூர் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக ஏறாவூர் வர்த்தகர் சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளால் பிரதேச முரண்பாடுகளும் உள்ளூரில் அமைதியின்மையும் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது. எனவே, இந்த விடயம் குறித்து ஏறாவூர் நகர சபை நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

தனது மாதாந்த சபை அமர்வில் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்துக்கொண்ட ஏறாவூர் நகர சபை இந்த விடயத்தில் கடைசியாக சர்ச்சைக்குள்ளான நிலையில் உள்ளூர் வர்த்தகர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியதாகக் குறிப்பிடப்படும் வர்த்தக நிலையத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியை இந்த முரண்பாட்டு விடயம் சுமுகமாகத் தீர்க்கப்படும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதென தீர்மானமெடுத்துள்ளது.

# மட்டு. கரவெட்டி சமுர்த்தி வங்கி வளாகத்தில் சேதனப் பசளை விவசாயச் செய்கை முன்னெடுப்பு




(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு - கரவெட்டி சமுர்த்தி வங்கி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய தோட்டத்தில் விவசாய போதனாசிரியரின் ஆலோசனைக்கு அமைவாக சேதனப் பசளையை பயன்படுத்தி பயிர்கள் நடும் நிகழ்வு நேற்று (27) இடம்பெற்றது.

வங்கி முகாமையாளர் பிரியதர்சினி அசோக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், விவசாய போதனாசிரியர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வங்கி கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனை வழிகாட்டலுக்கமைவாக வங்கித் தோட்டத்தில் தயாரிக்கப்பட்ட சேதனப் பசளையை பயன்படுத்தி இதன்போது கத்தரி, மிளகாய், தக்காளி போன்ற பயிர் கன்றுகள் நடப்பட்டன.

விவசாய பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காக, விவசாயத் திணைக்களத்தால் கடந்த ஆண்டில் கரவெட்டி சமுர்த்தி வங்கிக்கு வழங்கப்பட்ட விவசாய உபகரணங்களை பயன்படுத்தி இப்பயிர்ச்செய்கை தற்போது மேலும் விரிவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த விவசாயிகள் திருமலையில் கௌரவிப்பு




(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளை தெரிவு செய்து கௌரவிக்கும் நிகழ்வு நேற்று(27) திருகோணமலை மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின்போது சிறந்த விவசாயிகளுக்கு பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2021ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து துறைகளில் விவசாயத்தில் சாதனை படைத்த மூன்று பேர் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

சிறந்த விதை உற்பத்தியாளர், சிறந்த நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு பயிர் செய்யும் சிறந்த விவசாயி, சிறந்த வர்த்தக ரீதியிலான கூட்டெரு உற்பத்தியாளர், சிறந்த வர்த்தக ரீதியிலான பழ உற்பத்தியாளர், சிறந்த சேதன விவசாயி என்ற ரீதியில் தெரிவுசெய்யப்பட்டு இவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# கவனிப்பாரற்ற நிலையில் ஓட்டமாவடி சிறுவர் பூங்கா!

## டெங்குநோய் பரவும் அபாயம் உள்ளதாகவும் அச்சம்

## பிரதேச சபை கண்காணிப்பதில்லையென மக்கள் விசனம்




(மீராவோடை நிருபர்)

பாம்புகளின் வசிப்பிடமாகவும் டெங்கு பரவும் இடமாகவும் மாறியுள்ள ஓட்டமாவடி சிறுவர் பூங்காவை புனர்நிர்மாணம் செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட குறித்த சிறுவர் பூங்கா பல வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகிறது.

குறித்த சிறுவர் பூங்காவும் அதனைச் சுற்றியுள்ள சூழலும் புற்கள் முளைத்து காடுகளாக காட்சியளிக்கின்றன. அத்துடன், சிறுவர்கள் பயன்படுத்தும் விளையாட்டு உபகரணங்கள் சேதமடைந்து, அதனுள் மழை நீர்த் தேங்கி நின்று டெங்கு பெருகும் நிலை காணப்படுவதுடன், சிறுவர் பூங்கா பாம்புகளின் வசிப்பிடமாகவும் மாறியுள்ளது.

கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் குறித்த சிறுவர் பூங்காவை பிரதேச சபை நிர்வாகம் கவனம் செலுத்தி, புனர்நிர்மாணம் செய்து முறையாக பராமரித்து சிறுவர்கள் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஓய்வூதிய காப்புறுதித் திட்ட அமுலாக்கலில் மட்டு. மாவட்டம் தேசிய ரீதியில் இரண்டாமிடம்

## மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் தட்டிக்கொண்டது





(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஓய்வூதிய காப்புறுதி அமுலாக்கத் திட்டத்தில் அதிக அங்கத்துவத்தினை இணைத்துக்கொண்டதில் மட்டக்களப்பு மாவட்டம் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் இம்மாவட்டத்தினைச் சேர்ந்த பிரதேச செயலகங்களே தட்டிக்கொண்டுள்ளன.

இதனடிப்படையில் தேசிய மட்டத்தில் இரண்டாம் அடைவினைப் பெற்றுக்கொண்டமைக்காக மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் சமன் ஹன்டரகமவினால் நேற்று முன்தினம் (26) மாவட்ட செயலகத்தில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.


மேலும் தேசிய ரீதியில் அடைவினைப் பெற்றுக்கொண்டமைக்கும் மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டமைக்காகவும் பிரதேச செயலாளர் களுக்கு மெச்சுரைகள் வழங்கப்பட்டன.

இதன்போது மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுக்கொண்ட போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி, இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவபிரியா வில்வரட்னம், மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்ட மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் ஆகியோருக்கு மெச்சுரைகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

மேலும் தனிநபர் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் இலங்கையில் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்ட கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.கான்டீபன் மற்றும் முதல் 10 இடங்களுக்குள் இடம்பிடித்துக்கொண்டமைக்காக அதே பிரதேச செயலகப் பிரிவைச்சேர்ந்த எம்.எல்.சியாத் ஆகியோருக்கும் மெச்சுரைகள் வழங்கப்பட்டன.

இலங்கை சமூகபாதுகாப்புச் சபையின் மாவட்ட இணைப்பாளர் ஏ.எம்.அமீனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராக சிசுபாலன் புவனேந்திரன், சமூக பாதுகாப்புச் சபையின் பிராந்திய இணைப்பாளர் பீ.பிரதீபன் உட்பட பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# சம்மாந்துறை பிரதேச செயலாளரை பாராட்டி சான்றிதழ் வழங்கிவைப்பு


(சம்மாந்துறை நிருபர்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் அதனூடாக வழங்கப்பட்டும் கல்வியில் திறமை காட்டுகின்ற மாணவர்களுக்கான நலவுரித்துகளை பெற்றுக்கொடுக்கும் செயற்றிட்டத்துக்காக அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் செயற்பாட்டில் 2021ஆம் ஆண்டு திறமையாகச் செயற்பட்டு தேசிய மட்ட அடைவை பெற்றுக் கொண்ட சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் சார்பில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபாவை பாராட்டி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தவிசாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சமன் ஹண்டாரகம, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பணிப்பாளர் பி.பிரதீபன், அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரீ.சுதாகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுகள் இந்த சாதனைக்காக பாராட்டுகளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ‘மறக்கப்பட்ட தமிழர் சிலம்பக் கலையும் அதன் வரலாற்றுப் பின்னணியும்’ நூல் அறிமுகம்

(வீரமுனை நிருபர்)

முனைக்காடு அகத்தியம் கலைமன்றத்தின் ஏற்பாட்டில் அமரசிங்கம் குமணன் எழுதிய “மறக்கப்பட்ட தமிழர் சிலம்பக் கலையும் அதன் வரலாற்றுப் பின்னணியும்” நூல் அறிமுக நிகழ்வு கொக்கட்டிச்சோலை பிரதேச கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை (29) காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையிலான இந்நிகழ்வில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி தெட்சணாகௌரி தினேஷ், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஊவா வெல்லஸ பல்கலைக்கழக நூலகரும் விரிவுரையாளருமான கலாநிதி து.பிரதீபன் நூலாசிரியர் அறிமுகத்தினையும் தேசிய கல்வி நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகு தயாநிதி கருத்துரையினையும் ஆற்றவுள்ளார்.

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்
# திணைக்களத்தினரின் பொங்கல் விழா

(வீரமுனை நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் பொங்கல் விழா - 2022, வெல்லாவெளி கண்ணபுரம் ஸ்ரீ நாராயண சுவாமி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ச.நவநீதன் தலைமையிலான இந்நிகழ்வில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், கிழக்கு மாகாண பேரவைச் செயலாளர் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# நிலக்கடலை அறுவடையும் கூட்டெரு உற்பத்தி தொடர்பான விழிப்புணர்வும்




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பழுகாமம் விவசாய விரிவாக்கல் பிரிவுக்குபட்பட்ட களுமுந்தன்வெளிக் கிராமத்தில் நிலக்கடலை அறுவடையும் கூட்டெரு உற்பத்தி தொடர்பான நிகழ்வும் நேற்று (27) நடைபெற்றது.

அப்பகுதி விவசாயப் போதனாசிரியர் பரமேஸ்வரன் சகாப்தனின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ப.பேரின்பராசா, பழுகாமம் பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் ஆர்.டப்ளியூ.லியனாராச்சி, மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் ரி.மேகராசா, மறுபயிர் பாடவிதான உத்தியோகத்தர் என்.லட்சுமன் மற்றும் விவசாய போதனாசிரியர்கள், பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

ஜனாதிபதியின் பசுமை விவசாய செற்பாட்டுத் திட்டத்திற்கமைய இதன்போது கலந்துகொண்டிருந்த விவசாயத் திணைக்கள அதிகாரிகளினால் கூட்டெரு உற்பத்தி தொடர்பான விளக்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதோடு, அப்பகுதியில் செய்கை பண்ணப்பட்டிருந்த நிலக்கடலையும் அறுவடைசெய்யப்பட்டது.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக ரஜாப் நியமனம்



(பொத்துவில் நிருபர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக அக்கரைப்பற்றைச் சேர்ந்த டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாப் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக பணியாற்றிய டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதனையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கே டொக்டர் ரஜாப் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரஜாப் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (26) தனது கடமையினைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டார்.

இதன்போது வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள், வைத்திய அத்தியட்சகர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரை மாலை அணிவித்து வரவேற்றனர்.

வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரஜாப் பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளில் வைத்திய அத்தியட்சகராகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு ஸ்ரீ குமாரத்தன் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் அருள்மிகு ஸ்ரீகுமாரத்தன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக மகாயாக பெரும் சாந்தி விழா எதிர்வரும் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஜெயந்திபுரம் எனும் பதியிலே கோயில் கொண்டுள்ள ஸ்ரீ குமாரத்தன் (முருகன்) பெருமானுக்கும், ஏனைய பரிபார மூர்த்திகளுக்கும் சர்வ மங்களகரமான பிலவ வருடம் தைத்திங்கள் 24ஆம் நாள் (பெப்ரவரி 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை) பூர்வபக்ஷ சஷ்டித் திதியும், ரேவதி நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடிய காலை 08.47 மணிமுதல் 10.26 மணிவரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சைவ நண்மணி சிவஸ்ரீ ஜெ.ஜெயப்பிரதாபன் சர்மா தலைமையில் பிரதிஷ்டா பிரதமகுரு ஆகம கிரியா பாவணர் சிவாச்சார்ய திலகம் வேத தமிழ் மறைச்சுடர் சிவஸ்ரீ நாராயண சண்முகநாதக்குருக்களால் இக்கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்த்தப்பட வுள்ளது.

இந்நிலையில், 02.02.2022ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி, 04.02.2022 மற்றும் 05.02.2022 ஆகிய திகதிகளில் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று, 06.02.2022 ஆம் திகதி கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவுள்ளது.

# காரைதீவு இந்துசமய கற்கைகள் நிறுவகத்தில் ஆன்மீகப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(கல்லடி நிருபர்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவில் அமைந்துள்ள இந்துசமய கலாசாரக் கற்கைகள் நிறுவக சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலையத்தில் முதல் தடவையாக பல ஆன்மீக கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்தவகையில் யோகாசனம், பண்ணிசை, பரதநாட்டியம், வயலின், மிருதங்கம், கதாப்பிர சங்கம், பேச்சாற்றலை வளர்த்தல் என்பவற்றில் பயிற்சியளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி நெறிகள் 6 மாதகாலம் கொண்டதாகவும், வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சிநெறிகள் காரைதீவு சுவாமி விபுலானந்தர் மணிமண்டபத்தில் அமைந்துள்ள இந்துசமய கலாசார கற்கைகள் நிறுவக சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இக்கற்கைநெறிகளுக்கு அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்துகொள்ள முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் கு.ஜெயராஜி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), விபுலானந்தர் பயிற்சி நிலையம், சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றம், காரைதீவு எனும் விலாசத்திற்கு தமது பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தினை உடன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# வாழைச்சேனை ஆயிஷா பாடசாலையில் டெப் கணினி நிலையம் திறந்துவைப்பு




(மீராவோடை நிருபர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் டெப் கணினி நிலையம் புதன்கிழமை 26ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் பாடசாலைகளுக்கு டெப் கணினிகள் வழங்கப்பட்டன.

அவ்வாறு வழங்கப்பட்ட டெப் கணினிகளை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் பயன்படுத்தவே இந்த நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் எம்.ரீ.எம்.பரீட் தலைமையில் இடம்பெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில் அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர் எம்.ஐ.ஆர்.பஸீனா, பிரதி அதிபர் எஸ்.பாறூக்கான், கணினி நிலைய பொறுப்பாசிரியர் எம்.பீ.எம்.அன்வர் உட்பட ஆசிரியர்கள், மாணவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடியில் நாடகப் பயிற்சிப்பட்டறை





(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி பிரதேச செயலக கலாசாரப் பிரிவு மற்றும் காத்தான்குடி பிரதேச கலாசார மத்திய நிலையம் இணைந்து காத்தான்குடி பிரதேச மாணவர்கள், கலைஞர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பயிற்சிப்பட்டறை நேற்று (27) காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் விரிவுரையாளராக கலந்துகொண்டு மாணவர்கள், கலைஞர்களுக்கான நாடகம், இலக்கியம் தொடர்பிலான விரிவுரை மற்றும் பயிற்சிகளை வழங்கினார். இந்நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் எம்.எஸ்.சில்மியா, கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.ஜே.ஜவாஹிர், கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.ஜவாஹிர், கலாசார அபிவிருத்தி உதவியாளர் வீ.சிந்து உஷா, உதவி கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.சர்மிளா, கலாசார மத்திய நிலையத்தின் உத்தியோகத்தர் எம்.ஆர்.எம்.ஹில்மி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருதில் 82 வயது மூதாட்டியை கொலைசெய்துவிட்டு நகைகள் கொள்ளை



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் நேற்று அதிகாலை (27) கொலைச்சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, இலக்கம் 287, புதுப்பள்ளி வீதி, சாய்ந்தமருது-15இல் தனியாக வசித்துவரும் சுலைமான் செய்யது புஹாரி எனப்படும் 85 வயதுடைய மூதாட்டியே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

ஆறு ஆண் பிள்ளைகளின் தாயாரான இந்தப் பெண்மணி, குறித்த வீட்டில் நேற்றிரவு தூங்கிக்கொண்டிருந்தபோது, வீட்டுக்குள் நுழைந்த கொள்ளைக்காரன் அந்தப் பெண்ணை தாக்கி கொலைசெய்துவிட்டு அவரிடமிருந்த நகைகளை திருடிச்சென்றிருப்பதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவரது நான்காவது மகன் வழமைபோன்று காலை உணவை வழங்கத் தாயாரை நோக்கி வந்தபோதே இந்தச் சம்பவத்தை அறிந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு - கொழும்பு நோக்கி அனுமதிப்பத்திரமின்றி பயணித்த தனியார் பஸ்களை வழிமறித்து பரிசோதனை

## 3 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ததுடன் பஸ்களை திருப்பியனுப்பினர்







(திருக்கோவில் நிருபர்)

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு பயணிகளை ஏற்றிச்செல்லும் தனியார் பஸ்கள் சில போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி பயணிப்பதாக அனுமதிப்பத்திரம் உள்ள பஸ் உரிமை யாளர்கள் நேற்று முன்தினம் (26) இரவு மட்டு. கல்லடி பாலத்துக்கு அருகில் வீதியில் இறங்கி அனுமதிப்பத்திரமின்றி பயணித்த பஸ்களை வழிமறித்ததனையடுத்து அங்கு சிலமணி நேரம் பதற்றநிலை ஏற்பட்டது

இதுபற்றி தெரியவருவதாவது,

மட்டக்களப்பு தனியர் பஸ் உரிமையாளர்கள் சிலர் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு கல்லடி பாலத்துக்கு அருகில் வீதியில் இறங்கி போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி பயணிகளை சில பஸ்கள் ஏற்றிச்செல்வதாகவும் அதனை பொலிஸார் தடுத்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கோரி கொழும்பை நோக்கிப் பயணித்த இரண்டு பஸ்களை வழிமறித்ததையடுத்து பதற்றநிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து போக்குவரத்து பொலிஸார் பதற்றநிலையை தடுப்பதற்காக போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச்சென்ற 3 பஸ்களுக்கு வழக்குத் தாக்கல் செய்ததுடன், பஸ்களை மீண்டும் காத்தான்குடிக்கு திருப்பி அனுப்பியுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து 8 தனியார் பஸ்களும், அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, கல்முனை போன்ற பகுதிகளிலிருந்து சுமார் 30 பஸ்கள் உட்பட 38 பஸ்களும் போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பு ஊடாக கொழும்புக்கு பயணித்து வருகின்றது.

இவ்வாறு போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி பயணிக்கும் பஸ்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பொலிஸ் அதிகாரிகளுக்கு கடிதம் வழங்கியுள்ளபோதும் அவர்கள் அதற்கு எதிராக உரிய நடவடிக்கையினை எடுக்கவில்லை என குற்றஞ்சாட்டினர்.

இதனால் போக்குவரத்து அனுமதிப் பத்திரமுள்ள பஸ் உரிமையாளர்கள் அரசாங்கத்துக்கு வரி செலுத்திவரும் நிலையில், சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் தனியார் பஸ் முரண்பாடு காரணமாக பயணிகள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, மட்டக்களப்பு மாவட்ட போக்குவரத்துப் பொலிஸார், மட்டக்களப்பு மாவட்ட வீதிப் போக்குவரத்து பிராந்திய முகாமையாளர் மக்களின் நலன் கருதி இதற்கான ஒரு நிரந்தர தீர்வினை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அனர்த்த முன்னாயத்த அவசரகால பதிலிறுப்பு கற்கைநெறியை பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ்





(அட்டாளைச்சேனை மத்தி, மருதமுனை நிருபர்கள்)

அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களில் அனர்த்த முன்னாயத்த அவசரகால பதிலிறுப்பு தொடர்பான சான்றிதழ் கற்கைநெறியை பூர்த்திசெய்த 140 இளைஞர், யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, பிரதேச செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கிவைத்தார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, காரைதீவு, இறக்காமம், நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை தமிழ், முஸ்லிம் ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் 140 பேருக்கே இச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அக்கரைப்பற்று மாநகர சபையினால் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2021 வரவு-செலவுத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையுடைய மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் எண்ணக்கருவில் புதுப்பள்ளி மேற்கு, நூராணியா, பதூர் வட்டாரங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (27) மாநகர முதல்வர் அதாஉல்லாஹ் அகமட் ஸகி தலைமையில் ஹல்லாஜ் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாநகர சபையின் 2021 வரவு-செலவுத் திட்டத்தின்படி ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சுமார் மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் (3,50,000) நிதிப்பங்களிப்பில் பல்வேறுபட்ட வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், மேற்குறிப்பிட்ட வட்டாரங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட சுமார் 40 பயனாளிகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் தையல் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்களான ஏ.சீ.பதுறுதீன், எம்.ஐ.எம்.அன்சார், ஏ.கே.ஏ.பாஹிம், மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி மற்றும் வட்டார பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த அக்கரைப்பற்றில் உயர்மட்ட கலந்துரையாடல்

## மாநகர முதல்வரால் ஏற்பாடு



(மாளிகைக்காடு நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் விடயங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் அதனை ஒழுங்குபடுத்தி முகாமைத்துவம் செய்தல் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (26) அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லாஹ் அகமட் ஸகி தலைமையில் மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாடசாலை ஆரம்பமாகும் நேரம், முடிவுறும் நேரங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் இடையூறுகள் பற்றியும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளும் எட்டப்பட்டன. பாடசாலைகளில் இதற்கென உப குழுக்கள் நியமிக்கப்பட்டு போக்குவரத்து பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மாணவர்களின் போக்குவரத்தினை சீரமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அக்கரைப்பற்று மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்து நெரிசலினால் பொதுமக்கள், மாணவர்கள் எதிர்கொண்டிருக்கும் அசௌகரியங்களைக் குறைக்கும்வண்ணம் ஆலோசனைகள், தீர்மானங்களை முன்னெடுக்கும் போக்குவரத்துக் குழு இக்கூட்டத்தின்போது நியமிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி, அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் எம்.ஏ.சஜீர், அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உத்தியோகத்தர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு





(மாளிகைக்காடு நிருபர்)

காரைதீவு கல்விக் கோட்டத்தின் கீழுள்ள மாளிகைக்காடு கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலயத்திற்கு பாடசாலை ஆசிரியர் எம்.எவ்.எம்.அஸ்மத்தினால் பாடசாலை மாணவர்களின் பயன்பாட்டுக்காக ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாளிகைக்காடு கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.அஸ்மி மற்றும் பிரதி அதிபர், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# திருகோணமலை மாவட்ட பிரதேச செயலக, கிராம உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு





(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச செயலாளரினால் நேற்று முன்தினம் (26) மாவட்ட செயலகத்தில் இவ்வுத்தியோகத்தர்களுக்கான பாராட்டுக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

யுத்தம் மற்றும் சுனாமியினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்று திருகோணமலை மாவட்டம். திருகோணமலை மாவட்டத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அரச உத்தியோகத்தர்களாகிய நாம் அனைவரும் கைகோர்த்து இயன்றவரை அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவது மிகவும் அவசியமானது - என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரள தெரிவித்தார்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு கிராமப்புற மக்களுக்காக அரசு செயல்படுத்தும் திட்டங்களில் நேரடியாக ஈடுபடும் முக்கிய அரச ஊழியர்கள் என கிராமசேவையாளர்களை குறிப்பிடலாம்.

அந்தவகையில் தம்மிடம் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி வரும் மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அவர்களுக்கு முடிந்தளவு தீர்வுகளை வழங்குவதன் மூலம் அரச சேவையில் பொதுமக்களின் நம்பிக்கையை பெறமுடியும் என மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

மேலும், சிறந்த திறமைகளைக்கொண்ட கிராம உத்தியோகத்தர்களின் மனப்பான்மை மற்றும் தலைமைத்துவத் திறன்களை விருத்திசெய்யும் வகையில் இந்த வருடம் பல பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் இன்றையதினம் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச நிர்வாக சேவையின் கிராம உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுக் கடிதங்கள் வழங்கிவைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பி.ஆர்.ஜயரத்ன, பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலகத்தின் பணியாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# வடக்குத் தலைவர்களின் சதியிலிருந்து காப்பாற்றவே மக்கள் எனக்கு வாக்களித்தார்கள்!

## மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் தெரிவிப்பு

(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாணத்தின் தனித்துவம் பற்றி பேசியவரை வடக்குத் தலைவர்கள் அழிக்க நினைக்கிறார்கள். அவரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இளைஞர்கள் மற்றும் யுவதிகள் அதிகூடிய வாக்கினையளித்து கௌரவத்துடன் சிறையிலிருந்து மீட்டெடுத்தனர் - என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுங்கான்கேணி கிராமத்துக்கான பிரதான வீதியைப் புனரமைப்பதற்கான பணிகளை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

தேர்தலில் போட்டியிட்டவர்களில் அதிகூடிய விருப்பு வாக்கு எனக்கே கிடைத்தது. அதற்குக் காரணம் இந்த மண்ணை நம்பி பணியாற்றியவன். நான் சிறையிலிருந்து வெளியே வரும்போது கொவிட்-19 தொற்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவிட்டது. நாங்கள் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தினை விரைவாக அமுலாக்குவதில் மிகப்பெரிய சங்கடங்கள் உள்ள காலகட்டத்தில் தான் நாம் பயணிக்கிறோம். இருந்தபோதிலும் நாங்கள் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன், ஓர் இணக்கப்பாட்டு அரசியலை மேற்கொண்டு வருகிறோம். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஒரு தனித்துவமான கட்சியாகும்.




அந்தக் கட்சியின் உறுப்பினர் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவுள்ளார். ஓர் இணக்கப்பாட்டுடன் நாங்கள் செயற்படுவதன் காரணமாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட் தொற்றின் காரணமாகவும் கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். பலவற்றைச் செய்து வருகிறோம்.

நான் கல்வைத்து ஆரம்பித்த மட்டக்களப்பு பொது நூலகத்துக்கான நவீனமயப்படுத்தப் பட்ட கட்டடம் தற்போது 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இந்தக் கொரோனா தொற்று அதிகரிக்காத நிலையிருந்தால் எதிர்வரும் மே மாதம் அல்லது அதற்குப் பின்னர் இந்நூலகம் மக்கள் பாவனைக்கெனத் திறந்துவைக்கப்படும். இவ்வாறான நன்மைகள் எமக்குக் கிடைக்க வேண்டுமானால் கல்வியும், பொருளாதாரமும் எமது பின்தங்கிய பகுதியை நோக்கிக் கொண்டுசெல்லப்பட வேண்டும்.

இந்நிலையில், நாங்கள் எமது பிரதேசத்தின் உற்பத்தித்துறையினை சர்வதேசத்தின் தரத்திற்கு கொண்டுசெல்வதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்குத் தேவையான மொழியறிவினை வழங்குவதற்குக் கிராம மட்ட கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

# வி8 வாகனத்தில் செல்லும் அமைச்சர்கள் மக்களை சைக்கிளில் போகச் சொல்கிறார்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பரிகாசம்





சைக்கிளில் வேலைக்குச் செல்லுமாறு அரசாங்கம் மக்களிடம் முன்மொழிகிறது எனவும், இவ்வாறான பிரேரணைகளை முன்வைப்பவர்கள் வி8 போன்ற சொகுசு வாகனங்களில் செல்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் 'மூச்சு' மற்றும் 'ஜனசுவய' ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒன்றிணைந்தாக மீகொட ஆயுர்வேத வைத்தியசாலைக்கு முச்சக்கரவண்டியொன்று நேற்று (27) அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இப்போது போட்டியாக தவிசாளர்கள் இராஜினாமா செய்கிறார்கள் எனவும், திருட்டு, இலஞ்சம், ஊழல், மோசடிகள் இதில் உள்ளமை காரணமாகவே இத்தகைய இராஜினாமாக்கள் செய்யப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கொவிட் அனர்த்தத்தினால் எமது நாடு பாரிய தொற்றுநோயை எதிர்நோக்கியிருக்கும் வேளையில், நாட்டின் காலாவதியான அரசியலை மாற்றியமைத்து எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாட்டுக்கு பெறுமானம் சேர்த்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மற்ற அனைத்து அரசியல் கட்சிகளையும் இந்தப் பயணத்தில் இணைந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார்.

சுபிட்சத்தின் தொலைநோக்கிற்குப் பதிலாக துன்பத்தின் தொலைநோக்கே உருவாக்கப் பட்டுள்ளது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாடு முழுவதும் பால் மா, எண்ணெய் மற்றும் சீமெந்து போன்றன கொள்வனவு செய்ய வரிசைகள் உருவாகியுள்ளன எனவும் தெரிவித்தார்.







கொழும்பு அல்ஹிக்மா கல்லூரி தேசிய பாடசாலையில் பெற்றோருக்கான வலுவூட்டல் செயலமர்வு கல்லூரி அதிபர் எம்.எம்.மஹ்ஸூர் தலைமையில் அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது பொறியியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான நவ்ஷர் கருத்தரங்கை நடத்தினார். (ஏ.எஸ்.எம்.ஜாவித)

# கிளிநொச்சியில் நீதி அமைச்சின் 'நீதிக்கான அணுகல்' நடமாடும் சேவை





**(கிளிநொச்சி நிருபர்)**

'நீதிக்கான அணுகல்' எனும் தொனிப் பொருளில் நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வடமாகாண நடமாடும் சேவை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது

இந்நிகழ்வை நீதி அமைச்சர் அலிசப்ரி மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர்.

நீதி அமைச்சின் கீழுள்ள திணைக்களங் களால் முன்னெடுக்கப்படும் நடமாடும் சேவையில் காணாமல்போனோருக்கான அலுவலகம், சட்ட உதவி ஆணைக்குழு, இழப்பீட்டுக்கான அலுவலகம், ஆட்பதிவுத் திணைக்களம், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் போன்றவற்றின் பங்கேற்புடன் மக்களுக்கான இரண்டு சேவைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

# உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பம் கிடைக்காதவர்கள் இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும்

**(மினுவாங்கொடை நிருபர்)**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

எதிர்வரும் பெப்ரவரி 07ஆம் திகதி இடம் பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனியார் பரீட்சார்த்திகளுக்கு இதுவரையில் விண்ணப்பப் படிவம் கிடைக்காவிடின், www.doenets.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணை அண்மையில் வெளியானது. இதன்பிரகாரம், எதிர்வரும் பெப்ரவரி 07ஆம் திகதிமுதல் மார்ச் 5ஆம் திகதிவரை பரீட்சைகள் இடம்பெறும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட் டுள்ளது.

இம்முறை நாடளாவிய ரீதியில் 3 இலட்சத்து 45 ஆயிரத்து 242 பரீட்சார்த்திகள் உயர்தரப் பரீட்சை எழுதவுள்ளனர். அத்துடன், 2 ஆயிரத்து 438 பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சைகள் அமைக் கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறைகளில் ஊழல் முறைகேடுகளை கட்டுப்படுத்த தந்திரோபாயப் படை

## அறிமுக நிகழ்வில் பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



சிறைச்சாலைகளில் ஊழல் மற்றும் முறைகேடுகளை முறியடிப்பதற்கும், இவற்றுடன் தொடர்புடைய பிரச்சினை களை மிகவும் வெளிப்படையான அணுகுமுறையில் கட்டுப்படுத்துவதற்கும் 'இலங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை' அறிமுகப்படுத்தப்பட்டதாக பாதுகாப்புச் செயலாளரும், ஒழுக்கமான, நல்லொழுக்கமுள்ள மற்றும் சட்டங்களை மதித்து நடக்கும் பிரஜைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான ஜெனரல் கமல் குணரத்ன நேற்று முன்தினம் (26) தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின்கீழ் சிறைச்சாலை நடைமுறை யில் மறுசீரமைப்பை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக 'இலங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை' என்ற கருத்தாக்கம் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கொண்டு வரப்பட்டது. மேலும், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் உறுதியளிக்கப் பட்டவாறு பாதுகாப்பான நாடு, ஒழுக்கம், மற்றும் சட்டத்தை மதித்து நடக்கும் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை சிறைச்சாலைகள் அவசர நட வடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை வீரர்கள் 194 பேர் சிறைச்சாலை சேவையில் இணைந்து கொண்டுள்ளனர். அதற்கான பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறுவோரின் மரியாதை அணிவகுப்பில் பாதுகாப்புச் செயலாளர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

புதிதாக வெளியேறிய 'இலங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாயப் படை' வீரர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், ''உங்கள் உள்ளார்ந்த ஒழுக்கம், தைரியம் மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக நீங்கள் அனைவரும் பணியமர்த்தப்பட்டு பயிற்சி பெற்றுள்ளீர்கள், எனவே, சிறைக் கைதிகளைக் கையாளும்போது சுய ஒழுக்கத்துடன் மனிதாபிமான அணுகு முறையுடன் உங்கள் பணியினை திறம்பட மேற்கொள்ள வேண்டும்'' என அறிவுரை வழங்கினார்.

''இந்தக் கைதிகள், அவர்களின் சிறைக் காலத்தை முடித்து மீண்டும் சமூகத்தில் ஒன்றிணைக்கப்படுவதற்கு முன்னராக பயனுள்ள நபர்களாக மாற்றுவதில் உங்கள் முயற்சிகளும் முக்கிய பங்கு வகிக்கிறது" என அவர் வலியுறுத்தினார்.

# சிறுவர்கள் மத்தியில் நோய் அறிகுறிகள் தென்படுமாயின் வைத்தியரை நாடவும்

## தாமதிக்க வேண்டாமென சுகாதாரப் பிரிவு வலியுறுத்து



நாட்டின் தற்போதைய காலகட்டத்தில் சிறுவர்களின் மத்தியில் நோய் நிலைமை அதிகரித்து வருவதாகவும், அவ்வாறு சிறுவர்கள் மத்தியில் ஏதாவதொரு நோய் அறிகுறி தென்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதாரப் பிரிவு வலியுறுத் தியுள்ளது.

அதற்கமைய, நோய் அறிகுறிகள் உள்ள சிறுவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதை கட்டாயம் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் குழந்தைகள் நல வைத்தியர் சன்ன டி சில்வா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போதைய காலகட்டத்தில் சிறுவர் களின் மத்தியில் ஏற்படும் நோய் நிலைமை களில் அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக, கொவிட்-19, காய்ச்சல், வைரஸ் காய்ச்சல், டெங்கு உள்ளிட்ட நோய் நிலைமைகளை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதனால், சிறுவர்கள் மத்தியில் காய்ச்சல் போன்ற ஏதாவதொரு நோய் அறிகுறிகளை அவதானிக்கக்கூடியதாக இருந்தால், அவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை தவிர்த்து, வீடுகளில் வைத்து ஓய்வை பெற்றுக்கொடுத்தல் மற்றும் வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

அதற்கமைய, குறித்த சிறுவர் ஒருவருக்கு தென்படும் நோய் நிலைமையை அவதானித்து அவர்களுக்கு முன்னெடுக்க வேண்டிய பரிசோதனைகள் தொடர்பில் வைத்தியரினால் பரிந்துரைகள் முன்வைக்கப்படும். வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படலாம் அல்லது அவர்களை வீடுகளிலேயே வைத்து சிகிச்சை வழங்க வைத்தியரினால் ஆலோசனை வழங்கப்படலாம்.

எனவே, காய்ச்சல் நிலைமை உள்ளிட்ட ஏதாவதோரு நோய் அறிகுறி தென்பட்டால் அவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை தவிர்த்துக்கொள்வது கட்டாயமாகும். ஒருசில வைரஸ் காய்ச்சல்களுக்கு விசேட சிகிச்சை முறை கிடையாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஓய்வு, போசாக்கு, நீர் போன்றவற்றை வழங்க வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பும்போது அவர்களின் நோய் நிலைமை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஒருவேளை சிறுவர் ஒருவர் கொரோனா தொற்றுக் குள்ளாகியிருந்தால் நிச்சயமாக, அவர் கல்வி கற்கும் வகுப்பைச் சேர்ந்த ஏனைய மாணவர்களுக்கும் தொற்று பரவலடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வீடியோவைக் காண...

















இந்தியாவின் 73 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவால் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் விசேட வரவேற்பு உபசாரம் நேற்றுமுன்தினம் (26) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகவும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர். மேலும், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், இராஜதந்திரிகள், ஊடக நிறுவனங்களைச் சார்ந்தோர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# சவூதியில் வாழும் இலங்கையர்களால் மருத்துவ உபகரணங்கள் நன்கொடை



மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு அனுப்புவதனை ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகம் கடந்த வாரம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் ஆதரவுடன் ஒருங்கிணைத்தது.

சவூதி அரேபியாவில் வாழும் இலங்கை சமூகத்தின் நன்கொடைகளான இந்த உபகரணங்கள், தூதரகத்தின் வேண்டுகோளின்பேரில் ரியாத்திலுள்ள இலங்கையின் கலாசார மன்றத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு வசதியளிக்கப்பட்டது.

1.2 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான மினி ஒட்சிசன் செறிவூட்டிகளின் ஒன்பது அலகுகள் இந்த நன்கொடையில் உள்ளடங்கும்.

இந்த இக்கட்டான காலங்களில் இலங்கையில் விலைமதிப்பற்ற உயிர்களைக் காக்க உதவும் முகமாக, சரியான நேரத்தில் இந்த நன்கொடைகளை வழங்கியமைக்காக சவூதி அரேபியாவிலுள்ள இலங்கை சமூகம் மற்றும் ரியாத்திலுள்ள இலங்கையின் கலாசார மன்றத்தை தூதரகம் பெரிதும் பாராட்டுவதாக தெரிவித்துள்ளது.

# நாட்டில் மீண்டும் அதிகரிக்கும் எலிக்காய்ச்சல்

(மினுவாங்கொடை செய்தியாளர்)

நாட்டில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவரும் அதேவேளை, இதனால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் உயர்வடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நோய் நிலைமை தொடர்பில் கவனத்தில் கொள்ளாமை மற்றும் வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெறாமை என்பன எலிக் காய்ச்சலால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணம் - என சமூக நல வைத்திய நிபுணர் அமில ஏரங்க சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தற்போது, வயல் பகுதிகளை அண்டி வசிப்பவர்கள் மாத்திரமன்றி, நகர்ப் புறங்களில் வசிப்பவர்களும் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவதாக அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து சிவில் அமைப்புகளுடன் கொழும்பில் பேச்சு

## நாளை நடத்துவதாக இலங்கை மனிதநேய அமைப்பு தெரிவிப்பு

(அஷ்ரப் ஏ. சமத்)

இலங்கை மனிதநேய அமைப்பு, இலங்கையில் தற்பொழுது நிலவி வருகின்ற பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிய ஒரு கலந்துரையாடலை, பல்வேறு சிவில் அமைப்புகளைக் அழைத்து விழிப்பூட்டும் கருத்தரங்கொன்றை நாளை சனிக்கிழமை மாலை 04 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள லோட்டஸ் அறையில் ஏற்பாடுசெய்துள்ளது - என பேராசிரியை கலாநிதி சந்திமா விஜயகுணவர்தன நேற்றுமுன்தினம் (26) கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த ஊடக மாநாட்டில் மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றும் டொக்டர் இசுரு பண்டார, பொறியியலாளர் அனுராத தென்னக்கோன், டொக்டர் சமல் சஜ்ஜீவ ஆகியோரும் கருத்து தெரிவித்தனர்.

கலாநிதி சந்திமா இங்கு கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் உள்ளூர் உற்பத்திகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 80 வீதமான செலவினங்கள் கடனடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இதனால் நமது ஒவ்வொரு தலைக்கும் அடமானம் வைக்கப்பட்டுள்ளோம். நமது எதிர்கால பரம்பரையினருக்கு இந்த நாட்டில் அமைதியாக வாழ முடியாமல் போய்விடும். எமது நாட்டில் பரம்பரையாக இருந்துவந்த அரச சொத்துகள், இயற்கை வளங்கள் வெளிநாட்டவர்களினால்



சூறையாடப்படுகின்றன. அவற்றை அடமானம் வைத்து கடன் பெறப்படுகின்றன. எமது நாடு சகல வளம் பொருந்திய இயற்கையான அழகானதொரு நாடு. இந்த நாட்டை நேசித்தவர்கள் பலர் உலகில் உள்ளனர்.

இந்நாட்டில் சிறந்ததொரு பொருளாதாரக் கொள்கை இருக்குமானால் நாம் அந்நிய நாட்டவர்களிடம் கையேந்தத் தேவையில்லை. இந்த அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையினால் நாம் நாளாந்தம் நமது நாட்டை இழந்து வருகின்றோம்.

நமது தேயிலை, இறப்பர், வாசனைப் பொருட்கள், விவசாயம் போன்ற உற்பத்திகள், இயற்கைத் துறைமுகம் மற்றும் சுற்றுலாத்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. நாம் 80 வீதமான பாவனைப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்ததே பெறுகின்றோம். உதாரணத்திற்கு பல் குத்தும் ஈர்க்களைக்கூட வெளிநாடுகளிலிருந்து நாம் பாவிக்கின்றோம். நமது முன்னோர்கள் நமக்கு காட்டித் தந்த விவசாயத்துறையில் நாம் தன்னிறைவு கண்டு நமது உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டவர் கொள்வனவு செய்து அந்நியச் செலவாணியை பெற்றுவந்த வரலாறு உள்ளது. எமது நாட்டைப் பார்த்து சிங்கப்பூர் முன்னேறியது. ஒரு காலத்தில் சிங்கப்பூர் நாட்டவர் நமது நாட்டுக்கு வைத்தியம் பெற வருகை தந்த வரலாறு உள்ளது. தற்பொழுது ஏற்றுமதி இல்லாமல் நாம் பணத்தாள்களை அச்சடித்து நாட்டுக்குள் பணப்புழக்கதற்கு விடும் அளவுக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

சுற்றுலாத்துறை மட்டும்தான் நமது நாட்டுக்கு டொலர் வருமானம் பெற்றுத் தந்தவை அல்ல. ஏனைய அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் சுறறுலாத்துறை இல்லாமலே முன்னேற வில்லையா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

அதற்காகவே புத்திஜீவிகள் தமது விவசாயிகள், சிவில் அமைப்பாளர்கள், வியாபார சமூகங்களை அழைத்து எதிர்வரும் 29ஆம் திகதி கலந்துரையாடவுள்ளோம். அதில் நீங்களும் கலந்துகொண்டு உங்களது கருத்துகளை முன்வையுங்கள். அதனை அரசுக்கு தெளிவுபடுத்துவோம் - என கலாநிதி சந்திமா கூறினார்.

# தூதுவர் ஷானிகா போர்த்துக்கல் குடியரசின் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ்களை கையளிப்பு

போர்த்துக்கல் லிஸ்பனிலுள்ள அஜூடா தேசிய அரண்மனையில் நடைபெற்ற விழாவில், தூதுவர் பேராசிரியர் ஷானிகா ஹிரிம்புரேகம தனது நற்சான்றிதழ்களை போர்த்துக்கல் குடியரசின் ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ டி சூசாவிடம் கையளித்தார்.

தனது நற்சான்றிதழ்களை கையளித்த தூதுவர் பேராசிரியர் ஹிரிம்புரேகம, போர்த்துக்கல் குடியரசின் ஜனாதிபதிக்கான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், போர்த்துக்கல் மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவை, குறிப்பாக, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் மேலும் வலுப்படுத்துவதற்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.



மேலும், 1505 முதல் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று உறவில் கவனத்தை ஈர்த்த தூதுவர், போர்த்துக்கேயர்கள் கோட்டை இராச்சியத்துடன் வர்த்தக உறவுகளை நிறுவியமையை நினைவுகூர்ந்தார். 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயர்கள் குறிப்பாக, இலாபகரமான சுவையூட்டி வர்த்தகம் போன்ற தமது வர்த்தக நலன்களை பாதுகாக்கும் நோக்கத்தை நோக்கி அனுப்பப்பட்டதாகவும், 1500 களின்போது, மொழி, இசை மற்றும் உணவு ஆகியவற்றைப் பொறுத்து அப்போது சிலோன் என அறியப்பட்ட இலங்கையில் போர்த்துக்கேயச் செல்வாக்கு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனது பிரதிபலிப்பில்,இரு நாடுகளுக்கும் இடையிலான குறிப்பிடத்தக்க வரலாற்று உறவுகளின் காரணமாக இரு நாடுகளும் இருதரப்பு மற்றும் பன்முக அரங்கில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்காக ஒன்றாக இணைந்து பணியாற்ற முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தூதுவர் பேராசிரியர் ஹிரிம்புரேகமவுடன் பரிஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளரான திருமதி துலன்ஜி ஹேரத் இணைந்திருந்தார்.

அண்டோரா, போர்த்துக்கல், ஸ்பெயின், மொராக்கோவிற்கு ஒரே நேரத்தில் அதிகாரமளிக்கப்பட்டு, யுனெஸ்கோவிற்கு இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக தூதுவர் பேராசிரியர் ஹிரிம்புரேகம இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உமர் பாரூக் முஸ்லிம் வித்தியாலயத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு







ரஸீன் ரஸ்மின்

புத்தளம் புளிச்சாக்குளம் உமர் பாரூக் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் முஹம்மது ஷரீக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், அவரது பிரத்தியேகச் செயலாளர் ஜமால்தீன் ஜௌசி, பத்துளுஓயா பகுதிக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவர் முஹம்மது சியாம், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் முஹம்மது ஜெஸீர் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

புத்தளத்தில் இயங்கிவரும் பி.சி.எம்.எச்.அமைப்பினால் ஒவ்வொரு வருடமும் புத்தளம் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுவரும் நிலையில், இந்த வருடமும் குறித்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# மல்லிகை ஜீவா மறைந்து இன்றுடன் ஓராண்டு!

**ஜீவாவை நினைவுகூரும் புதிய இரண்டு நூல்கள்**


யாழ்ப்பாணத்தில் சாதாரண மத்திய தரக் குடும்பத்தில் பிறந்து உயர்கல்வியை பெறுவதற்குரிய வாய்ப்பு வசதிகளை இழந்து அறிஞர்களினதும் முற்போக்கு எழுத்தாளர்களினதும் நூல்களை வாசித்துப்பெற்ற அனுபவங்களினாலேயே மேதையாக வலம்வந்து ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு கடுமையாக உழைத்திருக்கும் மல்லிகை ஜீவா, கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி கொழும்பில் தமது 93 வயதில் மறைந்தார்.

ஜோசப் – மரியம்மா தம்பதியருக்கு 1927ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி பிறந்திருக்கும் டொமினிக் ஜீவா, மல்லிகை எனும் கலை, இலக்கிய மாத இதழை 1966ஆம் ஆண்டுமுதல் 2012ஆம் ஆண்டுவரையில் வெளியிட்டார். இதுவரையில் நானூறுக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளியாகியிருக்கின்றன.

இவ்விதழ்களை நூலகம் ஆவணகத்தில் பார்க்கமுடியும்.

டொமினிக் என்பது அவரது இயற்பெயர். தமிழகத்திலிருந்து பொதுவுடமை இயக்கத்தோழர் ஜீவானந்தம், பிரித்தானியர் காலத்தில் தலைமறைவாக இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவரது கருத்துகளினால் கவரப்பட்ட டொமினிக், தனது பெயருடன் ஜீவா என்ற எழுத்துகளையும் இணைத்துக்கொண்டார்.

மல்லிகை ஆசிரியராகவும் பதிப்பாளராகவுமிருந்து சுயமுயற்சியோடு அதனை வெளியிடத்தொடங்கியதும் மல்லிகை ஜீவா என பரவலாக அறியப்பட்டார்.











அவரது இந்த நாமம் இலங்கையெங்கும் மட்டுமல்ல, தமிழகத்தில் இலக்கியவாதிகள் மத்தியிலும் பரவியிருந்தது.

தமது இலக்கிய வாழ்வில் வெள்ளிவிழா, மணிவிழா, பவளவிழா, அமுத விழா கண்டிருக்கும் ஜீவா இன்னும் சில வருடங்கள் வாழ்ந்திருப்பின் நூற்றாண்டு விழாவும் கண்டிருப்பார்.

ஜீவா, மல்லிகை இதழின் ஊடாக ஈழத்து இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் பலர். இலங்கையில் மூவின இலக்கியவாதிகளினாலும் ஆழமாக நேசிக்கப்பட்டவர்.

சிறுகதை இலக்கியத்திற்காக ( தண்ணீரும் கண்ணீரும் ) இலங்கையில் முதல் முதலில் தேசிய சாகித்திய விருது பெற்றவரான ஜீவா, பின்னாளில் சாகித்திய ரத்னா, தேசத்தின் கண் முதலான உயரிய விருதுகளும், கனடா இலக்கியத்தோட்டத்தின் இயல் விருதும் பெற்றவர்.

மகாகவி பாரதி மறைந்து சுடுகாடு செல்லும்போது விரல்விட்டு எண்ணத்தக்கதாக ஒரு சிலர்தான் உடன் வந்தனர்.

கொரோனோ பெருந்தொற்று காலத்தில் ஜீவா கொழும்பில் மின்மயானத்தில் தகனமாகும்போது ஒரே ஒரு ஜீவன்தான் அவரது பூதவுடல் தாங்கிய பேழையை பார்த்துக்கொண்டு நின்றது.

அந்த ஜீவன், ஜீவாவின் ஏக புதல்வன் திலீபன்.

மல்லிகை ஜீவா எம்மத்தியில் நினைவுகளாக வாழ்ந்துகொண்டேயிருப்பார்.

மல்லிகை ஜீவா மறைந்து ஓராண்டாகியிருக்கும் இத்தருணத்தில் அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மேற்கிலங்கையைச் சேர்ந்த கவிஞர் மேமன்கவி, மற்றும் முருகபூபதி ஆகியோர் இரண்டு நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

கொழும்பில் வதியும் மேமன்கவி, டொமினிக் ஜீவாவும் நானும் என்ற நூலை ஜீவா மறைந்த தினத்தில் வெளியிடுகிறார். தனக்கும் ஜீவாவுக்குமிடையே நீடித்திருந்த இலக்கிய நட்புறவை இதில் விரிவாக பதிவுசெய்துள்ளார்.

அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் முருகபூபதி, வாழும் வரலாறு மல்லிகை ஜீவா என்ற நூலை இந்த வாரம் இறுதியில் முதலில் மின்னூலாக வெளியிடுகிறார்.

ஜீவாவின் வாழ்வில் நிகழ்ந்த சுவாரஸ்யமான சம்பவங்கள் இதில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

( தகவல்: முருகபூபதி )

# உலக செய்திகள்



## தவளைகளின் கால்களுக்கு கொக்டெய்ல் மருந்து!



ஆபிரிக்க காடுகளில் வாழும் கால்களை இழந்த தவளைகளுக்கு கொக்டெய்ல் மதுபானத்தை மருந்தாகப் பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகண்டுள்ளனர். இதன் மூலம் தவளைகளின் கால்கள் வளர்ச்சியடைவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐந்து வகையான மதுபானவகைகளைச் சேர்த்து செய்யப்பட்ட கொக்டெய்லை, கால்களை இழந்த தவளைகளுக்கு மருந்தாகப் பயன்படுத்தியுள்ளனர். சுமார் 18 மாதங்களின் பின்னர் அவற்றின் கால்கள் வளர்ச்சியடைந்துள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அந்தக் கால்களைப் பயன்படுத்தி தவளைகளால் நீந்தவும் முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டப்ட்ஸ், மெஸ்ஸச்சுசெட்ஸ், ஹாவர்ட் ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களால் இந்தப் பரிசோதனை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் பயங்கரவாதியாக அறிவிப்பு




ரஷ்யாவில் சிறைப்படுத்தப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னியை பயங்கரவாதியாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பானது, உலக நாடுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இதற்கு கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவில் ஜனாதிபதி புட்டினையும் அவரது அரசையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி.

இவரை கொலை செய்யும் நோக்கில் கடந்த 2020ஆம் ஆண்டு விமான நிலையத்தில் அவர் குடித்த டீயில் நோவிசோக் என்று இரசாயன நஞ்சை கலந்து கொடுத்ததில் அவர் கிட்டத்தட்ட இறக்கும் நிலைக்கு சென்றார். இந்த சதியின் பின்னணியில் ஜனாதிபதி புட்டினின் அரசு இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. அதனைத் தொடர்ந்து இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக ஒன்று திரண்டன.

இதற்கிடையில் நவால்னிக்கு நஞ்சு கொடுக்கப்பட்ட பின்னணியில் ரஷ்ய அரசாங்கம் இருப்பதாக அமெரிக்க உளவுப் பிரிவு ஆய்வு செய்து முடிவுக்கு வந்தது. அதன் பிறகு மூத்த ரஷ்ய அரச அதிகாரிகளுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது. இதனிடையே இரசாயனத் தாக்குதலுக்கு ஆளான நவால்னி ஜெர்மனியில் சிகிச்சைப் பெற்று கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதி மீண்டும் ரஷ்யா திரும்பியபோது அவர் விமான நிலையத்திலேயே கைது செய்யப்பட்டார்.

பழைய பண மோசடி வழக்கில் அவரை கைது செய்ததாக ரஷ்ய பொலிஸார் கூறிய நிலையில், இந்த வழக்கில் அவருக்கு இரண்டரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கடந்த பெப்ரவரி மாதம் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, தற்போது நவால்னி மொஸ்கோ சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சிறையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னியை ரஷ்யா பயங்கரவாதியாக அறிவித்துள்ளது. நவால்னியின் ஆதரவாளர்கள் பலரும் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். ரஷ்ய அரசின் இந்த நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## பிரான்சில் காட்டுத் தீயாய் பரவும் கொரோனா



**ஒரே நாளில் 5 இலட்சம் பேருக்கு தொற்று**

பிரான்சில் கொரோனா உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 77 இலட்சத்து 30 ஆயிரத்து 556 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் 24 மணி நேரத்தில் ஐந்து இலட்சத்து ஓராயிரத்து 635 பேருக்கு கெரோனா உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து, அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்துள்ளது.

இதுதவிர, நேற்றுமுன்தினம் 364 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்தனர். அத்துடன், அந்த நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 747ஆக அதிகரித்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கு இதுவரை 51 இலட்சத்து 62 ஆயிரத்து 757 பேர் கொரோனாவிலிருந்து முழுமையாக குணமடைந்துள்ளனர். மேலும், ஒரு கோடியே 24 இலட்சத்து 38 ஆயிரத்து 52 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 3,760 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

## ஆப்கானிஸ்தானுக்கு உதவ மேற்குலக நாடுகள் ஆலோசனை

ஆப்கானிஸ்தானுக்கு மனித நேய அடிப்படையில் உதவி செய்வது பற்றி மேற்குலக நாடுகள் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் ஆலோசனை நடத்தியுள்ளன.

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் விலகியதையடுத்து, அங்கு தலிபான் பயங்கரவாதிகள் கையில் ஆட்சி அதிகாரம் சிக்கியுள்ளது. இதையடுத்து, அந்த நாட்டில் பெண்கள் மீதான வன்முறை, தாக்குதல், கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.



அத்துடன், அங்கு பஞ்சம் உருவாகியுள்ளது. பொதுமக்கள் தமது பிள்ளைகளையும் சிறுநீரகங்களையும் விற்று பட்டினியைப் போக்குவதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், இது குறித்து மேற்குலக நாடுகள் ஆராய்ந்துள்ளன.

நிதி நெருக்கடி மற்றும் உணவு பஞ்சத்தை சமாளிக்க தங்களுக்கு உதவ வேண்டும் என, பல நாடுகளிடமும் தலிபான்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இந்நிலையில், ஆப்கானுக்கு மனித நேய அடிப்படையில் உதவிகள் செய்வது பற்றி, ஐரோப்பிய நாடான நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்த கூட்டத்தில் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளின் தூதர்கள் பலர் பங்கேற்றனர்.


இதில், ஆப்கான் வெளியுறவு அமைச்சர் அமிர்கான் முட்டகியும் பங்கேற்றார். மூன்று நாள் தொடர்ந்து நடந்த இந்தக் கூட்டம், நேற்று முன்தினம் நிறைவு பெற்றது. இந்தக் கூட்டத்தில், ஆப்கானுக்கு மனித நேய உதவிகள் செய்வது பற்றி மேற்கத்தேய நாடுகள் ஆலோசித்துள்ளன.

## உலகின் வயதான ஆண் கொரில்லா மரணம்

உலகின் வயதான ஆண் கொரில்லாவாக கருதப்படும் ஓஸி, தனது 61ஆவது வயதில் உயிரிழந்துள்ளது. அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் உள்ள எட்லாண்டா உயிரியல் பூங்காவில் வாழ்ந்து வந்த கொரில்லாவே உயிரிழந்துள்ளது.

ஓஸி, சுமார் 20 தலைமுறைகளைக் கண்டிருப்பதாக உயிரியல் பூங்காவின் அதிகாரிகள் தெரிவித்தனர். அதன் இணை குரங்கு இறந்து சில நாட்களிலேயே ஓஸியும் மரணித்துள்ளது.

இந்த கொரில்லா, சில நாட்களாக சோர்வுற்ற நிலையில் இருந்ததாகவும் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எவ்வாறெனினும், இதன் உயிரிழப்பு குறித்த காரணத்தை அறிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது.





அவுஸ்திரேலிய தேசிய தினமான நேற்றுமுன் தினம் நாடு முழுவதிலும் கொண்டாட்டங்கள் இடம் பெற்றன. சிட்னி கடற்கரையில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்ததுடன் களியாட்டங்களிலும் ஈடுபட்டனர்.



பெரு நாட்டின் டொங்கா நகர் கடற்பரப்பில் ஏற்பட்ட பாரிய எண்ணெய்க் கசிவை சுத்தம்செய்யும் ஊழியர்கள்.

## காதல் மாதத்தை வரவேற்கும் கிலி ஜென்னர்!

அமெரிக்காவின் பிரபல மொடல் அழகியான கிலி ஜென்னர் காதல் மாதத்தை வரவேற்கும் வகையில் வெளியிட்டுள்ள புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்படுகிறது.


காதலர் தினத்தையொட்டி தனக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஆடையுடன் அவர் அந்தப் புகைப்படத்தில் காட்சியளிக்கிறார்.

பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினம் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் பிரத்தியேக வடிவமைப்புடன் கூடிய ஆடைகளுடன் உலக அழகிகள், நடிகைகள், மொடல்கள் புகைப்படங்களை வெளியிடுவதுண்டு. அந்த வகையில் கிலி ஜென்னர் முந்திக்கொண்டு தனது புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.



இந்தோனேஷியா என்டங் கிராமத்தில் குப்பைகளில் பெறுமதியான பொருட்களைத் தேடும் ஏழைச் சிறுவன்.





ரஷ்ய படைகள் உக்ரைனில் ஊடுருவியுள்ள நிலையில் கடும் பனிப்பொழிவுக்கு மத்தியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவ வீரர்.

# ஓமிக்ரொன் பாதிப்பால்

## நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு

ஓமிக்ரொன் வகை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பது இந்திய மருத்துவ கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்.) அண்மையில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஓமிக்ரொன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களிடம் உருவாகிய நோய் எதிர்ப்பு சக்தி ஓமிக்ரொன் மட்டுமின்றி டெல்டா வகை கொரோனா வைரஸை சமாளிப்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.


ஓமிக்ரொன் தொற்றால் உருவாகும் நோய் எதிர்ப்பு சக்தி, டெல்டா வகை வைரஸ் தொற்றை சமாளிப்பது மட்டுமின்றி டெல்ட்டா வகை தொற்றுகளைக் குறைக்கவும் செய்யலாம். இதன்மூலம் டெல்ட்டா வகை கொரோனா தொற்று அதிகம் பரவுவது தடுக்கப்படலாம். இந்த ஆய்வு ஓமிக்ரொன் வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி இயக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இதுதொடர்பாக இந்திய மருத்துவ கவுன்சில் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் 39 பேரை இந்த ஆய்வுக்குட்படுத்தினர். இதில் 25 பேர் கொரோனாவுக்கு எதிரான அஸ்ட்ராசெனெகா தடுப்பூசியின் இரு தவணைகளை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள். 8 பேர் பைசர் தடுப்பூசியின் இரு தவணைகளை செலுத்திக் கொண்டவர்கள். 6 பேர் எந்தவித தடுப்பூசியும் செலுத்தாதவர்கள்.

இந்த 39 பேரில் 28 பேர் அரபு நாடுகள், தென்னாபிரிக்கா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் ஓமிக்ரொன் வகை தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த ஆய்வில் அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி வகைகளான ஐ.ஜி.ஜி., என்.ஏ.பி. ஆகியவை குறிப்பிட்ட அளவில் அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டது.

இதுகுறித்து ஐ.சி.எம்.ஆர். ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது, தடுப்பூசி செலுத்தாதவர்கள் குறைந்த எண்ணிக்கையிலும் தொற்றால் பாதிக்கப்பட்டு குறுகிய காலமே ஆனவர்களும் இந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். ஓமிக்ரொன் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி செலுத்தாதவர்களின் உடலில் குறைந்த அளவு நோய் எதிர்ப்பு சக்தி உருவாவதற்கு இதுவே முக்கிய காரணமாக இருக்கலாம் என்றனர்.

# குழந்தைகளுக்கும் கூன் விழும் ஆபத்து: எச்சரிக்கை விடுக்கும் தமிழக டாக்டர் சதீஷ்



ஒன்லைன் வகுப்புகளில் தொடர்ந்து பங்கேற்கும் பாடசாலை சிறுவர்களுக்கு கூன் ஏற்படும் நிலை இருக்கிறது. அதை தவிர்ப்பதற்கான பயிற்சிகளை குழந்தைகள் செய்வது அவசியம் என்கிறார், கோவையை சேர்ந்த இயன்முறை மருத்துவர் மற்றும் கண் பயிற்சி நிபுணர் சதீஷ்குமார்.

கொரோனா தொற்று காரணமாக, பாடசாலை, கல்லூரி வகுப்புகள் ஒன்லைன் முறையில் நடத்தப்படுகின்றன. இதில் பங்கேற்கும் மாணவ, மாணவியர், பல மணி நேரம் லெப்டொப், கம்ப்யூட்டர், மொபைல் போன் பயன்படுத்த வேண்டியுள்ளது. அவர்களுக்கு, கண் பார்வை குறைபாடு ஏற்படுவதுடன், கூன் விழும் அபாயமும் இருக்கிறது. இதுதொடர்பாக, இயன்முறை மருத்துவர் சதீஷ்குமார் கூறியதாவது:

ஒன்லைன் வகுப்பு, மொபைல் போனில் கேம்ஸ் விளையாடுவது, டியூஷன் என எல்லாம் சேரும்போது, தினமும், 8 முதல் 10 மணி நேரம் மொபைல் அல்லது கணினியில் சிறுவர்கள் செலவிடுகின்றனர்.

இதனால் சிறுவர்கள் பலருக்கு பார்வை குறைபாடு ஏற்படுகிறது. கிட்டப்பார்வை அதிகரிக்கிறது. பள்ளிகளுக்கு நேரில் செல்லும்போது, பாதிப்பின் வீரியம் முழுவதுமாக தெரியும். இப்பிரச்சினைகளை தவிர்க்க, முறையான பயிற்சி அவசியம்.

எந்த முறையில் குழந்தைகள் ஒன்லைன் வகுப்பில் உட்கார வேண்டும், கணினி அல்லது மொபைல் போன் எந்த பொசிசனில் இருக்க வேண்டும், எத்தனை தொலைவில் இருக்க வேண்டும், வெளிச்சம் எப்படி இருக்க வேண்டும், மின் விளக்கு வெளிச்சம் எப்படி இருக்க வேண்டும், எந்த இடத்தில் விளக்கு இருக்க வேண்டும், எத்தனை நிமிடங்களுக்கு ஒரு முறை ஓய்வெடுக்க வேண்டும், என்ன முறையில் பயிற்சி செய்ய வேண்டும் என்பதை பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். உரிய பயிற்சி செய்தால், குழந்தைகளுக்கு பார்வை குறைபாடு ஏற்படுவதை தவிர்க்க முடியும்.

இது மட்டுமின்றி, குழந்தைகள் ஒரே இடத்தில் பல மணி நேரம் உட்கார்ந்து, குனிந்தபடியே இருப்பதால், கூன் விழும் அபாயத்துக்கு தள்ளப்படுகின்றனர்.

முதுகெலும்பின் மேற்பகுதி ஒரே கோணத்தில் பல மணி நேரம் தொடர்ந்து இருந்தால், அப்படியே பிடித்துக்கொண்டு விடும். எலும்பு வளர்ச்சி என்பது செடி வளர்வது போல. ஆரம்பத்தில் கோணலாகி, கூன் விழுவதுபோல் குனிந்திருப்பதை கவனிக்காமல் விட்டால், அதுவே நிரந்தர நிலையாகி விடும்.

அச்சம் காரணமாக குழந்தைகளை வெளியே விளையாடவோ, வேறு உடற்பயிற்சி செய்யவோ பெற்றோர் அனுமதிப்பதில்லை. கூன் விழும் அபாயத்தை கருத்தில் கொண்டு, அதை தவிர்ப்பதற்கான பயிற்சிகளை, அவர்களது மேற்பார்வையில் குழந்தைகள் செய்ய வேண்டும். இவ்வாறு, சதீஷ்குமார் தெரிவித்தார்.

## இந்திய செய்திகள்

# தமிழ் வளர்ச்சித்துறைக்கான தமிழக அரசின் விருதுகள் அறிவிப்பு



தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேறறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தி வழங்கிவருகிறது.


தமிழுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடும் தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில், தமிழக அரசு பல்வேறு விருதுகளை வழங்கி சிறப்பித்து வருகிறது. அந்த வகையில், 2021ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித்துறை விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதுகுறித்து தமிழக அரசு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேறறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தி வழங்கிவருகிறது.

பேரறிஞர் அண்ணா விருது – நாஞ்சில் சம்பத், மகாகவி பாரதியார் விருது – பாரதி கிருஷ்ணகுமார், பாவேந்தர் பாரதிதாசன் விருது – புலவர் செந்தலை கௌதமன், சொல்லின் செல்வர் விருது – சூர்யா சேவியர், சிங்காரவேலர் விருது – கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம், தமிழ்த்தாய் விருது – மலேஷியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது – முனைவர் இரா. சஞ்சீவிராயர், சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது – உயிர்மை திங்களிதழ், தேவநேயப்பாவாணர் விருது – முனைவர் கு.அரசேந்திரன், உமறுப்புலவர் விருது – நா.மம்மது, கி.ஆ.பெ. விருது – முனைவர் ம. இராசேந்திரன், கம்பர் விருது – பாரதி பாஸ்கர், ஜி.யு.போப் விருது – ஏ.எஸ். பன்னீர்செல்வம், மறைமலையடிகள் விருது – சுகி.சிவம், இளங்கோவடிகள் விருது – நெல்லைக் கண்ணன், அயோத்திதாசப் பண்டிதர் விருது – ஞான. அலாய்சியஸ்.

மேலும், இந்தாண்டு முதல் விருது பெறும் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகை ஒரு இலட்சத்தில் இருந்து 2 இலட்சமாக ( இந்திய ரூபா) உயர்த்தி வழங்கப்படவுள்ளது. கூடுதலாக, ஒரு சவரன் தங்கப்பதக்கம், விருதுக்கான தகுதியுரை ஆகியன வழங்கி பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப் பெறுவார்கள்.

# புலிகளின் எண்ணிக்கை இரட்டிப்பானதால் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு விருது



சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளதற்காக சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள வனங்களில் வாழும் புலிகளைக் காப்பதற்காகவும், அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், டபிள்யூ.டபிள்யூ.எவ். இந்திய நிறுவனம் உள்ளிட்ட சர்வதேச அளவிலான அமைப்புகள், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்த அமைப்பினர் நடத்திய ஆய்வில், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில், கடந்த 2010ஆம் ஆண்டு இருந்த புலிகளின் எண்ணிக்கை, தற்போது இரு மடங்காக அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது. இதையடுத்து, சத்தி புலிகள் காப்பகத்திற்கு டிஎக்ஸ் 2(TX2) விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து டபிள்யூ.டபிள்யூ.எவ். இந்திய நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:


நீலகிரி உயிர்க்கோள நிலப்பரப்பைச் சேர்ந்த சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில், உலகிலேயே மிக அதிகமான எண்ணிக்கையில் புலிகள் வாழ்கின்றன. கடந்த 2013ஆம் ஆண்டு புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட சத்யமங்கலத்தில் தற்போது 80 புலிகள் உள்ளன. முதுமலை புலிகள் காப்பகம், பந்திப்பூர் மற்றும் பி.ஆர்ஹில்ஸ் புலிகள் காப்பகங்களுடன் இந்த காப்பகம் இணைந்துள்ளது. இதனால் புலிகளால் எளிதாக இரை தேடவும் புதிய எல்லைக்குள் பிரவேசிக்கவும் முடிகிறது.

இதேபோல், புலிகளின் எண்ணிக்கையை இருமடங்கு அதிகரித்ததற்காக நேபாளத்தில் உள்ள பார்டியா தேசியப் பூங்காவும், இந்த ஆண்டுக்கான டிஎக்ஸ் 2 விருதினைப் பெற்றுள்ளது. இந்தியா மற்றும் நேபாளத்திற்கும் இடையே புலிகள் தடையின்றி, எல்லைகளைத் தாண்டிச் சென்று வர இந்த பூங்கா வழிவகுக்கிறது.

உலக அளவில் 2010ஆம் ஆண்டு புலிகளின் எண்ணிக்கை 3,200 ஆக சரிந்திருந்த நிலையில், 2016இல் நடத்தப்பட்ட இறுதி ஆய்வில் புலிகளின் எண்ணிக்கை 3,900ஆக உயர்ந்துள்ளது தெரியவந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புட்டபர்த்தியை தலைமையிடமாகக் கொண்டு ஸ்ரீசத்யசாய் மாவட்டம்

## ஆந்திரா அரசு அறிவிப்பு




ஆந்திராவில் தற்போது வரையில் 13 மாவட்டங்கள் உள்ளன. இம்மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குடியரசு தினத்தையொட்டி ஆந்திரா அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், மாநிலத்தில் மொத்தம் உள்ள 13 மாவட்டங்களை 26 மாவட்டங்களாக பிரித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவற்றில் புட்டபர்த்தியில் பிறந்த பகவான் சாய் பாபா நினைவாக அனந்தபூர் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு புட்டபர்த்தியை தலைமையிடமாக கொண்டு ஸ்ரீ சத்ய சாய் என்ற பெயரில் புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இவை தவிர, பாலாஜி, அன்னமய்யா, என்.டி.ஆர்., வை.எஸ்.ஆர்., போன்றவர்களின் பெயர்களிலும், 26 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

மேலும் ஸ்ரீசத்ய சாய் மாவட்டம் 7,771 கி.மீ., பரப்பளவுடன், 17.22 இலட்சம் மக்கள் தொகை உடையதாக இருக்கும் எனவும் மாவட்டத்தில் ஆறு சட்டசபை தொகுதிகளும், புட்டபர்த்தி உட்பட மூன்று வருவாய் கோட்டங்களும் இருக்கும் என அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஸ்ரீ சத்ய சாய் மத்திய அறக்கட்டளை வரவேற்பு**

புட்டபர்த்தி பகவான் ஸ்ரீசத்ய சாய்பாபா பெயரில் ஆந்திராவில் புதிய மாவட்டம் அமைக்கும் முயற்சிக்கு, ஸ்ரீசத்ய சாய் மத்திய அறக்கட்டளை வரவேற்பு தெரிவித்துள்ளது. அவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் அவரது 97ஆவது பிறந்தநாளைக் கொண்டாட தொடங்கும் நிலையில், மாநில அரசின் அறிவிப்பு அனைத்து சாய் பக்தர்களுக்கும் பெரும் மகிழ்ச்சியளிப்பதாக அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

## இலங்கை இலக்கிய...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அக்காலத்தில் வடபகுதியை உலுக்கிய தீண்டாமைக் கொடுமைக்கெதிரான போராட் டங்கள் குறித்த செய்திகளை உற்றுக் கவனித்து வந்தேன்.

சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதல்களில் நடைபெற்ற போராட்டங்களும் அக்கட்சி ஏடான 'தொழிலாளி' பத்திரிகை தந்த போதமும் என்னை அந்தப் பாதைக்கு இட்டுச்சென்றது.

அந்தப் பாதையில் இயங்கிய போராளியும் எழுத்தாளருமான கே.டானியலுடன் தொடர்பு களை ஏற்படுத்திக்கொண்டேன். கம்யூனிஸ்ட் கட்சி பிளவடைந்தபின் டொமினிக் ஜீவா சோவியத் யூனியன் சார்பான நிலையை எடுத்திருந்தார்.

இந்தப் பிளவு இரு பிரிவினரிடையேயும் மோதல் போக்கையும் ஏற்படுத்தியிருந்தது. சோவிய சார்புக் கட்சியினர் அரசுடன் இணைந்தும் செயற்பட்டனர்.

அவ்வேளை, இந்தியாவில் அரசின் தேடுதலுக்குள்ளான நிலையில் தலைமறைவாக இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த கம்யூனிஸ்ட் தலைவரும் இலக்கியவாதியுமான ஜீவானந்தம் தொடர்பு கார்த்திகேசன் மூலம் இந்த வாலிபர்களுக்கு ஏற்பட்டது.

ஜீவானந்தத்தின் அரசியல், இலக்கியக் கருத்துகள், அறிவுரைகள் இந்த வாலிபர்களை மார்க்ஸிச வழியில் சிந்திக்கத் தூண்டியது. நிறைய மார்க்ஸிச நூல்களின் மொழிபெயர்ப்புகள் - இலக்கிய நூல்களைத் தேடிக் கற்றார்கள். ஜீவாவின் பற்றுதலினால் டொமினிக் தன் பெயரையே டொமினிக் ஜீவா என மாற்றிக்கொண்டார்.

இலங்கை சாகித்திய மண்டலத்தின் சிறுகதைக்கான பரிசு முதன்முதலில் ஜீவாவுக்குக் கிடைத்தது. முற்போக்குச் சக்திகளுக்கு எதிரான சாதிவெறி கொண்டவர்களின் நச்சரிப்புக்கும் ஜீவா ஆளானார்.

1980ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி. ஒரு நாள் பூபாலசிங்கம் புத்தகசாலையில் என்னைக் கண்ட ஜீவா, "தம்பி.. சென்னை சி.எல்.எஸ். இம்முறை நடத்தும் இலக்கியக் கருத்தரங்கில் டானியலின் பஞ்சமர் நாவலை விசேடமாக எடுத்திருக்கிறார்கள். 'வறுமையும் சாதியமும்' என்ற பொருளில் இரண்டு நாள் கருத்தரங்கு. டானியலைக் கட்டாயம் வரச்சொல்லும்" - என்றார்.

"டானியலுக்கு அழைப்பு வந்ததைப் பார்த்தேன். அவருக்குப்போக விருப்பமில்லை" - என்றேன்.

"அப்படிச் சொல்லக்கூடாது.. அவங்க பெரிதாக் கவனமெடுத்து மரியாதை கொடுத்து அழைக்கிறாங்க.. சிவத்தம்பி வருகிறார். நானும் போகிறேன். கட்டாயம் டானியலை அழைத்துவாரும்" என வலியுறுத்திக் கூறினார்.

பின்னர் எமது வலியுறுத்தலின்பேரில் மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயலாளர் என்ற வகையில் நானும் உடன்வர வேண்டுமென அவர்களுக்கு அறிவித்து எனக்கும் அழைப்பிதழ் பெறப்பட்டது.

இருவரும் அக்கருத்தரங்கில் கலந்துகொண் டோம். பஞ்சமர் (முதல் பாகம்) நாவல் பேராசிரியர் சிவத்தம்பி தலைமையில் விசேட அமர்வில் அறிமுகஞ்செய்யப்பட்டது. அது குறித்தும் டானியலின் சமூகப் பணி குறித்தும் நான் உரையாற்றினேன்.

அரசியல் முரண்பாடு காரணமாக டானியலும் ஜீவாவும் பேசிக்கொள்ளாவிட்டாலும் இருவரும் நேருக்குநேர் பார்க்கையில் ஒரு புன்னகையுடன் கடந்துசெல்வர்.

கட்சிப் பிளவுக்கு முன்னர் அவர்கள் நெருங்கிய தோழர்கள்..! அவர்கள் மனதுக்குள் அந்தத் தோழமை உணர்வு என்றும் இருந்தது.

'மல்லிகை' அட்டையில் டானியலின் படம் பிரசுரித்துக் கௌரவிக்கவெனப் பலமுறை முயற்சித்தும் டானியல் அதற்குச் சம்மதிக்க வில்லை.

இருவருடனும் நெருங்கிப் பழகும் 'முரசொலி' ஆசிரியர் எஸ்.திருச்செல்வம் மற்றும் தெணியான் ஆகியோரின் முயற்சியில் டானியலின் படம் மல்லிகையில் பிரசுரமானது. பேராசிரியர் சிவத்தம்பி அவர் குறித்து எழுதியிருந்தார்.

ஜீவாவின் பிறந்தநாளின்போது திருச்செல்வம் டானியலை ஜீவாவின் அலுவலகத்திற்கும் அழைத்துச்சென்றார். நான் அவ்வேளை பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்தேன்.

1986 மார்ச் மாதம் டானியல் தஞ்சாவூரில் காலமாகியதை அறிந்ததும் ஜீவா மிகவும் வருந்தினார். மல்லிகையில் தன் வருத்தத்தைப் பதிவுசெய்தார்.

தீண்டாமைக் கொடுமைக்கெதிராக தீவிரமாகப் போராடிய போராளி டானியல் எனப் பதிவுசெய்தார்.

யாழ்ப்பாணத்தில் டானியலுக்குச் சிலை வைக்கவேண்டுமென எழுதினார். கூட்டங்களில் வலியுறுத்திப் பேசினார்.

டானியல் குறித்து பலர் எழுதிய நினைவுக் குறிப்புகளை மல்லிகையில் பிரசுரித்தார்.

டானியலின் இறுதி நிகழ்வுகள் முடிந்து நான் யாழ்ப்பாணம் திரும்பியபின் என்னைக் கண்ட ஜீவா, "அங்கு என்ன நடந்தது.. அந்த மனிசன் உடம்பைக் கவனிக்காமல் சனத்தின்ர வேலை பார்த்துக்கொண்டு திரிஞ்சு இப்படியாப் போச்சு" என வேதனைப்பட்டார்.

அவரது தோழமையை - நட்பை என்னால் உணர முடிந்தது.

பின்னர் ஒருமுறை ஜீவா தமிழகம் சென்றபோது தஞ்சாவூர் சென்று தன் தோழர் டானியலின் கல்லறையையும் பார்த்து அஞ்சலி செலுத்தி வந்துள்ளார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் முரண்பாடுகள் இருப்பினும், அவர் எம்மைப் புதுச் சிவப்புக் கூட்டம் என எழுதிய போதிலும் இடதுசாரிகள் - இலக்கியவாதிகள் என்ற வகையில் நாம் தோழமையுடன் பழக நேர்ந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முன்னர் டானியலுக்குக் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கப்படவேண்டுமெனக் குரல் எழுந்தபோது அதிகாரமட்டத்தில் அது அமுக்கப்பட்டது.

பின்னர் ஜீவாவுக்குக் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கப்படவேண்டுமெனக் குரல் எழுந்தபோது, அதனைச் சகிக்க முடியாத சாதி ஆணவப் பெருந்தகைகள் அதனை விடுத்து முதுகலைமாணிப் பட்டம் வழங்கப்படுமென அறிவித்தனர்.

ஜீவா அதனை நிராகரித்தார். இதனையொட்டி பல சர்ச்சைகள் எழுந்தன. படைப்பாளிகள் பலரும் யாழ். பல்கலைக்கழகத்தின் சின்னத்தனத்தைக் கண்டித்தனர்.

நான் புலம்பெயர்ந்து பிரான்ஸ் வந்த பின்னர் சில கட்டுரைகள் மல்லிகையில் எழுதியுள்ளேன்.

2011 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின்போது அவரைக்கண்டு நிறைய பேசமுடிந்தது. பின்னர் இறுதியாக 2014ஆம் ஆண்டு மல்லிகை அலுவலகத்திற்குச் சென்று அவரைச் சந்தித்து நிறையவே பேசினேன்.

ஈழத்து இலக்கியத்துறைச் சாதனையாளர்களில் ஒருவர் டொமினிக் ஜீவா.

47 வருட காலம் இலக்கியச் சஞ்சிகையை நடத்தி, காத்திரமான ஆண்டு மலர்களையும் வெளியிட்ட சாதனையாளர்.

இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைத் தமிழ்ச் சிறுகதைத் தொகுதிக்காக முதலில் பெற்றவர்;

சாகித்திய ரத்னா தேசத்தின் கண் கனடா இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது ஆகியவற்றைப் பெற்றவர். சோவியத் யூனியனுக்கு அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர்.

அவரது கதைகள் ஆங்கிலம், சிங்களம், ரஷ்ய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

படைப்பாளிகளின் படங்களை மல்லிகை அட்டையில் பிரசுரித்துக் கௌரவித்தவர். அவர்களைப் பற்றிய குறிப்புகளை நான்கு நூல்களாகவும் வெளியிட்டவர்.

மல்லிகைப் பந்தல் பதிப்பகம் மூலம் பல படைப்பாளிகளின் நூல்களை வெளியிட்டவர்.

புதிய எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களது படைப்புகளை மல்லிகையில் பிரசுரித்து ஊக்கமளித்தவர்.

தமிழகத்தில் சரஸ்வதி (1958), தாமரை (1968) ஆகிய இலக்கிய சஞ்சிகைகளின் அட்டையில் இடம்பெற்றுக் கௌரவிக்கப்பட்டவர். இலங்கையில் இலக்கியத்துறை மூலம் இன ஒருமைப்பாட்டை வளர்த்தெடுக்க ஜீவா பெரும் முயற்சி செய்துள்ளார்.

முஸ்லிம் சமூக எழுத்தாளர்கள் பலருக்கு மல்லிகை களமாக அமைந்தது. சிறந்த சிங்களப் படைப்பாளிகளது படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மல்லிகையில் வெளியாகியுள்ளன. மல்லிகை அட்டையிலும் அவர்களது படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பெருமைகளுக்குரிய சாதனையாளர் டொமினிக் ஜீவா இலங்கை இலக்கிய வரலாற்றில் அழியா இடம்பெற்றுள்ளார். அவர் நாமம் என்றும் நீடித்து நிலைக்கும்..!

# இலங்கை அணியுடன் இணைந்த மாலிங்க

இலங்கை கிரிக்கெட் அணியானது அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவுக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நிலையில் குறித்த சுற்றுப்பயணத்திற்கான இலங்கை தேசிய அணியின் பந்துவீச்சு வியூக பயிற்றுவிப்பாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து, இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழுவால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. தனது நியமனம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மாலிங்க, "எம்மிடம் பல திறமையான இளம் பந்துவீச்சாளர்கள் உள்ளனர். எனது அனுபவத்தையும் அறிவையும் அவர்களுடன் பகிர்ந்துகொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களின் மேம்பாட்டுக்கு நான் உதவுவேன்" என தெரிவித்துள்ளார்.





# ரோஹித் தலைமையில் விளையாடவுள்ள கோஹ்லி

மேற்கிந்திய தீவுகள் அணி இந்தியாவுக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் சர்வதேச தொடரில் பங்கேற்கும் இந்திய அணியின் குழாம் வெளியாகியுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் மேற்கிந்திய தீவுகள் அணி தலா 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடுகிறது. இதில் ஒருநாள் சர்வதேச தொடருக்கான இந்திய குழாம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் நேற்று முன்தினம் அறிவிக்கப் பட்டது.

அதன்படி, ரோஹித் சர்மா தலைமையில் களமிறங்கும் இந்திய அணியில் உப தலைவர் கே.எல்.ராகுல், ருதுராஜ் கெய்க்வாட், ஷிகர் தவான், விராட் கோஹ்லி, சூர்யகுமார் யாதவ், ஸ்ரேயாஸ் ஐயர், தீபக் ஹூடா, ரிஷப் பந்த், சாஹர், ஷர்துல் தாக்கூர், குல்தீப் யாதவ், வொஷிங்டன் சுந்தர் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

ஜெஸ்பிரிட் பும்ரா, மொஹமட் ஷமிக்கு இந்த தொடரில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது. கே.எல்.ராகுல் இரண்டாவது ஒருநாள் போட்டியிலிருந்து விளையாடுவார் என்றும், உபாதை காரணமாக ஜடேஜா இந்தத் தொடரில் பங்கேற்க மாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# டுபாயில் விளையாடவுள்ள ஜோகோவிச்



உலகின் முதல்நிலை வீரரான நோவக் ஜோகோவிச், அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஏ.டி.பி. டுபாய் டென்னிஸ் போட்டியில் விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளார். அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டதால், 21ஆவது கிராண்ட்ஸ் லாம் பட்டத்தை அவர் தவறவிட்டார்.

அவர் மெல்போர்னில் இருந்து டுபாய் வழியாக பெல்கிரேடுக்கு பறந்து சென்றதிலிருந்து ஜோகோவிச்சின் அடுத்த நகர்வுகள் தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில், அவர் 9 முறை வெற்றிபெற்ற போட்டி மெல்போர்னில் நடந்து வருகிறது. அவருக்கு தடுப்பூசி போடப்படாத நிலை இருந்தபோதிலும் அவுஸ்திரேலியாவில் விளையாடுவதற்கு அவருக்கு முதலில் விலக்களிக்கப்பட்டது.

ஆனால், அவுஸ்திரேலிய அதிகாரிகள் அவரது விசாவை இரத்துச்செய்து இறுதியில் பெடரல் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டது. ரஃபேல் நடால், ரோஜர் ஃபெடரர் ஆகியோருடன் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் என்ற சாதனையை பகிர்ந்துள்ளார் ஜோகோவிச்.



# "கோஹ்லி 3–4 வருடங்களுக்கு அரசரை போன்று இருப்பார்"

## முன்னாள் பயிற்றுவிப்பாளர் சாஸ்திரி

விராட் கோஹ்லி டெஸ்ட் அணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகியதிலிருந்து அவர் குறித்து சர்ச்சைகளும், விமர்சனங்களும் தொடர்ந்து எழுகின்றன. விராட் கோஹ்லி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாததற்கு அவருக்கு இந்திய அணி நிர்வாகம் தரும் அழுத்தமே காரணம் என பலரும் கூறி வருகின்றனர்.

இந்நிலையில், விராட் கோஹ்லி 3-4 வருடங்களுக்கு அரசரை போன்று இருப்பார் என முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ரவி சாஸ்திரி தெரிவிக்கையில், "விராட் கோஹ்லிக்கு 33 வயதுதான் ஆகிறது. அவர் இன்னும் 5 வருடங்கள் நல்ல கிரிக்கெட் வீரராக வலம் வரலாம். அவர் வெளியேவரும் பிரச்சினைகளை மறந்துவிட்டு, அமைதியுடன் துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும். அவர் போட்டிகளிலிருந்து 2-3 மாதங்கள் ஓய்வு எடுத்து வந்தால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என நான் கருதுகிறேன்."

"விராட் கோஹ்லி 3-4 வருடங்களுக்கு அரசரை போன்று இருப்பார். அவரால் அணிக்கு வெற்றியை தேடித் தர முடியும். அதுபோன்ற கோஹ்லியைதான் நான் காண விரும்புகிறேன். டோனி விட்டுச்சென்ற இடத்தை நிரப்புவது எளிதல்ல. கோஹ்லி விரைவாக தலைமைப் பொறுப்பை எடுத்துகொண்டார். டெஸ்ட் அணியையும் சிறப்பாக வழிநடத்தினார்" எனத் தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# வெற்றியை தனதாக்கிய சாய்ந்தமருது இலவன் ஹீரோஸ்!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சஹ்ரியன் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டை முன்னிட்டு சாய்ந்தமருது இலவன் ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்துடனான சிநேகபூர்வ 18 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடினபந்து கிரிக்கெட் போட்டி சாய்ந்தமருது பொது மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நாபீர் பௌண்டேஷன் தவிசாளரான பொறியியலாளர் உதுமான்கண்டு நாபிரின் அனுசரணையில் நடைபெற்ற 'நாபீர் கிண்ண' சிநேகபூர்வ கடினபந்து கிரிக்கட்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சாய்ந்தமருது இலவன் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 17.1 பந்துவீச்சு ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களை பெற்றது.

106 எனும் வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது சஹ்ரியன் விளையாட்டுக் கழகம் 18 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டும் பெற்று 10 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது. 37 ஓட்டங்களை பெற்ற இலவன் ஹீரோஸ் விளையாட்டுக் கழக வீரர் உவைத் ஆட்டநாயகனாக தெரிவானார்.







இந்நிகழ்வில் நாபீர் பௌண்டேஷன் தவிசாளரான பொறியியலாளர் உதுமான்கண்டு நாபிரின் புதல்வர் என்.எம்.நஸீம், ஈ.சீ.எம். நிறுவனத்தின் இணைப்பாளர் ஏ.எல். ஹியாஸ், அம்பாறை மாவட்ட கிரிக்கெட் சம்மேளனத்தின் சுற்றுப்போட்டிகளுக்கான தவிசாளர் ஏ.எம்.நளீம், சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் டீ.கே.ஜலீல், சஹ்ரியன் விளையாட்டுக் கழக முகாமையாளர் கலாநிதி றியாத் ஏ மஜீத், பொருளாளர் நாஸர், சாய்ந்தமருதின் ஏனைய விளையாட்டுக் கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது 33 வருடகாலமாக பிரதேச கிரிக்கெட் வளர்ச்சிக்கும், சஹ்ரியன் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து இப்போட்டியுடன் ஓய்வை அறிவித்த சஹ்ரியன் விளையாட்டுக் கழகத்தின் மூத்த நிர்வாகி எம்.எச்.ஏ. ஹாலீதின் சேவைநலனை பாராட்டி வீரர்கள் மற்றும் அதிதிகளினால் கௌரவிப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





***ஜி.பி.சி. ஒலிபரப்பு மையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான மொஹமட் ரியாஸின் அனுசரணையுடன் கல்ஹின்னையில் ஏற்பாடுசெய்யப்பட்ட அணிக்கு ஒன்பது பேர் கொண்ட கிரிக்கெட் போட்டி அண்மையில் கல்ஹின்னை பொது மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களையும், பரிசில்களையும் ரியாஸின் தந்தை அல்ஹாஜ் அலிம்டீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வழங்கினார்.***

*(படம் - மாத்தளை நிருபர்)*

# பீஜிங் ஒலிம்பிக்கை புறக்கணிக்கும் தாய்வான் அதிகாரிகள்

*(அக்ஷரா)*

சீனாவுடனான விரோதம் காரணமாக பீஜிங் 2022 குளிர்கால ஒலிம்பிக்கின் தொடக்க விழாவையும், நிறைவு விழாவையும் புறக்கணிக்கப்போவதாக தாய்வான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பீஜிங்கின் ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் நடைபெறும் இரண்டு விழாக்களையும் புறக்கணித்து, நாட்டின் விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதில் மட்டுமே கவனம் செலுத்த தாய்வான் அரசாங்க பணிக்குழு முடிவு செய்துள்ளதாக தைபே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

தாய்வான் தூதுக்குழுவின் பிரசன்னம் தாய்வானுக்கு எதிராக இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள பீஜிங்கை அனுமதிக்கும் என்ற கவலையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பீஜிங்கில் பெப்ரவரி 4 மற்றும் 20ஆம் திகதிகளில் முறையே தொடக்க மற்றும் நிறைவு விழாக்களில் தாய்வானிய தொண்டர்களை வீடியோக்களில் ஒருங்கிணைப்பதற்கு ஆதரவான செய்திகளைக் காட்ட விரும்புவதாகக் கூறுகிறார்.



கடந்த செப்டம்பரில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், அண்டை தீவுடனான "மறு ஒருங்கிணைப்பு நிறை வேற்றப்பட வேண்டும்" என்று வலியுறுத்தியதன் மூலம், தாய்வான் தனது பிராந்தியத்தின் ஒரு பகுதியாக இருப்பதாக சீனா கூறுகிறது. தாய்வான் சுயமாக ஆளப்பட்டு, சீனாவின் அதிகரித்துவரும் படையெடுப்பு அச்சுறுத்தலுக்கு மத்தியில் அதன் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக மீண்டும் மீண்டும் சபதம் செய்கிறது.




சீனாவிலிருந்து 39 போர் விமானங்கள் ஜனவரி 23 அன்று தீவின் வான் பாதுகாப்பு மண்டலத்திற்குள் நுழைந்ததாக தாய்வானுக்கான பாதுகாப்பு அமைச்சு கூறியது. பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படுவதை எதிர்த்து தைபேயிலுள்ள சீன வங்கிக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று கூடியது.

தாய்வானின் இறையாண்மை குறித்த சர்ச்சை என்ன வென்றால், 1984ஆம் ஆண்டில் பெயரில் ஒரு சமரசம் ஏற்பட்ட பிறகு, ஒலிம்பிக்கில் சீன தைபேயாக நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஏன் போட்டியிடுகிறார்கள்.

சீனக் குடியரசாக (தாய்வான்) போட்டியிடும் நாடு, 1972 இல் சப்போரோவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக்கில் அறிமுகமானது. லேக் ப்ளாசிட் 1980 தவிர, ஒவ்வொரு குளிர்கால விளையாட்டுகளிலும் அவர்கள் போட்டியிட்டனர். ஆனால், இதுவரை பதக்கம் வென்றதில்லை. பியோங்சாங் 2018இல், சீன தைபே நான்கு விளையாட்டு வீரர்களை இரண்டு விளையாட்டுகளில் போட்டியிட அனுப்பியது. தொடக்க விழாவில் லுகர் லியன் தே-ஆன் கொடியை ஏந்தினார்.

பீஜிங் 2022இல், நாட்டை மூன்று பெண்கள் மற்றும் ஒரு ஆண் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தாய்வான் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. சீனாவின் ஆட்சேபனைகளைத் தொடர்ந்து தாய்வான் 1984ஆம் ஆண்டுமுதல் 'சீன தைபே' என்ற பெயரில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

பீஜிங் 2022 இல் மனித உரிமைகள் பற்றிய சீனாவின் பதிவு ஒரு பெரிய சர்ச்சையை நிரூபித்துள்ளது. சின்ஜியாங்கில் உய்குர் மஸ்லின்களை நடத்துவது ஓர் இனப்படுகொலைக்கு சமம் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். கட்டாய உய்குர் தொழிலாளர்களைப் பயன்படுத்துதல், ஆயிரக்கணக்கானவர்களை தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்தல், கட்டாய கருத்தடை செய்தல், வெகுஜன கண்காணிப்பு திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் சின்ஜியாங் பிராந்தியத்தில் உய்குர் பாரம்பரியத்தை வேண்டுமென்றே அழித்தல் போன்ற குற்றச்சாட்டுகளை சீனா எதிர்கொண்டுள்ளது.

பீஜிங் தனக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுக்கிறது. முகாம்கள் இஸ்லாமிய தீவிரவாதம் மற்றும் பிரிவினைவாதத்தை முத்திரை குத்துவதற்கான பயிற்சி மையங்கள் என்று கூறுகிறது. திபெத் மற்றும் ஹொங்கொங்கில் சீனாவின் நடவடிக்கைகள் ஆய்வுக்குட்பட்டுள்ளன. மேலும் அந்த நாடு ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் ஹோசிங் உரிமைகளை பறிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு வழிவகுத்தது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7